காதேறுகலைநூல்வல்லகவுரிமாயூரப்பார்ப்பார்
மாதேவனுருவமன்றிமற்றையோருருவம்பாரார்
போதேயுமயனமாலாதிப்புலவரையழைத்தவாவின்
மீதேயுமூட்டவல்லார்மறுகணிவிளம்பப்போமோ. (௧௧௦)

அண்ணலார்திருமுகங்களைந்தினுந்தோற்றமுற்றார்
கண்ணலார்பொதுச்சிறப்பாமறைகளாகமங்கள்கற்றார்
நண்ணலார்பராத்தத்தோடான்மார்த்தமுநயந்தர்ச்சிக்கு
மெண்ணலாராதிசைவரிருக்கையும்பல்லவாங்கண். (௧௧௧)

எழுமதநிறுவியோரைந்திரண்டுகுற்றமுங்கடிந்து
தழுவியையிருவனப்புமுத்திசாற்றியவெண்ணான்கு
மொழுகுகாண்டிகைவிருத்தியுறுமுறைமாணாக்கர்க்குச்
செழுமையினியல்கேட்பிப்போர்கழகமுஞ்சிறக்குமாங்கு. (௧௧௨)

கவியொருகவியினோடுங்கமகனோர்கமகனோடு
மவிதலில்சிறப்பின்வாதியமைந்தவோர்வாதியோடும்
புவிபுகழ்வாக்கிமேன்மேற்பொலியுமோர்வாக்கியோடுஞ்
செவியுறவமர்ந்தளாவுங்கழகமுஞ்சிறக்குமாங்கண். (௧௧௩)

அடைந்தவர்தரந்தெரிந்தாகமம்புகல்சமயமாதி
யிடைந்தமுத்தீக்கையாற்றி * நான்கினும்விராவவுய்த்துத்
தடைந்தவைம்பாசராக்கித்தனிமுதற்கலப்பாயின்பங்
குடைந்தவராகச்செய்யுங்குரவர்வாழிடமும்பல்ல. (௧௧௪)

---

* துன்னியோவரியசெந்தீயட்டிலை - செந்தீயோவரிய அட்டிலைத்துன்னி எனக்கொண்டுகூட்டாகப்பொருள்கொள்க.

* நான்கு சரியைமுதலிய நான்கு.

போதமுற்பலவுந்தேர்ந்துபொருந்துகாமாதிநீத்து
வாதமற்றொன்றுபத்தாமாண்பினிற்சிறந்தோராகி
நாதமிற்றிதுவென்றோராநலத்தசோதியிற்கலப்புற்
றேதமற்றிருக்குஞ்சைவமுனிவர்வாழிடமும்பல்ல. (௧௧௫)

தளவரும்பனையபொம்மறழல்வெதுப்புற்றபொன்னிற்
பிளவரும்பருப்புநெய்பால்பெருக்குகுய்க்கருனையாதி
கொளவருங்கருப்புக்கட்டிகொழுஞ்சுவைக்கனிகண்மற்று
முளவரும்விரும்பச்செய்யுமுலப்பில்சத்திரங்களெங்கும். (௧௧௬)

இனனெழுமுனநீர்தெவ்வியினநிறைநிறையவாக்கி
மனனமர்வேரும்பூவுமணமலிதுடியுமிட்டுக்
கனவிலிகுசத்தின்சாறுங்கலந்துமோரளாவிவாக்குஞ்
சினமகல்சுவைநீர்ப்பந்தர்தெருத்தொறுந்திகழ்வபல்ல. (௧௧௭)

மருவலர்துளபத்தண்டார்மணிமறுமார்பத்தண்ண
றிருமகளொடுவாழ்கினறசெய்யமந்திரமுமன்று
றொருவருங்கூற்றிற்றோன்றியுலகுபகாரமாய
வெருவருமும்பர்பல்லோர்மேவுமந்திரமும்பல்ல. (௧௧௮)

சிறுவிதிமகஞ்சிதைத்தசேவகன்வடுகப்புத்தே
டெறுதொழின்மகிடற்காய்ந்தாடிரிதலைச்சூலிசாத்த
னறுமுகப்பெருமானைங்கையமலன்மற்றிவர்முன்னோர்வாழ்
மறுவறுசெம்பொற்கோயில்வயங்குவவளவிலாத. (௧௧௯)

மண்மகண்மார்பினுக்குமாயூரமொருமதாணி
கண்ணுமற்றதிற்பதித்தகதிர்மணியுரைத்தயாவுந்
தண்ணுறுசிறப்பார்நாப்பணுயகமணியேபோலும்
விண்ணவாபுகழநாளும்வள்ளலார்விளங்குங்கோயில். (௧௨0)

முனிதரப்பட்டமுனனைமூவகைமதிலும்பின்னுட்
கனிதரத்தவமியற்றிக்கரிசிலாவுருவம்பெற்றுத்
தனிதரவமர்பிரானைத்தம்முட்கொண்டிருப்பபோலும்
பனிதரவெழுகொண்மூவும்பகீர்ந்துயர்ந்தசோக்கள். (௧௨௧)

மதில்வலியடக்கநாளும்வல்லவனனவையன்
றாதிபகவெழுந்துவானவருநடுக்குறப்போமிந்த
மதிலடக்கெனச்சேவேவமற்றதுபலவாயேறி
மதியுறப்படுத்தழுத்தன்மானுமேவிடபக்கூட்டம். (௨௨௨)

பாலனென்றெண்ணுமெண்ணம்பரிகரித்திடச்சூர்முன்வேண்
மேலுயர்ந்தனனெனறியாரும்வியப்பர்யாம்வியக்கமாட்டேஞ்
சால்புயர்மாயூரப்பொற்றளியெதிர்க்கோபுரத்துக்
கோலமாருயர்ச்சிமேலாலுயர்ந்ததுமுண்டுகொல்லோ. (௧௨௩)

படிமுழுவதும்விற்றீலும்பற்றுதமணியிழைத்த
படிபலவுடையதாகிப்பல்லவாவிகளுமிந்தப்
படியுறவேண்டுமென்னப்பங்கயமாதிபூத்துப்
படிபுவர்க்கின்பஞ்செய்துபொலிதரும்பரவுதீர்த்தம். (௧௨௪)

பேறுவந்தருளுமுக்கட்பிரான்றிருமுன்னர்நின்று
நீறுவந்தவர்சார்தோறுநிறைபலமளிப்பதன்றி
வேறுபூவிலைகொடாருமிசையேற்றினோவானைத்
தேறுவந்தளவளாவுமினத்தொடுமினஞ்சாராதோ. (௧௨௫)

பொன்மலைதவஞ்செய்தீன்றபுதல்விசெய்பூசைகாணப்
பன்மலையோடும்வந்துபார்த்தினிதமர்தன்மான
நன்மலைவில்லியஞ்சனாயகிசோமாக்கந்த
றொன்மலைமற்றைவானோர்விமானங்களிலகாநிற்கும் (௧௨௬)

தம்மகனுழைந்தார்தண்டதரன்வாயினுழைதன்மாற்றி
விம்மனோயனைத்துந்தீர்த்துமிளிர்சிவலோகவாயில்
செம்மையினுழையச்செய்யுந்திகழ்திருவாயில்பல்ல
வம்மணியொளியானத்தமண்டத்தின்புறததாக்கும். (௧௨௭)

மயிலூருக்கொண்டவம்மைபூசனைமரபிற்கொண்ட
கயில்வளைக்குழையினார்க்குநிழல்செயுங்கவின்றதேமா
வெயில்படுதிறமுண்டேனும்விரிஞ்சன்மாலாதியார்க்குங்
குயின்மொழியரமாதர்க்குநிழல்செயுங்குணம்பூண்டன்றே. (௧௨௮)

பழிதபுமுமையாள்பூசைபண்ணியபெருமானுக்கு
வழிதருமதுக்கொண்டாட்டிவண்டளிர்நறும்பூச்சூட்டிக்
கொழிசுவைக்கனிகளூட்டிப்பூசிக்குங்குணத்தான்றே
கழிதருவுள்ளுந்தான்மாமரமெனக்கவின்றதம்மா. (௧௨௯)

நிருத்தமண்டபம்விழாக்கணிரம்புமண்டபநன்காய
வருத்தமண்டபநானோர்நூறாயிரமென்றுசொல்லப்
பெருத்தமண்டபஞ்சார்ந்தார்க்குப்பிரிவதற்கருமைசெய்யுந
திருத்தமண்டபமற்றியாவுஞ்செப்புதற்கடங்குங்கொல்லோ. (௧௩0)

மன்னுதேவாரத்தோதைவயங்குவாசகத்தினோதை
பன்னுவனமறையினோதைபரவுமாகமத்தினோதை
துன்னுபல்புராணத்தோதையரவெனத்தொகுவாரோதை
யின்னுமற்றுள்ளவோதைதுயின்றிடாவெந்தஞான்றும். (௧௩௧)

அடைந்தவிண்ணோர்மண்ணோர்நன்கடியுறைவைத்துத்தாழ
மிடைந்தபன்மணிகளோராபால்விளங்குபொற்கட்டியோர்பா
லிடைந்தசெம்பொற்காசோர்பாலிலங்குபட்டாதியோர்பாற்
கடைந்தசெப்பனையகொங்கைக்காரணிகோயில்வாயில். (௧௩௨)

வளையெழுமொலியும்பீலிவயிரொழுமொலியுஞ்சுட்ட
முளையெழுமொலியும்பற்பன்முரசெழுமொலியும்வீணைக்
கிளையெழுமொலியுந்தாளங்கிளர்ந்தெழுமொலியுமற்றைத்
துளையெழுமொலியுமாழித்தொக்கெழுமொலியைமாற்றும். (௧௩௩)

காலையிற்றரிசிப்பாருங்கைகுவித்துருகியுச்சி
வேலையிற்றரிசிப்பாரும்வீழ்ந்துவீழ்ந்திறைஞ்சிச்சூழ்ந்து
மாலையிற்றரிசிப்பாருநெருங்கலால்வானநாட்டுச்
சோலையிற்பயில்வார்காப்பார்தொழும்பதங்கிடைக்குங்காறும். (௧௩௪)

இன்னபொற்கோயிலுள்ளாலேழுலகொருங்குபெற்ற
வன்னமென்னடையாரெங்களஞ்சனுயகியாரோடும்
பொன்னமர்சடிலமோலிப்பொருவிலாவள்ளற்புத்தே
டன்னமர்கருணைபொங்கத்தானமர்ந்தரசுசெய்யும். (௧௩௫)

திருநகரப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம். ௨௧௦.

நைமிசப்படலம்.

வரையினமிக்கவெள்வயிரமுஞ்சேயொளிமணியும்
விரைமிகுத்தசந்தகில்களும்வேழவெண்மருப்புந்
திரையெடுத்தெறிசாநவித்திருநதியுநீசிக்
கரையணித்துளதோர்கிளர்நைமிசக்கானம். (௧)

நாட்டவல்லதுநற்றவம்பவஞ்சவாதனையை
வீட்டவல்லதுவெள்ளியங்கிரிப்பெருமானைக்
காட்டவல்லதுகழலரிதாம்பரபோக
மூட்டவல்லதுற்றோர்க்குயர்நைமிசக்கானம். (௨)

தரையினுள்ளதேயாயினுந்தரைக்குமேலுலகர்
விரையவந்துவந்தவியுணவிழைந்துகையேற்றுக்
கரையிலாமகிழ்பூத்திடவீகையிற்கதித்துப்
புரையிலாதுயர்ந்தோங்கிடுநைமிசப்புறவம். (௩)

எண்ணிலார்முயலினுங்கவரப்படாதிகலி
யெண்ணிலார்குழீஇயினும்வருத்தப்படாதென்று
மெண்ணிலாரும்வாழ்த்துதலன்றிவைதலெய்தாதா
லெண்ணிலார்நிறைந்தினிதமர்நைமிசாரணியம். (௪)

மற்பகப்பொலிவாகுவோரிந்திரனமேருட்
கற்பகத்தினைச்சீழ்கினுங்கடையெனவெறுத்துப
பொற்பகத்துயர்பொருள்கொளத்தன்னசம்புருமா
றற்பகத்துறவமைப்பதுநைமிசவடவி. (௫)

அரனருச்சனைசெயத்தளிரரட்டிடலோட்டப்
பரவுதிங்கனிமகவிறசொண்குடம்பரிக்க
விரவுபைந்தழைமுனிவருக்குதவிவேளலர்கசா
வரவுதீர்ந்துவப்பெய்துமத்தவச்சரின்மாக்கள் (௬)

அரியசாக்கியர்தீயவேடமுநலைந்தமைவுந்
தெரியவுற்றெனக்கண்டகம்புறமெலாஞ்செறிய
பிரியமிக்கவின்றீஞ்சுளையசமெலாம்பெற்ற
பரியவண்கனிபற்பலசுமப்பனபலவே. (௭)

பூவினுந்தழையினுமிகப்பொலிந்ததல்லாது
மாவினும்பலவினுநனிகனியும்வன்கனிகண்
மேவினுங்கருவாற்கொலையுறுதலின்வெள்கிக்
காவினுந்தலைசாய்த்துநிற்பனபலகதலி. (௮)

அளவிலந்தணர்குழாங்குழாமாகியெவ்விடத்து
மளவின்மாதவமாற்றுமிவ்வடவியினமர்த
லளவின்மேன்மைமேன்மேலுமுண்டாமெனவறைந்தாங்
களவில்கண்மணியீன்றிடுதருக்களுமடர்வ. (௯)

எடுத்தநம்பிறப்பின்பயனிதனினுமென்னென்
றடுத்தவுண்மையையறிந்தனபோன்றுகாமாதி
விடுத்தயோகியர்கொளவவருறையுண்முன்மேன்மேல்
வடுத்தவிர்ந்தகண்மணிக்கனிசிந்துவவாவல். (௧௦)

இனியவல்லனவெனுமுழுவத்துமுள்ளியைத்தி
கனியபல்லவுமுழுமரஞ்சிறிதலாற்கதிர்வித்
தனியமாக்கலிற்கொண்டபேரியையுமென்றறிஞ
ருனியவெங்கணுமோங்குபுநிற்பமுந்திரிகை. (௧௧)

நனிநிறைந்திடுங்கனிசிலவுறவி * முன்னனுகப்
புனிதநீங்கிடுங்கனிசிலவுகினவைபோலா
தினியவூறிலபுனிதமென்றுறுவர்கையேற்பக்
கனிகள்பற்பலவுகுப்பனசெறிதருகபித்தம். (௧௨)

மாறுகொண்டவன்விடத்தைமுன்கனியெனவயக்கி
* யூறுதீர்ப்பவற்கூட்டிமுன்னொழிந்ததுபோலோ
வேறுசங்கையினொருட்டலாமுய்யலாமென்னச்
சாறுபாய்கனிபலகொடுநிற்பனசம்பு. (௧௩)

பெயர்விலாயிரமுதற்பலகண்கள்பெற்றுரு
ளுயர்வுமூன்றுகண்ணேயுடைப்பரம்பொருளொன்றே
யயர்வின்மற்றதுபோற்பலகட்டுருவுள்ளு
மயர்வின்மூன்றுகணிதேயுயர்பெனத்தெங்குவயங்கும். (௧௪)

நாடுமாயவனின்றெனநிற்பபுன்னாகங்
கூடுபொன்னெனத்தழுவுவசோதியொண்கொடிபா
ணீடுமுத்தசேயெனச்சொலநிற்பபூஞ்செருந்தி
மாடுசேரிளஞ்சிறுனெனப்பொலிவவண்காஞ்சி. (௧௫)

சுற்றுமுற்றும்வெண்மலர்செறிபல்பிடாத்துன்ன
லுற்றுநிற்பமற்றதனடிப்பூத்தவொண்கொன்றை
மற்றுமேலுயர்ந்தோங்குபுநின்றிடல்வானம்
பற்றுவெள்ளியங்கயிலைமேற்பரனிலைகாட்டும். (௧௬)

அன்னகொன்றைமேலச்சம் * ஈனரும்பொன்றுதங்கல்
சொன்னதம்பிரான்முடியிசைப்பிறையெனத்துலங்கு
மன்னமற்றதன்கிளைகரும்பூவையையவருட
னன்னரப்பிரான்மான்மகட்டழுவுதனாட்டும். (௧௭)

மின்னுபேருயிர்குறுமையுநெடுமையுமெய்கள்
பன்னுவன்மையுமென்மையுமிடைமையும்பட்டாங்
குன்னுமிவ்வகையைந்துமாவயினுறத்தொகலாற்
றுன்னுமவ்வநெடுங்கணக்கேயெனத்தோன்றும். (௧௮)

* உறவி - எறும்பு - ஊறுதீர்ப்பவன் - விநாயகக்கடவுள்.
* அச்சம் - அகத்திமரம். * மான்மகள் - மோகினி.

கோடுகொண்டனபல்லகால்கொண்டனபல்ல
கூடுபுள்ளிகள்கொண்டனபல்லமேல்விலங்கும்
பாடுகொண்டனபல்லகீழ்விலங்குவபல்ல
நீடுமின்னதானெடுங்கணக்கெனற்கையமின்றே. ௧௯)

செறிதருந்தளிரிலையரும்பலர்சிறுபிஞ்சு
நறியகாய்கனியாதியநாளுநீங்காது
நெறியசெங்கதிர்வெப்பமுட்புகாதுறநிலைத்த
குறியவவ்வனப்பெருமையார்கூறுதற்கமைவார. (௨0)

வேறு.

பொருவரும்வளஞ்சாலிந்தளைமிசம்பொருநதிவாழ்வா
ரொருவருநீறுபூசியுவந்துகண்மணிகள்பூண்டு
வெருவருமெழுத்தைந்தெண்ணிவிடையவறபூசைசெயவார்
மருவருமுயர்மெய்ஞ்ஞானவாயமையார்தூயமையாரோ. (௨௧)

இன்புவந்துற்றபோதுமெதிர்மறையுற்றபோது
முன்புடனுறுமூழென்றேவிருப்புருர்முனிவுஞ்செய்யா
ரன்புசிற்றுயிரகத்துமமைத்துவாழ்கின்றநீரார்
வன்புமும்மலமுநீங்கத்திருவருண்முழுகுமாண்பார். (௨௨)

விழியொருபத்துநூற்றுவிண்ணவர்வேந்தன்வாழ்வும்
பொழிமதுககமலவாழ்க்கைப்புண்ணியப்பிரமன்வாழ்வுங்
கழிசுடர்ப்பரிதிவட்குங்கவுத்துவமார்பன்வாழ்வும்
பழிதபுத்தறியாக்கான்றபதமெனக்கண்டகண்ணுர். (௨௩)

இன்னுமறறவர்பிறப்புமிறப்புமெத்தனையோகண்டார்
துன்னுமைம்பூதமெல்லாந்தொலைந்தனகழிகாலத்தும
பன்னுதமுடம்பின்கண்ணேருரோமமுங்கழிதல்பாரா
ருன்னுசெம்பொன்னுமோடுமொப்பெனமதித்தமேலோர். (௨௪)

காரணநோக்கலன்றிக்காரியநோக்குகில்லார்
பூரணப்பொருளின்கண்ணேயெறறைக்குமுறக்கம்பூணுர்
வாரணவியபொற்கொங்கைமங்கையர்வலியவநது
தாரணத்தழுவினுலுந்தாயெனக்கருதுநீரார். (௨௫)

பரசிவபுராணங்கேட்டல்பரசிவமணமேமோத்தல்
பரசிவநாமம்பேசல்பரசிவக்குறியேகாண்டல்
பரசிவபணியேசெய்தல்பரசிவவுருவேயெண்ணல்
பரசிவபத்திவாய்ந்தார்ப்பரவுதலிவையேயுள்ளார். (௨௬)

அத்திரிதநீசிகார்த்தியாயனன்சுனப்புச்சன்ன
கத்தியன்சுகன்மாதேவன்கண்ணுவன்கருக்கன்காமச்
சத்துருவாம்பிருங்கிசதானந்தன்புகழ்மார்க்கண்ட
னுத்தமப்பிருகுபோதாயனனுயராபத்தம்பன். (௨௭)

இலகிதன்சுதீக்கணன்சாண்டில்லியன்பரத்துவாச
புலீகன்சந்திரசூடன்குச்சகன்புலத்தியன்சாபாலி
வலகவுதமன்சனற்குமாரனுரதன்சீர்ச்சம்பு
நலமிகுமரணிமாண்டவியனரபத்தநல்லோன். (௨௮)

காசிபன்விச்சுவாமித்திரன்கலைச்சிருங்கன்கற்கி
கூசுமாண்டன்மாதேசனகுசுருபார்க்கவன்சனந்த
னுசுவிலாயனன்றுலப்பியன்றிருதன்சங்கன்
பேசகமருடணன்பராசரன்பெருஞ்சநாதன். (௨௯)

திருதனசநகன்வசிட்டன்பிரசண்டன்றுருவாசனுங்கேழ்
தருபருப்பதன்சிலாதன்றத்தாத்திரேயன்சத்தி
வருதவுமியன்சுமந்துபப்புருவாமதேவ
னொருசரபங்கன்வச்சனுபமனியன்சீர்க்கண்டு. (௩0)

அரிதகன்சவுநகன்றேவலன்சுநனசிதன்விந்து
பெரியபாணினிவிபண்டகன்காலவன்பெருஞ்சீ
ருரியவங்கிரசுசாதாதபன்சுநச்சேபனுண்மை
தெரிசருச்சரனிரைப்பியன்வசுதிரணவிந்து. (௩௧)

முற்கலன்கபிலனட்டவக்கிரன்காணன்முத்தி
யொற்கமில்சுநகன்சீர்த்தியுரோமசன்பகவன்மேன்மை
வற்கமார்தருகவுண்டின்னியன்பயிலவன்மருத
விற்கனுலுக்கிரஞ்சேர்வீரியன்றூமபானன். (௩௨)

செந்தமிழியலுரைத்ததிரணதூமாக்கினிப்பே
ரந்தணனனையான்றந்தையாஞ்சமதக்கினிப்பேர்
முந்தனெல்லாரும்பேசுஞ்சவுபரிமொழியுமற்றைப்
பந்தமின்முனிவர்யாரும்பரவுமோரிடத்திற்கூடி. (௩௩)

திருவளருமையோர்பாகன்றிருவுளமுவக்கும்வண்ண
மொருமகமுஞற்றலுற்றுருற்றவக்காலையயன்
மருமலர்ப்பாதங்காண்டன்மறிபெரும்பிறவிமாய்க்குங்
கருவியக்கருவியாதாற்பெறலெனக்கருத்துட்சூழ்ந்தார். (௩௪)

யாகமோவிரதமோநல்லெச்சமோகொடையோமெய்யோ
யோகமோஞானமோமற்றுண்மையிற்றுறவுபூணும்
பாகமோவெதுவென்றுய்ந்துபகர்துணிபுறுரோயாகி
மோகமோவியவுட்சூதமுனிவனுற்றெளிவாமென்றார். (௩௫)

புரிமகங்காணப்போதும்புண்ணியமுனிவரோடு
முரியமாணுக்கர்சூழவொள்ளொளிநீறுசெய்ய
வரியகண்மணிவிளங்கவைந்தெழுத்துளத்துமன்னத்
துரிசறுத்துயர்ந்தோனுமச்சூதமாமுனிவன்வந்தான். (௩௬)

நினைந்தவப்பொழுதேயிந்தநேயமாமுனிவந்தானென்
றினைந்தசிந்தையினனந்தமெழுதரவுவந்தெழுந்து
துனைந்தனரெதிரேசென்றுதொழுதனராடிப்பாடிப்
புனைந்தவஞ்சலியராகிப்போற்றினரழைத்துவந்தார். (௩௭)

ஆயவிட்டரத் * திருத்தியருக்கியமாதிகொண்டு
மேயநற்பூசையாற்றிவிதியுளிப்பணிந்தெழுந்து
நேயமிக்கிருபானின்றூர்நின்றவர்தமையிருக்கென்
றேயவவ்வார்த்தைகேளாவிருந்தனரியம்பலுற்றார். (௩௮)

---

* விட்டரம் - தருப்பைப்புல்லாலமைத்த வாசனம்.

இரைவிடமுண்டபெம்மான்றிருவுளமகிழும்வண்ண
முறைமகமொன்றுசெயயவுபக்கிரமித்தோமயாங்கள்
விரையவப்பொழுதேசென்றிம்வீட்டிடுங்கருவியந்த
நரைவிடைப்பாகனபாதங்காண்டலென்றுளநயந்தோம். (௩௯)

அன்னதுபெறுமுபாயம்யாதெனவாராய்ந்தாராய்ந்
தின்னதென்றுளததுத்தேரோமெக்கலைகளுந்தேர்நின்றுற
சொன்னதுதெளிவாமெனண்ணியிருந்தனஞ்சூதமேலோய்
பன்னதுபோதுநீயும்பண்புறுகாட்சிதந்தாய். (௪0)

பெரியவர்காட்சிவீண்போகாதுறப்பிறங்காநிறகு
மரியநற்பயன்றந்தன்றியென்றுலகுரைக்குமாற்றாற்
றெரியநீவகுத்துச்சொற்றிசிவபெருமானேயென்ன
விரியயாவுந்தெரிந்தமேலவவென்றிறுத்தார். (௪௧)

முனிவரருரைத்தவார்த்தைமுனிவறச்செவியினேற்றுங்
கனிதருபெருமானபாதங்காண்டலுங்கேதுவொன்று
வினிதவனமருந்தானத்தியையமுச்சிறப்பும்வாயந்த
புனிதமாத்தலத்திற்குற்றமான்மியம்புகலக்கேட்டல். (௪௨)

அதுதனியாராய்ந்துள்ளத்தமைத்திடல்பிறர்க்குக்கூறல்
கதுமெனவனையதானங்கலந்துறவசித்தலந்த
முதுதலத்தமர்நீராடன்முக்கணன்சேவைசெய்தன்
மதுமலரிறைத்திறைஞ்சிவழிபடலாதியாக. (௪௩)

இவையுள்யாதானுமொன்றுலெய்தலாமென்றுகூற
நவையறுமுனிவருண்மையீதெனநயந்துகொண்டு
செவையுறுமுனிவமுன்றுஞ்சிறந்தவோர்தானமாய
தவையகமகிழுமாறென்றுய்ந்தறைந்தருடியின்னும். (௪௪)

மற்றதுசெய்மைக்கண்ணும்வதிந்துளத்தெண்ணினாலும்
பற்றமைதரச்சொற்றாலுந்திசைநோக்கிப்பரவினாலு
மற்றமிலிம்மையம்மைமுத்தியுமளித்தல்வேண்டுங்
கற்றவர்பலருமுண்மையேயெனக்களைதல்வேண்டும். (௪௫)

கொடியபாதகங்கள்கோடாகோடியுள்ளனவேயேனு
நெடியமற்றதன்பேர்சொல்லீநினைக்குமுனீங்கல்வேண்டு
முடியநாமுரைப்பதென்னேயெண்ணியவனைத்துமுற்றும்
படியதாமொருநற்றானமாராய்ந்துபகர்கவென்றார். (௪௬)

என்றலுமுவகைபொங்கநெடும்பொழுதுள்ளத்தெண்ணிக்
கன்றலிலருளாற்றெய்வக்கவுரிமாயூரங்கண்டு
பொன்றலில்புகழ்சாலீதற்புதத்தலமெனவியந்தீ
தொன்றலதுயர்ந்ததானமுலகில்யாதெனத்துணிந்து (௪௭)

மருளடியவர்க்குமாற்றுமகத்தியவாரணத்தை
யருள்பொழிவள்ளலாரையஞ்சுமுகியையுள்ளத்
தெருடருகுமரவேளைச்சிந்தையிற்றியானஞ்செய்து
பொருள்பெறுவியாதன்றானும்போற்றுபுநவில்வான்சூதன். (௪௮)

அந்தணீர்கேண்மினீவிர்கேட்டவாறுயுங்காலைச்
சிந்தனைக்கரியதொன்றுசிவபிரானருளாற்றேர்ந்தே
னிந்தநற்றலச்சீர்முன்னமொருவற்குமிசைத்ததின்று
கந்தவத்தலநன்னுமங்கவுரிமாயூரமாமால். (௪௯)

நினையுமுனெனக்கானந்தநிகழுவதென்னசொல்வேன்
புனையுநாங்களுக்குண்டாதல்புகன்றிடற்பாலதேயோ
வனையமெய்த்தலத்தையொப்பதகிலலோகத்துமில்லை
வினையின்மெய்த்தவமிலாதார்மேவரிதெந்தஞான்றும். (௫௦)

மின்னியவத்தலச்சீர்யானேயோசொல்லவல்லேன்
முன்னியபுகழ்சால்வாதராயணமுனிவன்வைத்த
பன்னியவருள்சேர்சுத்தாற்றெருகுத்தியான்பகர்தலுற்றே
னந்நியமத்தீர்கேண்மினெனநவின்றருள்வான்சூதன். (௫௧)

நைமிசப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௩௪௧.

திலீபன்முத்தியடைந்தபடலம்.

சூரியன்மரபிற்றோன்றித்தொன்னகரயோத்தியாளுஞ்
சீரியன்கவிகையொன்றாற்றிருந்துலகெலாநிழற்று
மாரியன்மருவாரொன்னும்யானைகட்கரியேறாய
வீரியன்றிலீபனென்னுமெய்ப்புகழ்நாமவேந்தன். (௧)

பாரின்மன்னியவெல்லாரும்பல்லாண்டுபல்லாண்டென்னச்
சீரின்மன்னியகுணத்தான்செறிந்தெழுகீர்த்தியாய
தாரின்மன்னியபுயத்தான்றண்டவப்பெருமான்றட்கு
நாரின்மன்னியமனத்தானிலங்காக்குநாளில். (௨)

வரியளிக்குலம்பண்பாடமதுமடையுடைத்துப்பாயப்
புரிமுறுக்குடையுஞ்செந்தாமரைமலர்ப்பொகுட்டுமேலான்
றெரிதரவுயிர்த்தமைந்தன்செழுந்தவவசிட்டனென்பான்
விரிபலமுனிவரோம்பவேத்தவைமேயினானால். (௩)

வரமுனிவரவுகண்டுமன்னவனெதிர்சென்றேத்திப்
பரவினனழைத்துவந்துபைம்பொனாதனத்தின்வைத்து
விரவுமுள்ளன்பிற்பூசைவிதியுளிமுடித்துப்போற்றிக்
கரதலங்குவித்திருந்துகாதலினிதுவினாவும். (௪)

தளைகிழிதரவிளைந்துசையநின்றிழிந்துபோந்து
திளையுவர்க்கடல்கலக்குங்காவிரியிருதீரத்து
முளைசிறந்துள்ளதாயதலமெலாமொருங்குகேட்கப்
புளையறுமொரோவொன்றாகப்புகன்றனையாலவற்றுள். (௫)

மேதகுதிருவானைக்காமிளிர்சிராமலைவாறொரு
மோதருமன்பிலாலந்துறைதவத்துறையுற்றார்தங்
கோதறுமொருநெய்த்தானங்குலவுமையாறுவாசப்
போதவனிறைஞ்சுங்கண்டியூர்பொலிபூந்துருத்தி. (௬)

வலஞ்சுழிகும்பகோணமேரகம்வளர்பட்டீச
நலந்தரவொளிர்சித்தீசநாளுமோங்குறுநாகேச
மிலங்கியபலரும்போற்றுமிடைமருதுயர்கோமுத்தி
விலங்கலிறுருத்திமற்றும்விசேடமென்றுரைத்தாயைய. (௭)

இவையுளுமதிவிசேடமெனமறையுரைப்பதாகி
நவையறுமுத்தியெண்ணநல்கிடுந்திறத்ததாகிச்
செவையுறுதலமுன்மூன்றுந்திகழ்தரச்சிறந்ததாகி
யவைமதித்திடுவதாயதறைதியென்றடியேன்கேட்டேன். (௮)

அனையமாதலமாயூரமதற்கிணையில்லையென்று
நினையவேயிம்மையம்மைமுத்தியுநிரப்புமென்றும்
புனையவாமத்தலத்துப்பொலியுமான்மியமனைத்துந்
துனையநீதொகுத்துச்சொற்றுய்தோன்றியதில்லைதிருத்தி. (௯)

திருத்தியுண்டாகுமாறத்தெய்வமாயூரமேன்மை
விருத்தியிற்புகலவேண்டுங்கேட்டிடவேண்டுமென்னு
மருத்தியென்னுளத்தையீருமாதலாலதன்சீர்முற்றும்
பொருத்தியல்லாதுநீயும்போவதுகூடாதென்ன. (௧௦)

முனிவனுமுவகைபூத்துமுழுமுதலவன்புராணங்
கனிவொடும்யாவன்கேட்குங்காதலனவனேயெல்லாப்
புனிதவானவர்க்குமேலானறமெலாம்பொலியச்செய்தோன்
றனியமர்சிவன்முத்தனெனமறைசாற்றுமன்றே. (௧௧)

சிறந்தமாயூரமென்னுந்திருத்தலமுவமையில்ல
துறந்தமறறதன்சீர்கேட்குநீயுமோருவமையில்லா
யறந்தவாதுரைக்கும்யானுமனையனேயென்றுகூறி
வறந்தகாமாதிமேலோன்வகுத்திடலுற்றான்பின்னர். (௧௨)

பரவியசிவபுராணம்பத்தனுட்பிரமாண்டத்து
முரமிகுமாக்கினேயபுராணத்துமுறையாநிற்கும்
வரமிகுமாயூரத்தின்மான்மியமதனைச்சொல்கேன்
றிரமிகுமன்பிற்கேட்டிதிலீபவென்றெடுத்துப்பேசி. (௧௩)

அணிமலர்மிசையோன்பூசித்தாருள்பெற்றவாறுந்
திணிமனத்தக்கனென்பான்றீமகஞ்செய்தவாறுந்
துணிவலிமிக்கவீரனம்மகந்தொலைத்தவாறுந்
தணிவருமருட்பிராட்டிமயிலுருச்சமைந்தவாறும். (௧௪)

திருமயிலாயவம்மைசிவார்ச்சனைசெய்தவாறு
மொருவருங்கருணையன்னாள்பண்டுருவுற்றவாறு
மருவுகாதலினன்மீட்டுமோகமவிதிவழாமற்
பொருவருஞ்சிவபிரானைப்பூசனைபுரிந்தவாறும். (௧௫)

விழியொருமூன்றேனுயவிண்ணவர்பெருமானுள்ளங்
கழிமகிழ்பூத்துவெள்ளைவிடையின்மேற்காட்சிநல்கிப்
பழிதபுமூமையாண்மாயோன்முதலியபலரும்வேட்ட
வொழிவறநல்கிவள்ளலெனும்பெயருற்றவாறும். (௧௬)

மன்னியதலத்தின்சீரும்வளமலிதீர்த்தச்சீரு
முன்னியவாக்கினையமுரைத்தருள்பலவுமற்று
முன்னியவிரித்துச்சொற்றான்மொழிந்தனயாவுங்கேட்டு
மின்னியவேற்றிலீபவேந்தனுண்மகிழ்ச்சிபூத்து. (௧௭)

குரவனும்வசிட்டமேலோன்குருமலரடியிற்றாழ்ந்து
வரநிலாம்விடையும்பெற்றுவயநகுநாற்படையினோடு
முரவுகூரமைச்சரோனைப்புரோகிதரொருங்குசூழப்
பரவுநாளெழுந்தானென்பபகைத்தவர்க்கேறுபோல்வான். (௧௮)

வான்றவழ்குன்றுங்கானுமருதநீர்நதியுமற்றுந்
தேன்றவழலங்கன்மார்பன்பிற்படச்செவ்வேவந்து
மீன்றவழ்கங்கையாடிமிளிர்காசிபுகுந்துவிணமீன
கோன்றவழ்சடிலமோலிவிச்சுவநாதற்கூடி. (௧௯)

பனிமலரிறைத்துப்போற்றிப்பரவியாங்காங்குமேய
முனிவருதலங்களெல்லாமுறைமுறைசென்றுபோற்றிக்
குனிசிலைநுதற்பிராட்டிகுளிர்மலர்ப்பதமும்போற்றிக்
கனிபடுசோலைசூழ்ந்தபருப்பதங்கண்டுபோற்றி. (௨0)

மாதாரநிறத்தானுதிவானவர்வணங்கிப்போற்றுங்
கேதாரமேயபெம்மான்கிளர்மலர்ச்சரணந்சாழ்ந்து
தீதாரவுடன்படாதுசெறிந்தவர்க்கருளியென்று
மாதாரமாயினானைக்காளத்தியணைந்துபோற்றி. (௨௧)

வேதமாநீழல்வைகுமேகம்பவிமலனார்தம்
பாதமாமலர்கள்போற்றிப்பராய்த்தொழுதாலங்காடு
நாதமாமுரசந்துஞ்சாநகுபுகழ்க்கழுக்குன்றம்பே
ரோதமாரொற்றிமற்றுமுள்ளனவனைத்துந்தாழ்ந்து. (௨௨)

அடிமுடியிருவர்தேடவழலுருவாகின்ற
நெடியவண்சிலம்புமேன்மைநிறைமுதுகுன்றுமிந்தப்
படிபுகழ்ந்தெடுத்துப்பேசும்பாதிரிப்புலியூரும்பொன்
முடிபுனைவேந்தர்வேந்தன்முந்துசென்றிறைஞ்சிப்போற்றி. (௨௩)

வளவர்நன்னாடுபுக்குமன்றிடைநின்றுநாளு
மளவிலானந்தமேவவாடுமம்மானைத்தாழ்ந்து
துளவினான்போற்றுங்காழிதூயபுள்ளிருக்குவேளூர்
களவிலாப்பிறவும்போற்றிக்காவிரிநதிவந்துற்றான். (௨௪)

இரவிவண்டலாத்துவைகுமேற்றநாளந்நாளாகப்
பரவுமாமுனிவராதிப்பலரொடுமநீராடி
விரவிவெண்ணீறுமெய்யின்விளங்குறப்புனைந்துபாயும்
புரவிமாத்தானைவேந்தன்போற்றுபஃறானநல்கி. (௨௫)

பலரொடுங்கோயிலெய்திப்பைந்தமிழ்மணக்குஞ்செவ்வா
யலர்புகழ்முனிபூசித்தவண்ணலங்களிற்றையேத்தி
நலர்தொழுவள்ளலார்முனண்ணியுள்ளுருகித்தாழா
வலர்பலகொண்டுபூசித்தானந்தத்தழுந்தினானே. (௨௬)

நலம்பொலிகருணையஞ்சனையகிகோயில்வாயிற்
புலம்பொலிதரவவ்வாறேபுகுந்துநேர்கண்டுபோற்றி
வலம்பொலிமற்றுமுள்ளவரினவர்களையுந்தாழ்ந்து
நிலம்பொலிதானைவேந்தனெடிதுறவசித்தானாங்கு. (உ௭)

சினகரப்பணிகள்செய்துந்திருவிழாநடாத்தல்செய்து
மனகருள்வள்ளலார்க்குமஞ்சனையகியாருக்கும்
கனமணிப்பொற்பூணுடைகணிப்பிலகொடுத்துமெண்ணில்
பனவருக்கமுதமீத்துமடியனைப்பரவித்தாழ்ந்தும். (உ௮)

பன்னெடுங்காலமிந்தப்படிவசித்திருந்துபின்று
ணன்னெடும்புகழ்த்திலீபனையகன்விடைபெற்றேகித்
தொன்னெடுநகரஞ்சார்ந்துசுதமின்றிப்பனனுள்வாழ்ந்து
பின்னெடுஞ்சிவலோகத்துப்பிறங்கிவாழ்ந்திருந்தானன்றே. (உ௯)

அனையவன்வசிட்டன்பாங்கரன்புறக்கேட்டவாறே
வினைதபுமாயூரத்தின்மேன்மைகண்முறையிற்சொல்வே
னினைதருமிதுவேயிம்மைமுதன்மூன்றுசிறப்புமென்று
புனைபுகழ்முனிவர்கேட்பப்புகலுவான்சூதமேலோன். (௩௦)

திலீபன முத்தியடைந்தபடலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௩௭௧

பிரமன் சிருட்டிபெறுபடலம்.

தளைதருமுந்தொருகற்பத்தாதியில்
விளைதருதண்டுழாயவிண்டுவுந்தியில்
வளைதருசிலைப்பிரானருளினமாட்சியா
லுளைதருமறையவனொருவன்றோன்றினான். (௧)

தோன்றியமறையவன்றளபத்தானடி
யூன்றியவன்புளமுருகித்தாழ்ந்தெழூஉ
யான்றியங்காவகையியற்றிடும்பணி
மூன்றியல்சிரத்தினையமொழிதியென்றலும். (௨)

தனையகேணினக்குமென்றனக்குநாயகன்
முனையசூற்படைக்கரமுக்கண்மூர்த்தியா
லனையனைநோக்கிநீயருந்தவம்புரிந
தினையலாகாப்படைப்பியற்றுசென்றனன். (௩)

என்றலும்விளைந்தெழுந்திணைடமேலவன்
பொன்றலும்பிறத்தலுமிலாதபுண்ணிய
னென்றல்செய்ருள்விளைந்தாறுதிநல்கிடுங்
கன்றலிலாத்தலங்கருத்தினய்ந்தனன். (௪)

அதுபொழுதுடலில்வாக்கந்தணுக்கு
முதுகடற்பச்சிமமொழிதருந்திசைக்
கதுமெனயோசனைகடந்துமேலுதிற்
புதுமலர்தருபுனற்பொன்னித்தென்கரை. (௫)

அமைவொடும்விளங்குமோரடவியாயிடைச்
சமைதரவிருந்துநீதவஞ்செய்வாயெனி
னுமையுடையான்விரைந்துதவுமென்றது
கமையுடையானதுகாதினேற்றனன். (சு)

எண்ணியகாரியமெய்தப்பெற்றெனக்
கண்ணியமறையவனகடுப்பினிற்செலா
வண்ணியவாவயினணைந்துகண்டனன்
புண்ணியந்தழைத்தெனப்பொலிவநத்தினை. (எ)

கண்டலுங்கைகுவித்திறைஞ்சிக்காவிரி
மாண்டகுபுனல்விதிவழியினாடியே
யெண்டருநீறுமெய்யிலகப்பூசுபு
தாண்டவப்பிரானடியுளந்தரித்தரோ. (அ)

காமமாதியகரிசொழியக்கட்டறுத்
தேமநாயகனருளியைதரும்படி
மாமனுவுதவியவந்ததாமமைத்
தாமமார்பினன்பெருந்தவம்புரிந்தனன். (கூ)

அறைகொடுவேனிலினழலுள்வைகியு
நிறைபெருங்கூதிருணீருண்மூழ்கியு
மிறைசிறிதாயினுமேவுறுவலக
மறையவன்பெருந்தவம்வயங்கவாற்றினன். (க0)

ஒருபதினாயிரவருடமுண்மையி
னருமறையோன்றவமிங்கனாற்றலும்
பெருவிடைமேற்சிறுபிறைக்கொழுந்தணி
திருமுடியோனெழுந்தருளல்சிந்தித்தான். (கக)

வளைதுகிர்க்கொடிவநநடுவயங்குகூன
வளையெனச்சடைநடுபிறைவயங்குற
வளைபிறையமுதுகுத்தனனதென்னவவ்
வளைவரநதித்துளியலங்கிமேவுற. (க௨)

ஆயவவ்வநம்புகவவாவித்தாவலின்
மேயகைத்தலத்தொருமான்விளங்குற
வேயமற்றதன்செலவிரிக்கமேவல்போற்
றூயவெங்கனன்மழுவொருகைத்தோன்றுற. (கூ)

உழைகுறும்பியற்றினுன்னுடம்பிற்போர்த்ததோல்
தழையுமென்போலவைசாருமாலென
விழைதரவுணர்த்தல்போன்மிளிர்தரக்கதள்
பழையதாய்த்திருவரைசூழ்ந்துயம்புற. (கச)

திருமுடிமதிகுறைதீர்ந்ததோவெனப்
பொருவிறேரளராப்படம்பைத்துப்பொள்ளென
வருகுநோக்குபுபணாமயிலென்றஞ்சுபு
திருகுதீர்ந்தொடுங்குபுமுன்னைச்சீர்பெற. (கரு)

மன்னியபவளமால்வரையினோர்புறந்
துன்னியபச்சிளங்கொடியின்றோற்றம்போன்
மின்னியவிதிபடையாதமேனிப்பாற்
பன்னியபனிவரைப்பாவைமேவுற. (௧௬)

நந்திமுற்கணங்களுநளினப்பூவனு
முந்தியங்கடவுளுமுறுமற்றோர்களு
முந்தியும்பிந்தியுமொய்த்துச்சூழ்வரத்
துந்துமிபல்கடற்றொழிப்பு *மாற்றிட. (௧௭)

அரியநற்காட்சிதந்தருளினன்பரன்
பிரியுமிக்கீதியான்பெற்றுளேனெனாக்
கரியவன்மகன்விரைந்தெழுந்துகைதொழா
வுரியபொன்மலரடியொல்லைத்தாழ்ந்தனன். (௧௮)

சூழ்ந்தனன்பன்முறைசூழ்ந்துசூழ்ந்துமண்
டாழ்ந்தனன்பன்முறைதாழ்ந்துளத்துயர்
போழ்ந்தனனினியொருபுகருமின்றியான்
வாழ்ந்தனன்வாழ்ந்தனனெனவழுத்தினான். (௧௯)

சுத்தமெய்ஞ்ஞானநன்னெறிதொடர்ந்துபோ
முத்தர்களகக்கணுமுயன்றுங்காணரு
மித்தகுகாட்சியிவ்வேழைக்காவதோ
சத்தறிவின்புருத்தலைவனேயென்றன. (௨0)

வேறு.

என்றகாலையிலிறையவன்றிருவுளமிரங்கி
யொன்றமாதவமயுதமாண்டுவந்துநீயியற்றிக்
கன்றமெய்யினைத்தாயெனத்தன்றிருக்கையா
லன்றவன்புறந்தைவராவறைவிழைவென்றான். (௨௧)

அருமையாயநீகாட்சிதந்தளித்ததன்மேலும்
பெருமையாயதொன்றுண்டுகொல்பிறைமுடிப்பெரும
வொருமையாளர்தம்முள்ளொளியாய்விளங்கொருவ
விருமையாவையும்படைக்குமாறருள்புரியென்றான் (௨௨)

என்றுரைந்துநைந்திறைஞ்சினன்வேண்டலுமிறைவ
னன்றுநின்விழைவிதுவெனிற்பிரமவிவ்வனத்து
ளொன்றுநங்குறியுள்ளதுமற்றஃதெவைக்குந
தோன்றுதோன்றமுன்றோன்றியதோற்றததம்மா. (௨௩)

இனையகோசமொப்பாகியகோசம்வேறில்லை
நினையநோக்கமெய்யானந்தநிரப்புவதிதுவே
துனையவெத்துணைக்கோடிபாதகங்களுந்தொலைக்கும்
புனையவல்லமாமறைபுகழ்வதுமிதன்புகழே. (௨௪)

அன்னதாகியவிலிங்கத்துக்கெதிர்வலத்தமைய
நன்னர்வான்றடமொன்றுகண்டப்புனலயர்ந்து
சொன்னமூர்த்தியையாட்டுபூசித்துத்துதித்து
மன்னநீவிழைந்ததுபெறுகுதியெனவகுத்து. (௨௫)

---

* தொழிப்பு - ஓசை.

அணகிவிவ்வகமின்றுதொட்டந்தணபிரம
வனமெனப்படும்பின்னருநீபெருமாண்பாற்
கனகமாமணிமாளிகைநகர்படக்காண்பாய்
முனகர்தீரந்தநகரமுநின்பெயர்முயங்கி. (௨௬)

வரமிகத்தருவள்ளலும்பொலிதரப்பிரம
புரமெனப்படுமிலிங்கமும்வாவியும்பூணும்
பரவுநின்பெயரொன்றுறைத்தருளியெம்பரம
னுரவுமிக்கபல்கணத்தொடுமொய்யெனமறைந்தான். (௨௭)

ஐயனங்ஙனமறைதலுமம்புயமலர்மேற்
செய்யனவ்வுநந்தேண்டினனொருசிறைக்கண்டான்
வையமாதியெப்புவனமும்வாழ்தரமுளைத்துப்
பொய்யவாவுளங்கடந்தொளிர்பூரணப்பொருளை. (௨௮)

கண்டுகண்கணீர்துளித்திடக்கசிந்துளமுருகி
மண்டுகாதலிற்சூழ்நதுபன்முறைதுதிவமுத்தி
விண்டுநாத்தழுதழுத்திடமெய்ம்மயிர்பொடிப்பத்
தண்டுபோலெதிர்வீழ்ந்தனன்றரைமிசைக்கிடந்தான். (௨௯)

எழுந்துதம்பிரானருளியபடியெதிர்வலப்பாற்
கொழுந்துகொண்டெழுதீவினைமுழுவதுங்குலைந்து
விழுந்துபோம்படிபுரிதடம்விரைவினுண்டாக்கி
யழுந்துமன்பினனதிற்படிநதெழுந்தனனம்மா. (௩0)

அநதநீர்முகந்தமலலிங்கத்திணையாட்டிச்
சந்தநாண்மலர்சூட்டியொண்சாலுணவூட்டிப்
பந்தமோவுமட்டாங்கபஞ்சாங்கமாப்பணிந்து
முந்தநின்றுளமுருகுபுதோத்திரமொழிவான் (௩௧)

சுருதியந்தமுந்தொடரொணுச்சுயம்பிரகாச
பரிதியாயிரங்கோடியிற்பொலிதிருப்படிவ
கருதியாவரும்பவத்துயர்கடக்குமுக்கண்ண
வெருதியாவருந்தொழவுகைப்பவநினையிரந்தேன் (௩௨)

உருவமொன்ப * தாறெட்டமைந்துருவொன்றுமில்லாய்
பருவமங்கைபான்மருவவுமயல்சற்றும்பற்றாய்
பொருவவைந்தொழிலியற்றியுந்தொழிலொன்றும்பூணாய்
திருவவானவதேவதேவேசநிற்சேர்ந்தேன். (௩௩)

பூதமுங்கரணங்களுங்கலைகளும்பொருந்தாய்
நாதமுங்கடந்தியோகியருள்ளமேயந்தாய்
வாதமும்பலபேதமாஞ்சமயர்தம்வயத்த
போதமுந்தபுபூரணனந்தநிற்புணர்ந்தேன். (௩௪)

போற்றிசங்கரபொங்கரவணிந்தருள்புராண
போற்றிமாயவன்காணொணுத்திருவடிப்புனித
போற்றியெங்கணுமொழிவறநிறைந்துறப்பொலிவோய்
போற்றியான்செழுபிரமலிங்கத்தமர்புலவ. (௩௫)

* ஆறு - சடத்துவா.

என்றுதோத்திரம்புரிபவற்கெதிரெழுந்தருளிக்
கன்றுமான்மழுக்கையிறைநனிகடைக்கணித்துத்
துன்றுபல்வகைச்சிருட்டியும்புரிகெனச்சொல்லி
யன்றுதூயவவ்விலிங்கத்துண்மறைந்தனரம்மா. (௩௬)

பெற்றநான்முகனவ்வநம்பிழையறத்திருத்திக்
கற்றவிச்சுவகன்மனாலாலயங்கண்டு
பொற்றமாநகராக்கினன்பொருநதுபல்குடியு
மற்றமில்வகைச்சிருட்டிமுன்கற்பம்போலமைத்தான். (௩௭)

வேறு.

பிரமனருந்தவம்புரிந்தபிரமவநமொருநகராய்ப்
பிரமபுரமெனுமொருபேர்பெற்றதெதிர்வலப்பானீர்
பிரமதடமெனும்பெயராற்பிறங்கியதுசுயம்புலிங்கம்
பிரமலிங்கமென்றெவரும்பேசவிளங்கியதம்மா. (௩௮)

அப்பிரமதடநறுநீராண்றவிதிப்படிமூழ்கி
யப்பிரமலிங்கத்தையன்புமிகத்தரிசித்தே
யப்பிரமபுரத்துறைவாராரோனுமப்பொழுதே
யப்பிரமன்மான்முதலோரங்கைகுவித்திடப்பொலிவார். (௩௯)

ஒன்றாகிப்பலவாகியுருவாகியருவாகித்
தொன்றாகிப்புதிதாயசுயம்புலிங்கப்பிரான்விடைபெற்
றன்றாதரவிற்பிரமனமர்தருதன்னுலகடைந்து
குன்றாதசிருட்டியெலாங்குறித்தியற்றிவாழ்ந்தனனே. (௪0)

பிரமன்சிருட்டிபெறுபடலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௪௧௧.

தக்கன்மகம்புரிபடலம்.

வரத்தமர்முனிவர்பண்ணவர்மற்றோர்வாழ்த்திடப்பொலிதருபிரம
புரத்தமர்சுயம்புலிங்கநாயகன்றன்பொலியருள்பெற்றகாரணத்தாற்
றிரத்தமர்தெய்வத்தாமரைக்கிழவன்செறிதரவியங்குவநாவு
முரத்தமர்நிலையினிற்பனபலவுமொய்யெனப்படைத்தனன்மாதோ. (௧)

உரைசெயிச்சிருட்டிக்கேதுவாயனையானுளத்துவந்தவர்களொன்பதின்மர்
புரைதவிர்பிருகுபுலத்தியன்புலகன்புண்ணியக்கிருதுபல்கலையுங்
கரைதருவலியாங்கிரசுமாதவத்தக்கன்புகழ்மரீசிமெய்ந்லத்தாற்
றரைபுகழ்தருமத்திரிநலவசிட்டன்றழையுமற்றவர்பெயரம்மா. (௨)

அனையவர்தம்முடக்கனென்றுரைக்குமளவின்மாதவத்தினன்பல்ல
தனையரைப்படைத்துப்படையினென்றேவத்தாழ்ந்தெழுநதனையரஃதேற்று
வனைதருபடைப்புச்செயமுயல்காலைமகதியாழ்முனிவரன்றோன்றி
வினையம்வல்லவர்நீர்முயல்வதென்னென்றுன்மற்றவருள்ளதுவிரித்தார். (௩)

அவனதுகேட்டுப்பந்தமேற்பந்தமாக்குவான்முயன்றுளீரழகே
புவனமேத்தெடுக்கப்பொலிதருபிரமபுரத்தினைநீவிரின்றடைந்து
கவனமால்விடையானருட்குறிபோற்றிக்காமருபெருந்தவமாற்றித்
தவலருமுத்தியடைமினென்றுரைத்தான்சார்ந்தனரனையரத்தலமே. (௪)

அத்தலப்பிரமதீர்த்தத்துமூழ்கியவிர்தருபிரமலிங்கேச
வுத்தமற்போற்றித்திருவருடரப்பெற்றொன்றியொன்றுக்கலப்புற்றார்
வித்தகத்தக்கனன்னதுதெரிந்துமிகமனம்புழுங்குபின்னும்
புத்திரர்பலரைப்படைத்துமுன்போலப்பொருத்தினனேவினனம்மா. (ரு)

அந்தமைந்தரையுமுந்தைமைந்தரைப்போலாக்கினனாரதமுனிவன்
வெந்தசிந்தையனாய்த்தக்கனென்பவனும்வீணைமாமுனிவனைநோக்கி
நந்தவண்சிருட்டிசெய்திடாவகையென்னலமகார்தமைக்கெடுத்தமையா
லுந்தநீமனைவிமகவிழந்தெங்குமுழிதருவாயெனச்சபித்தான். (சா)

தீயவெம்பாசத்தளைந்துமாழாந்துதிரிதராவண்ணமுன்மகாரை
நாயனாண்கமலச்சேவடிகலந்துநலம்பெறவிடுத்ததெண்ணாது
தீயநீயெனனைச்சபித்தனையதனாற்றேவர்கோனாயவெம்பெருமான்
பாயவெஞ்சினக்கோட்பட்டுநின்றலையும்பறிபடுவாயெனச்சபித்தான். (எ)

முனிவரன்சாபங்கொடுத்துநீங்குதலுமொய்ப்பெருந்திறலுடைத்தக்கன்
பனிமதிநுதலார்பலர்வரப்படைத்துப்பலர்கொளக்கொடுத்தனன்பின்னுங்
கனிதரவண்டபகிரண்டமனைத்துங்கலந்தபல்லுயிர்களுமீன்று
தனியொளிர்தாயைமகளெனப்பெற்றான்றவத்தின்மேற்சிறந்ததொன்றுண்டோ.

சதியெனுமகளையுலகெலாங்களிப்பத்தன்றிருமனையகம்போந்து
பொதிதருகருணைப்பெரும்பிழம்பாயபூரணன்மணந்தருளியபின்
விதிவலிதாமோவாணவமலத்தின்வீக்கமோமூவகையுயிர்க்கும்
பதியினையந்தமதியிலிமருகர்பலருளுமொருவனுமதித்தான். (கூ)

அனையவன்மதிப்போர்நதையனும்வாளாவணுகினன்சதியொடுங்கயிலை
தனையமற்றொருநாண்மதியெனுமருகன்றுடியிடையொருமகள்பாலே
நினைதருநசைவைத்ததுதெரிந்ததனைநீக்கெனக்கொளாமைதேர்ந்தவனை
யினைதரவொருநாட்கொருகலையாத்தீர்ந்திறுதியென்றுரைத்தனன்கொடியோன்.

கொடியவன்மொழியானாட்குநாளொன்றுகுறைவதுகண்டவவ்வாலோ
னெடியவன்முதலாமமரருமஞ்சிநீத்ததுங்கண்டுவான்கயிலை
யடிகளையடைந்துகாத்தியென்பதன்முனங்கைதொட்டெடுத்தனன்சடில
முடிமிசைவைத்தோர்நாமமும்பூண்டான்முருக்கினுமம்மதியே. (கக)

அதுதெரிதக்கனாகியமூர்க்கனழுக்கறுத்திருந்தனன்பின்னர்க்
கதுமெனவெழுந்துமதுமலர்ப்பொகுட்டுக்கடவுளையடைந்தடிபணிந்து
சதுமுகமகமொன்றியற்றுதல்குறித்தேன்றகுமிடம்புகலெனவனையா
விதுமுடிப்பெருமான்விரைந்தருள்புரியுமேதகுதலமுளத்தாய்ந்து. (கஉ)

குணகடன்மேல்பால்யோசனைக்கப்பாற்குலவுகாவிரிக்கரைத்தென்பா
லணவுமோர்வநமுண்டதைநகர்கண்டேனப்பெருந்தானத்தினெல்லை
புணர்தருஞ்சுற்றும்யோசனையளவுபோற்றுமவ்வெல்லையுளழலோற்
றுணர்தருதிசையினழல்வளர்த்திடுதலுத்தமமாகுமென்றுரைத்தான். (கங)

மலரவனுரைத்தமொழிசெவியேற்றுமண்ணிடைப்புலவொடுமிழிந்து
கலரணுகரியவத்தலநோக்கிக்கரிசிலதென்றுவப்புற்று
வலர்புகழ்தெய்வத்தச்சனைக்கூவிமகம்புரிசாலையொன்றீங்கே
யுலர்தலில்வண்ணம்புரியெனப்பணித்தானுய்யெனப்புரிந்தனனவனும். (கச)

திசையொருநான்குமுயர்மதிலெடுத்துத்திகழுநால்வாயிலும்போக்கி
யசைவில்கோபுரமுமமைத்ததனுள்ளாலலங்குபொற்சாலையொன்றாக்கி
வசைதவிர்குண்டமண்டலம்வேதிவயங்குமேகலையொடுமமைத்திட்
டிசைபெறுமறையோரிருப்பதற்கதவத்தியன்றவாதனங்களுமாக்கி. (௧௫)

திசைபுரப்பவருமாயவனுதித்தேவருமிருப்பதற்கிடமு
நசைகெழுமடவார்நயந்துநீராடுகென்மலரோடையுங்குளனு
மிசைபதமமைக்குமிடங்களுமறையோர்விலாப்புடைவீங்கவுண்டிடற்காம்
பசைதருமிடமுஞ்சுவணமுறபலவாம்பண்டங்களமைத்திடுமிடமும், (௧௬)

செறிதருமற்றையிடங்களுமமைத்துச்சிருக்குமுன்யாவையும்புரிந்தா
னறிதருதக்கனுளமிகமகிழ்பூத்தண்டராதியர்விளாந்தணுகக்
குறிதருதூதுசெலுத்துபுதானேகுலவயன்மால்புரத்தெய்தி
நெறிதருமகத்திறகணுகுமாறுரைத்துநீள்பெருங்கயிலையையடைந்தான். (௧௭)

வெள்ளியங்கயிலையடைந்தவனந்தியனுரைஞவேண்டாதொருதனேயே
யுள்ளியுட்புகுந்தான்கருணையங்கடலாங்கொள்ளரியாதனத்திருப்ப
வெள்ளியதரத்தான்வணங்கிலான்வணங்காவிரும்பெருங்குற்றமுமெண்ணான்
வள்ளியவெனைக்கண்டெழுந்திலானசாம்பர்வயங்குமேனியனெனவெகுண்டான்

தீயவூழடைந்ததக்கனோர்குணமில்சிவன்மகத்தவிகொளறகாது
மேயநானழையேனெனவகன்றொருதன்வேள்வியஞ்சாலையையுடைந்தான்
றூயநான்மறையுமுணர்தராப்பரமசுயம்பிரகாசனெம்பெருமா
னுயவத்தனையுமறிநதுமற்றறியான்போலுமையொடுநகைத்தமர்ந்தான. (௧௯)

படுமகச்சாலையடைந்தவக்கொடியோன்பைந்துழாய்முகில்வரக்கண்டு
நெடுமரமெனமற்றவனடிவீழ்ந்துநிலவவென்மகம்புரநதளித்தி
கடுவமர்களத்தனிவணுருவண்ணங்கழித்தனனெனவொன்றுமுரையான்
றடுவரியவன்போலிருந்தனன்கேடுசாருமேற்றடுப்பவரெவரோ. (௨௦)

ஆயவக்காலைமலரவன்மகவானழலவன்கூற்றுவனிருதி
பாயநீர்க்கிறைவன்சதாகதியளகைப்பதிபுரப்பவனலீசானன்
மேயகிம்புருடர்கின்னரரியக்கர்வித்தியாதரர்வலிக்கருடர்
தூயமெய்ச்சித்தர்சாரணரெவருந்தொக்கனரம்மகச்சாலை, (௨௧)

கதிரவன்மதியமுதற்பலகோளுங்ககனவாசிகளெனப்பட்ட
வதிர்தலின்மற்றையாவருமடைந்தாரடுதகருனுகர்நசையும்
பிதிர்விறக்கணையும்பெறுவதுகருதிப்பிறங்குவேதியரொலாம்புகுந்தா
ரெதிரில்பொன்மானத்தேறுபுதக்கனில்லுறையாவருஞ்செறிந்தார் (௨௨)

வந்தவர்பலரும்வெள்ளியங்கயிலைவளர்பெருமானுலகீன்ற
சுந்தரவுமையோடணைதராவிதமென்சொன்மினென்றொருவருக்கொருவர்
தந்தமுள்வினவிக்கொடுப்பவன்வெறுப்பிற்சாற்றுவதெவனெனவி[illegible]த்து
நந்தரங்கருமும்பார்க்கலாமென்றுநவின்றனர்பின்வரலுணரார். (௨௩)

யாவருநமதாணையிற்குழீஇயினரொன்றெக்கழுத்தங்கொடுதக்கன்
மேவருமிருத்துவிக்குகண்முதலோர்விதியுளியவரவரிருக்கும்
பூவருமிருக்கையிருந்திடப்புரிந்துபொலிமகப்பெருந்தழல்வளர்த்தான்
றூவருமயன்மாலாதியர்பலர்க்குந்தவாவினைப்பெருந்தழல்வளர்த்தான். (௨௪)

பலமுனிவரர்நற்றதீசிமுன்னோர்பங்கயன்மாயன்முற்பலர்க்குங்
குலமறைமுடிக்குமெட்டவொண்ணாதகுழகனையிகழ்ந்திதுசெய்த
னலமலவென்றுமற்றைமுதலெடுத்துநவிலவுமறுத்தனனவரு
மலமருமுளத்தார்வைதனரகன்றாரகல்பவரகல்கவென்றிருந்தான். (உரு)

கெடுந்தொழிற்றக்கன்செயலிதுவாகக்கேழ்கிளர்பெருங்கயிலாயத்
தடுந்தொழிற்றரக்கினதளைக்கசைத்தவண்ணறனிணையடியிறைஞ்சி
விடுந்தொழில்கருதாக்கருணையெம்பிராட்டிவெவ்வினைத்தந்தையாந்தக்கன்
படுந்தொழிறவிர்ப்பானவன்மகங்காணப்படர்குவனிறைவயானென்றாள். (உசு)

என்றலுநம்மையிழித்துரைதக்கனெனும்பொறியிலியுனைமதியான்
பொன்றலுந்தவிராளுங்குநீபோதல்புல்லியதாகுமென்றருள
வன்றலுமவிரோதித்தலுமில்லாயாயினுமடியனேனுங்குச்
சென்றலும்பகலுந்தெருட்டிநிற்கடிமைசெய்குவனவனையென்றெழுந்தாள். உஎ

எழுதலுந்தீங்குவருவதுதிண்ணமெனப்புகன்றெம்பிரான்விடுத்தான்
முழுதுலகீன்றபிராட்டியும்வேறுமுன்னலடுணையும்வேண்டாளாய்
வழுவறுபெரியோர்தொழுநனிபள்ளிமருவினளாங்குநின்றெழுந்து
பழுதறவடுத்தோர்க்கருடிருச்செம்பொன்பள்ளிவந்தடைந்தனண்மா உஅ

ஆங்குநின்றெழுந்துபற்பலவிரிச்சியடுத்தடுத்துறத்தடைசெயவும்
பாங்குகொளுள்ளத்தெண்ணலளாகிப்பாதசாலம்புலம்படையத்
தேங்குதன்காதற்றிறத்தினுற்கொடியோன்றீமகச்சாலையையடைந்தா
ளோங்குபேருலகத்துயிரெலாமொருங்கேயுயிர்த்தினிதோம்புமெம்பிராட்டி· ()

பிறைநுதறகருங்கட்செய்யவாய்வெண்பற்பிராட்டிநேர்வந்துநின்றிடவுங்
கறைமனத்தீயகொடியவன்கண்டுங்கண்டிலாதவனெனவிருந்தான்
மறைமுதற்கலைகள்பற்பலவுணர்ந்துமாசறத்தெளியினும்பெருமா
னிறையருள்சாலாக்கயவரைவிடுமோநிகழ்பெருங்கருமலச்செருக்கு. (௩0)

விழித்தகண்குருடாவிருக்குஞானியர்போல்வெய்யவனிருத்தலுமழுதைப்
பழித்தமென்மொழியெம்பிராட்டியுநெஞ்சம்பதைதைத்தவனினறுகாதல்
கொழித்ததன்றாய்பாலடைதனளவளுங்கொழுநனொத்திருந்தனள்பாச
மொழித்தவண்மீட்டுந்தக்கன்முன்னடைந்தாளுறச்சினந்தனளிதுசொல்வாள்.()

தீமதியன்மந்ததியற்கையோவன்றிச்செயற்கையோமறைகளாயிரமுந்
தாமதியாதவொருபரம்பொருளைத்தத்துவங்கடந்தபேரொளியை
நீமதியாமலிகழ்ந்ததென்னிகழ்ந்துநீரொழுமொக்குளிற்சிதைவாய்
தூமதியார்க்குமில்லையோவிங்குச்சூழ்ந்துளாரறிவுமிப்படியோ. (௩௨)

என்றுவான்கருணையிறைவிசொன்மாற்றமிருசெவியேறலுங்கன்று
நின்றுநீயுரைக்குமிதிற்பயனில்லைநிரம்பியதாமதகுணத்தன்
றுன்றுமாமகத்துவரத்தகானீயுந்தொடர்புடைமகளலையென்று
னன்றுமாமனத்தன்மகளலையென்றதறிதரினுண்மையேயன்றே (௩௩)

கொடியமாபாவியிம்மொழிசொலவுங்குடங்கையாலஞ்செவிபுதைத்து
நெடியவேற்கருங்கணம்பிகையந்தோநின்மலன்வார்த்தையுமிகந்து
கடியபல்விரிச்சிநிகழ்ச்சியுமெண்ணாதுகழிமடன்பாலடைந்ததற்கு
முடியவாங்கழுவாயிவன்மகளென்னுமுறையொழிப்பாமெனக்கருத. (௩௪)

ஆயவக்காலைநடுங்கியதவனியசலங்கள்வெடித்தனககுபம் *
மேயவெண்களிறுநிலைகுலைந்தழிந்தவிண்ணின்றும்வீழ்ந்தனவுற்கை
பாயபல்லுயிருமலரவன்முடியப்படுதினமிதுகொலென்றயிர்த்த
காயநின்றதிர்ந்துவீழ்ந்தனவுருமுக்கணமுடுக்கணமெலாமுதிர்ந்த. (௧௫)

இதுநிகழ்காலையொருபெருவிருக்கத்திணர்மலர்க்கோட்டின்மேனின்றுங்
கதுமெனநொச்சியிலைபுரைபைந்தாட்கலாபமாமயிலொன்றுவீழ்ந்து
முதுபுகழுமையாள்கேசபாரந்தனினமெனமுந்திவந்தடைய
மதுமலர்க்கூந்தன்முதல்வியுமுள்ளமகிழ்தரவதையனைநோக்கி. (௧௬)

அஞ்சலைதோகாயஞ்சலையென்னுவாரருளபயநன்களித்தாள்
விஞ்சலையுடுத்தபுடவிவாழுயிர்க்கும்விண்ணுலகத்துவாழுயிர்க்கு
நஞ்சலையெயிற்றுப்பாந்தள்வாழுலகநண்ணியவுயிர்க்குமெஞ்ஞான்று
நெஞ்சலைதுயரநீங்கிடவபயநிரப்புவாட்கீதுமோர்புகழோ. (௧௭)

பிணிமுகமுவகைபெறவருள்செய்தபின்னர்வெந்தக்கனைநோக்கிக்
கணிதமில்பாவக்குழிசியாங்கயவகளைகணைவ்வுலகிற்குமாய
துணிபரம்பொருளையிகந்தனையதனாற்றொலைந்துநீகெடுகவின்னேயிவ்
வணியுறவுடம்புமொழிப்பலென்றியோகத்தருந்தழலெழுப்பினளம்மா. (௧௮)

அன்னவேசந்தழலிற்புகுந்தனண்மறைந்தாளமரர்கள்கண்டுளம்பதைத்தார்
மின்னகுகுலிசத்தவன்முதலெண்மர்மெய்நடுநடுங்கினரிருந்தார்
பன்னகப்பாயற்பகவனுமலர்மேற்பனவனுங்கண்டுநெட்டுயிர்த்தா
ருன்னருமற்றையுயிரொலாம்பட்டதுரைத்திடவல்லவர்யாரே. (௧௯)

அறிவிலராஞர்பெருந்திருவடையினப்பெருந்திருவொடுஞ்சிறைவர்
செறிதருமுலகத்தென்பதுதேற்றநதீவினைத்தக்கனம்பிகையை
நெறிமகளாகப்பெற்றனன்மகளுநீத்திடத்தானும்வாழ்வொழிந்தான்
பிறிதெவனுரைப்பாமேலினிநடக்கும்பெற்றியுமெடுத்துரைசெயவாம். (௨௦)

தக்கன மகம்புரிபடலம்முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௨௬௧.

யாகசங்காரப்படலம்.

நயங்குலவாததக்கனருமகம்புரியுமாறு
மியங்குபல்லமரரோடியூவருந்தொக்கவாறுஞ்
சயங்குலவிறையைநிந்தைசொலுமாறுஞ்சார்ந்ததேவி
வயங்குருமறைத்தவாறுமசதியாழ்முனிவனோர்ந்தான். (௧)

கருவியாழ்நழுவவேணிகட்டவிழ்ந்துலையச்சீற்ற
மருவியோடுபுவேதண்டமருவினன்றனியேவைகும்
பருவியாளப்பூட்செல்வப்பரனையஞ்சலித்துநின்று
வெருவியான்போந்தேன்றேவிவெந்தழன்மறைந்தாளென்றான். (௨)

ஆவயினடந்ததென்னென்றறிந்தறியான்போற்கேட்குந்
தூவயிற்கழுமுளார்க்குச்சிறுவனிதடவுந்தோறும்
பாவயினிரம்பப்பாடும்பத்தர்யாழ்க்கருவிமேலோ
னூவயினடுக்கந்தோன்றநடந்தனவனைத்துஞ்சொற்றான். (௩)

ககுபம் - திசை.

முனிவரனுணர்த்தலோடுமுடிவிலாமுனிவுபொங்கப்
பனிமதிமுடித்தபெம்மான்படர்சடையொன்றுபற்றித்
தனிநிலத்தறைந்தானாகத்தனைமுதனுலகம்யாவு
நனிநடுநடுங்கவீரநம்பன்வந்துதயஞ்செய்தான். (௪)

திருமுடிவிசும்புபோழத்திசைபுயந்தடவாநிற்க
மருமலர்ச்செய்யபாதமண்பரப்பனைத்துமாகக்
கருகிருளனைத்துமேய்ந்துகண்ணெழுசுவாலைபொங்க
வொருபரனடிக்கீழ்த்தாழ்ந்தீதுரைக்கலுற்றனனவ்வீரன். (௫)

எழுகடற்புனலுமுண்கோவிரவியுமதியுஞ்சூழு
முழுவரைபெயர்க்கோமற்றைவரையெலாமுறித்தல்செய்கோ
கெழுபுவியடங்கவாங்கிக்கேழ்கிளர்வாயிற்பெய்கோ
செழுவியவண்டமெல்லாஞ்சிதர்படச்சிதைத்தல்செய்கோ. (௬)

அதிர்கழனெடியமாலையயனையிந்திரனையின்னே
பிதிர்தரவங்கைவைத்துப்பிசைந்துபொட்டிடுகோவான்மீ
னுதிர்தரவதிர்க்கோயாவுமொடுங்கிநீறுகநோக்கோ
வெதிரடிமுளைத்தாய்செய்யவேண்டுவதென்னையென்றான். (௭)

தீயவன்றக்கனென்னுஞ்சிதடனோர்வேள்விசெய்வான்
மேயநந்தமக்குப்பாகமிலையெனவிளம்புகின்றா
னாயவன்றனைச்சார்ந்துண்டென்றால்விடுவிலையென்பானேற்
சாயவங்குள்ளாரோடுஞ்சாடுதிபோதியென்றான். (௮)

இத்தனைதானோவையனிடும்பணியெனக்கென்றெள்ளி
யத்தனையுருவுவேண்டாதமைதருமுருவுதாங்கி
முத்தனையுலகுக்கெல்லாமுதல்வனைப்பணிந்துபோற்றி
நத்தனையயனைவாட்டுநம்பிரானெழுந்தானன்றே. (௯)

வரைபொடிபடுக்கவேண்டின்வானத்தைமாய்க்கவேண்டிற்
றரைமுழுதெடுக்கவேண்டிற்சலதியைக்குடிக்கவேண்டி
னுரைகெழுமொன்றேசாலும்பூதங்களுலப்பிலாத
விரைதரத்தொடர்ந்துமேவவேள்வியஞ்சாலைபுக்கான். (௧௦)

மகவினைச்சாலைபுக்கவாள்வலிவீரர்வீரன்
றகவொருநால்வாயிற்குந்தவாப்பெருங்காவல்வைத்துட்
புகவவன்வரவுநோக்கிப்புலிப்போத்தின்வரவுகண்ட
ககனமான்குழாங்களென்னக்கலங்கினரமரரியாரும். (௧௧)

கொடுமகமிழைக்கும்பாவக்குழிசியாந்தக்கன்முன்போ
யிடுமவியெம்மாற்குண்டோவில்லையோசொற்றியென்றான்
கெடுவதுகுறுகப்பட்டான்கெடாதபேரகங்காரத்தாற்
கடுவுணிதனக்குப்பாகங்களையாதுவேதமென்றான். (௧௨)

என்னலுமிருக்குவேதம்விரைந்துருவெடுத்துவந்து
முன்னவனுலகுக்கெல்லாமுதல்வனயன்மாறேறு
வன்னவனொருவனேயெவ்வழன்மகங்களுக்குநாத
னின்னமுமெமக்குநாதனென்றெடுத்தியம்பிற்றன்றே. (௧௩)

அரியயனாதிவானோரனைவருமுய்யுமாறு
கரியநஞ்சமுதாக்கொண்டகண்ணுதற்பிரானையன்றி
யுரியவன்யாவன்வேள்விக்கும்பர்தங்குழாத்துளென்றும்
பெரியவனியாவனென்றுபேசியதிரண்டாம்வேதம். (௧௪)

எவனருள்வலியாற்பாசமிரிதருமுத்தியெய்து
மெவனருள்வலியாலோரைந்தொழில்களுநடக்குமின்னு
மெவனுமையவண்மணாளனெவன்றிரிபுரந்தகித்தோ
னவன்மகத்திறைவனாமென்றறைந்ததுமூன்றாம்வேதம். (௧௫)

எவன்விழிபுதைப்பவெங்குமிருளுறும்யோகின்மேவி
யெவனமர்ந்திருக்கவெல்லாம்புணர்ப்பறுந்தனைமுன்னெட்டு
மெவனுடைவடிவமாகுமெவன்பசுபதியாயுள்ளா
னவன்மகத்திறைவனாமென்றறைந்ததுநான்காம்வேதம். (௧௬)

மறையொருநான்குமிவ்வாறுரைக்கவுமனத்துக்கொள்ளாக்
கறையுடைத்தக்கன்றன்மைகண்டுவெண்குடிலைதானு
நிறையுருவொன்றுதாங்கிநேர்வந்துபுகலாநிற்கு
முறையிலாமடவற்கியாதுமொழியினுமாவதென்னே. (௧௭)

மறைபலவற்றினுக்குமூலம்யான்வகுத்தல்கேட்டி
நிறைதருமெனக்குமற்றைநெடியவன்முதலானோர்க்கு
மறையுலகினுக்கும்யாகமனைத்திற்குமிறைவனாவான்
பிறைமுடியவனேயென்றுபிரணவம்பேசிற்றன்றே. (௧௮)

மொழிதருமனைத்துங்கொள்ளான்முன்னையிற்கனன்றுமூர்க்கன்
பழிதருசுடலையாடிபடுதலையெனும்புபூண்பா
னிழிதருதமோகுணத்தனெனப்படுமுருத்திரற்குப்
பொழிதருமவியூணல்கேனென்றனன்புன்மையாளன். (௧௯)

அவனஃதுரைத்தலோடுமாண்டகைவீரச்செம்மல்
சிவபரநிந்தைகாதுறுழைந்துளச்சினமெழுப்பக்
கவலருமொருகைவாளாலவன்றலைகழியவெட்டிக்
குவலயநடுங்கயாககுண்டத்துவீழ்த்தினானால். (௨௦)

உழையினதுருவங்கொண்டாங்கோடும்யாகத்தின்சென்னி
பிழையுறவாளால்வெட்டிப்பிரமனுநெடியமாலுங்
குழைதரத்தண்டான்மொத்திக்குவலயக்கிடக்கைசெய்து
விழைகதிர்முகத்தறைந்துபற்களைவீட்டினானே. (௨௧)

மதியவனுடலந்தேயவண்கழற்காலாற்றேய்த்தான்
பொதிதருமழலினோற்குப்பொலிதருகரமறுத்தான்
வதிதருபகனென்பான்றன்மரைமலர்க்கண்களூனமுன்
குதிதருமகவானையகுயிலிருசிறகுமீர்ந்தான். (௨௨)

தலையமைவானோர்யார்க்குஞ்சாலுமித்தண்டமாற்றி
நிலையமைவடிவாளாதிநிகழ்பலபடைகளானும்
புலையறிவமைந்தமற்றைப்புத்தேளிர்களுக்குத்தண்டந்
தொலைவறச்செய்தான்பூதத்தொகைகளுஞ்செய்யலுற்ற. (௨௩)

கரமிழந்தாருஞ்சில்லோர்காலிழந்தாருஞ்சில்லோ
ருரமிழந்தாருஞ்சில்லோரொளிருத்தமாங்கமென்னும்
பரமிழந்தாருஞ்சில்லோர்பல்லிழந்தாருஞ்சில்லோர்
வரமிழந்தாருஞ்சில்லோர்வாயிழந்தாருஞ்சில்லோர். (௨௪)

சிவநிந்தைசெய்தபாவத்தீயனைநோக்குங்கண்ணு
மவமிகுமனையான்வார்த்தையடைதருசெவியும்பொல்லாத்
தவறினுற்கெதிர்சொலர்ததாலுமாங்கிழந்தாரின்னும்
பவமிலாற்பிழைத்தபாவம்பாறுமோவெளிதினம்மா. (௨௫)

மூலையிழந்தாருஞ்சில்லோர்மூக்கிழந்தாருஞ்சில்லோர்
தலைமயிரிழந்துளாருஞ்சிலர்தவாதனையுடுத்த
கலையிழந்தாருஞ்சில்லோர்கருத்துமுற்றூதுதத்த
நிலையிழந்தாருஞ்சில்லோர்நிரம்பியமடவார்தம்முள். (௨௬)

விலாப்புடைவீங்கவுண்டேமலம்விளங்கவியாமாட்டேன்
குலாப்பெறக்கவர்ந்தேமல்லேந்தக்கணைகொளலுந்தீர்ந்தேங்
கலாய்த்தவிக்கொடியாற்சார்ந்துகலங்கவமானத்தோடின்
பலாப்பழியடைந்தோமென்றேயழுதனர்மறையோரெல்லாம். (௨௭)

விதிவழிபுரிந்தகுண்டமண்டலம்வேதிமுற்றுந்
துதியறச்சிதைவுசெய்துந்துவன்றுநெய்க்குடமுடைத்தும்
பதிதரவிருந்தபற்பல்பண்டமுமழலிற்பெய்துங்
கொதிசினக்குறுத்தாட்பூதர்செய்தவைகுணிக்கப்போமோ. (௨௮)

பண்ணியயாகசாலைபாழ்படுத்திந்தவண்ண
நண்ணியமகத்தீமாயநகுசினத்தீயுமாய்த்த
புண்ணியநிமலவீரபத்திரப்புத்தேளாங்குத்
தண்ணியசிவபிரானைத்தன்மனத்துறநினைந்தான். (௨௯)

வெள்ளியங்கிரியின்மேலோர்பொன்மலைமேவிற்றென்ன
வள்ளியவிடைமேற்றோன்றிமலமாயைகன்மமூன்றுந
தள்ளியமுனிவர்பலலோர்சயசயசயவென்றேத்த
வொள்ளியமேனிக்காந்தியுறுதிசையனைத்தும்போர்ப்ப. (௩0)

குடைகொடியாலவட்டமொலியல்கோண்கொண்டதண்ட
மிடைசெய்கோண்கொள்ளாத்தண்டஞ்சாமரைமிளிர்சாந்தாற்றி
யடைதருபிறவும்பூதரங்கைகொண்டமைந்துசூழ
மடையுடைந்தென்னச்சூதர்மாகதர்விருதுபாட. (௩௧)

செறிமலர்மணங்கவர்ந்துதென்றலங்கன்றுலாவ
மறிதிரைசுருட்டுங்கங்கைமௌலிமேற்றிவலைவீசக்
குறிகெழுநிலவுகான்றுகுளிர்பிறைதயங்காநிற்க
வறிவுருவாயபெம்மானுவயிற்காட்சிதந்தான். (௩௨)

அண்ணலைக்கண்டலோடுமடிபணிந்தெழுந்தான்வீரப்
பண்ணவன்யாகசாலைபாழ்பட்டவாறும்யாருந்
துண்ணெனத்துடிக்குமாறுநோக்கியசுயம்புமூர்த்தி
யெண்ணிலாவிரக்கமுற்றான்பூதர்களிளைத்தார்த்தாரால். (௩௩)

பரவியகருணைமூர்த்திபத்திரப்பிரானைநோக்கி
விரவியவிவரையெல்லாம்விரைந்தெழுப்புதியென்றான்
வரவியலவனுந்தாழ்ந்துமாண்டவர்பலருமின்னே
யுரவுபெற்றெழுகவென்றானுறக்கமுற்றெழுந்தார்போல. (௩௪)

எழுந்தனரயனுமாலுமெழுந்தனர்திசைகாப்பாள
ரெழுந்தனரமரர்சித்தரெழுந்தனர்கருடர்நாக
ரெழுந்தனர்விஞ்சைவல்லோரெழுந்தனர்கதிர்முற்கோள்க
ளெழுந்தனர்செவ்வாய்மாதரெழுந்தனர்மறையோரெல்லாம். (௩௫)

மாயவனாதிவிண்ணோர்வள்ளலைவிடைமேற்கண்டு
பாயபேரச்சத்தோடுபரந்தெழுநாணும்பூப்பத்
தூயவன்றிருமுகம்பார்ப்பதற்குளந்துணியாராகிச்
சேயவந்நிலத்திற்சேற்றுப்பணிந்தெழல்செய்யாராக. (௩௬)

அதுதெரிந்தமலச்சோதியனைவருமெழுகவென்னக்
கதுமெனவெழுந்தெல்லோருங்கைதலைக்குவித்துநின்றார்
பதுமனைமாலைநோக்கிப்படுமகத்தெமக்குப்பாக
முதுபுகழுடையீர்தாரீரோவெனமொழிவான்மாயன். (௩௭)

அடியரோமெந்தனான்றுமாணவமலக்கோட்பட்டுக்
குடிகெடுகின்றோநீயுங்குரங்குபோலாட்டுவிப்பாய்
செடியுடலேழையேங்கள்செய்பிழைபொறுத்தாட்கொள்ளும்
படியிரந்திரந்துவிண்ணப்பஞ்செய்வேம்பிறிதென்செய்வேம். (௩௮)

கொடுவிடமெழுந்தஞான்றுகொடியரோமிரந்துவேண்டத்
தடுவருங்கருணையாலேசமைந்தவின்னமுதாக்கொண்டு
வடுவகிர்க்கண்ணாரொங்கண்மனைவியர்கழுத்திற்பூண்ட
விடுசுடர்ச்செம்பொன்காத்தாய்மேலினியுரைப்பதென்னே. (௩௯)

இதுநிகரனேகமாகவியற்றியுமறந்துநாங்கள்
கதுமெனப்பிழையேசெய்வோங்கண்டித்தபின்புதேர்வோ
முதுபுனல்விலக்குங்காலையொழிதரும்பாசியம்மா
வதுசெயாவிடின்முன்போலாமற்றெங்கள்செய்கைநாளும். (௪0)

ஆதலினின்றுநாங்களவமதித்திருந்ததற்காக்
காதலினடிகள்கண்டித்ததுபெருங்கருணையாகு
மேதகுமிதற்குக்கைம்மாறேதுண்டுமெய்மையேயுன்
பாதபங்கயங்கள்பல்காற்பணிதரலன்றியைய. (௪௧)

என்றுரைத்தடியில்வீழ்ந்தவிணர்த்துழாய்மாலையாற்கு
நன்றுளக்கருணைபூத்துநாயகனுரைக்கலுற்றான்
குன்றுகைக்கொண்டாய்நீயுங்கூடியபிறருமின்னே
சென்றுமுன்பிரமன்போற்றச்சிருட்டிநாந்தருமோர்தேத்து. (௪௨)

வயங்குநங்குறியொன்றுண்டுமற்றதுகண்டுபோற்றி
வியங்குறுபாதகம்போமெம்மருட்பேறுமுண்டாம்
பயங்கிளர்நுங்கடமைபறிசெய்தோமித்தேத்தற்றூற்
றயுங்குமித்தானமென்றும்பதியலென்றொருபேர்சார்க. (௪௩)

இத்தலஞ்செம்பொன்பள்ளிநனிபள்ளியின்னம்பல்ல
முத்தலம்படைக்குமாற்றன்முளரிமேலவற்குநல்கு
மத்தலத்தெல்லையுள்ளவாதலாலிவைகண்டோர்தாங்
கைத்தலநெல்லிபோலுமத்தலங்கண்டோராவார். (௪௪)

என்றுரைத்தரியைமற்றையிமையவர்தம்மைப்போக்கி
யொன்றுதன்பாங்கரிற்குமொண்படைவீரற்பாரா
நன்றுநீயணையதேத்துநலங்கொளப்பொலிகவென்று
குன்றுவிற்குழைத்தகோமானவற்கருள்கொடுத்தபின்றை. (௪௫)

குக்குமவுடம்புதாங்கியொருபுறந்துதைந்துநிற்கும்
வாக்குமனாதீதச்சீர்வாய்ந்தபூரணியைநோக்கிப்
போக்குநீதவிர்தியென்றதேற்றிலாய்போதல்செய்தாய்
வீக்குமற்றதற்குத்தக்கபயனுமேதகவிற்பெற்றாய். (௪௬)

எனவுரைத்தருளநாணியிறைஞ்சினளெம்பிராட்டி
கனமருள்கண்டன்மேனிகழித்திடும்பொழுதோர்தோகை
யினமெனவடையப்பாதுகாத்திரங்கினையாலறா
லனநடையணங்கேதோகையாயதோருருவங்கொண்டு. (௪௭)

பிரமன்முனெமைப்பூசித்தபெருந்தலத்தெய்தியாங்கே
வரமுறநமைப்பூசித்துமருவுதியாமுமாங்குப்
பரவுமோர்மஞ்ஞையாகிப்பயிலுவோந்துணையாயின்னே
கரவறச்சேறியென்றான்கடுவிடைநடாத்தினானே. (௪௮)

விடைநடத்தியநங்கோமான்விரிஞ்சனார்பூசைசெய்த
கடையுறலென்றுமில்லாக்காமருதலத்தைச்சார்ந்தாங்
குடையதன்குறியிலுற்றானும்பராதியர்பல்லோரு
மிடையறத்தொடர்ந்துசென்றாங்கியைதரவமர்ந்தாரன்றே. (௪௯)

யாகசங்காரப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம். ௫௦௦.

மாயூரப்படலம்.

இலகவானவர்யாவருந்தம்பிழையிரிந்து
விலகமாமலராளியூர்மேவிடுமுன்னர்த்
திலகமாகியமூவர்தந்தேவருளசிந்தித்
துலகம்யாவையுமீன்றவளொருமயிலானாள். (௧)

பரவுநொச்சியின்பாசிலையன்னபைந்தாளும்
விரவுபேருலகடங்கமூடுஞ்சிறைவிரிவு
முரவுசேர்தரமேற்கவிவாலுமிக்கொளிரக்
கரவுதீர்மனவநம்பயில்பசுமயில்கவினும். (௨)

கலவுபல்லுயிர்ப்பயிர்தழைதரக்களங்கறுத்து
நிலவுவேணியொண்டடித்துறமறையொலிநிகழ்த்தி
யுலவுபேருண்மழைபொழியொருமுகிலுவந்து
குலவுபற்பலவண்டமீன்மயினனிகுலவும். (௩)

வரையுதித்திடுமயிலென்றுமயிலியலென்றும்
புரையில்கேள்வியருருவகஞ்செய்தலும்போறறி
யுரைசிறப்பவன்மொழித்தொகைசெய்தலுமொருவக்
கரைசெய்சாதிப்பேரெனமயிலாயினள்கவுரி.	(ச)

பாயபச்சேனுமொளியிறைபண்புறவிடபம் *
மேயகொள்கையான் * முருகுபெறறமைதலான்விடாம
லாயவார் * பணிகோறலாலறம்வளர்த்தவளா
நேயமாமயிலெனச்சொலநிலவியதன்றே.	(ரு)

அண்டநாயகியொருதிருமயிலுருவமையக்
கண்டதாமரைச்செல்வியுங்கலைதிருமானுந
தணடவாமலர்ககுழலயிராணியுநதயங்கல்
கொண்டவேணியமாதருமயிலுருக்கொண்டார்.	(சா)

வளவரிநதிதைகமலினிமுதலியமடவா
ருளவரியாவருமொணசிறைமயிலுருவுறறா
துளவனுதிவானவரொலாஞ்சூழ்ந்தனாகாத்தாா
களமிலாமயில்சூழநதனகவுரிமாமயிலே.	(எ)

ஆடுமோர்சிலவோாசிலசிறைவிரிததகவி
நீடுமோர்சிலநிலததடிதோய்தரநடககுங்
கூடுமோர்சிலபநதரிட்டெனககுலாயப்பறக்கு
நாடுமோாசிலநயநதபூங்கொமபரினண்ணும.	(அ)

ஒருத்திமாமடமயிலுருவாதலுமுடனே
விருத்திசாலுமறறவரொலாமயிலுருவிழைநதாா
திருத்திவாயிவளகோவுருவாதலுநதொலையா
வருத்திகூருமறறவரொலாங்கோவுருவானா	(கூ)

பெண்ணுருக்கொடுமறறிவளபொலிதலும்பெண்மை
நண்ணுருக்கொடுபொலிகுவாமறறைநல்லாரு
மெண்ணுருகொளுநதலைவியெப்படியுலகெங்கு
மண்ணுருக்கொளுமேனையரபபடியனரே.	(க0)

உலககாரணியாகியபரையொடுமேனை
ரிலகமாமயிலுருக்கொடுநிகழ்தலையெண்ணி
யிலகவோரிடமின்றெனப்புவிமிசைமிடையுந
திலகமாகியநாகநாஞ்செறிநதொளித்தனவே.	(கக)

திசையினாகமுமஞ்சினசெறிநதுபாதலத்தி
னிசையுநாகமுமஞ்சினவிருநதிர்விழுங்கும்
வசையினாகமுமஞ்சினகத்துருமடந்தை
மிசையுமாத்துயாமூழ்கினளுவநதனள்வினதை.	(கஉ)

வலிசெய்நோன்பிறைபரனணியாக்கிடமகிழ்வுா
றொலிசெய்புள்ளரசினைச்சுகமோவெனவினவு
நலிசெய்பாநதளுமுள்ளுறநடுங்கினவென்னிற
கலிசெய்மற்றுளபாந்தளுளவைகலங்காத.	(கஙா)

* விடபம் - மரக்கொம்பு - இடபம். *முருகு - இளமை - முருகக்கடவுள்.
* பணிகோறல் - பாம்பைக்கொல்லுதல் - ஆபரணங்களைக்கோலுதல்.

எங்குமாயினிக்காண்டலிவ்வதிசயம்பிரமன்
பொங்குபூசைசெய்தலத்துமான்மியங்கொலோபுனிதை
தங்குமான்மியமாங்கொலோமுசலிகடாமே
நங்குதீரவந்தடிதொழுதின்பமேநண்ணும். (௧௪)

அந்தமாமயில்குமரனைவெரிந்புறத்தமைக்கு
மிந்தமாமயின்மடித்தலங்கைத்தலமிரண்டிற்
சந்தமேவுறவகத்தமைத்திடுமிதன்சால்பு
முந்தயாவர்காண்குவரெனவறிந்தவர்மொழிவார். (௧௫)

பொருந்துபற்பலமாதராமயிலொடும்புவன
மருந்துகொண்டனமுன்வரவருமம்பிகைமஞ்ஞை
திருந்துவேதன்முன்பூசித்ததிருத்தலம்புகுந்து
வருந்துதீர்ந்துபல்வளமெலாநோக்கிடுகாலை. (௧௬)

அரியமாதவரம்மயிலுண்மையையறிந்து
தெரியவாமறையோமறையந்தமோதிகழ்ந்து
பிரியமார்தரும்பிரணவமோசிவயோக
ருரியநெஞ்சமோவித்தலமென்றுளமுவந்தார். (௧௭)

அதிசயத்தின்மேலதிசயமாகவவ்வேலை
கதியடுத்தவாக்கினிதருள்காரணமுதல்வன்
மதிநுதற்பிராட்டிக்குமுன்வழங்கியபடியே
துதிசிறப்புறுமொருமயிலாகிமுன்றோன்ற. (௧௮)

கண்டபுண்ணியமாமயில்கருதருமுவகை
மண்டவொள்விழிவழிச்செலீஇமனமதைமருவ
முண்டகாசனன்முகுந்தனுமறிதரமுடியா
வண்டநாயகமயிலிதென்றார்வமுற்றனரே. (௧௯)

உரித்துநந்தமக்கிதுவெனவுணர்த்தல்போற்றோகை
விரித்துமேற்கவிதரச்செய்துவிளங்கிருசிறையு
மிரித்துமெய்யிலொன்றுவகைமுகமெழிலியையப்
பரித்துநின்றுநன்றாடியததிசயம்பயப்ப. (௨௦)

வம்பலர்க்குழலுலகமீன்றருண்மயில்காணக்
கம்பலைத்தெழுமறையெலாங்களித்துநின்றாட
நம்பலுற்றபல்சராசரங்களுநயந்தாட
வம்பலத்தினிதாடுறுமயிலுவந்தாடும். (௨௧)

அமரமாதரோடொருபுறமயிலவாய்நோக்கச்
சமரவேல்விழியம்மயிறுளங்கைத்தாக்கப்
பமரமார்தொடையும்பர்கள்பழிச்சிநின்றேத்தக்
* குமரனுய்முனமாடியகுரூமயிலாடும். (௨௨)

இள்ளைமேவியமலர்க்கரக்கிளர்விழிக்கயறோய்
வள்ளைவார்குழையுமையெனுமாமயில்காணத்
தொள்ளையுள்ளமாலயன்முதற்பலரையுந்தொலைத்து
வெள்ளைநீறணிந்தாடுறுமயில்வியந்தாடும்.

---

* குமரன் - கௌமாரபருவமுடையவன்.

அலகிலண்டமுமீன்றருளியமயில்காண
வலகிலண்டமுமதிர்தரவெழுந்தவணுண
வலகிலாற்றலின்ஞொருபதம்விண்பொதிர்த்தனைய
வலகிலற்புதநடஞ்செயுமயிலுவந்தாடும். (௨௪)

புனிதமங்களபூரணமாமயினோக்க
முனிவரஞ்சலித்தரகரகரவெனமொழியப்
பணிபரந்தகண்ணடியர்மற்றியாவரும்பரவத்
தனியகமந்துனனடம்புரிமயிறகவாடும். (௨௫)

இறைவியென்றுலகேத்திடுந்திருமயில்காண
மறையினந்தமும்வான்றவயோகியருளமுங்
குறையறும்பெருந்தானமாக்கொண்டுகூத்தாடும்
பிறையிருஞ்சடைப்பெருமயிறங்கிநின்றாடும். (௨௬)

அறைந்தவண்ணமொண்சரபமாகியமயிலாடக்
குறைந்தமாமதிநுதன்மயிலன்புமீக்கூர
நிறைந்தபற்பலமயில்களுநோக்கியுண்ணெகிழ
மறைந்திதொன்றுமின்றுகநோக்குபுமகிழ்ந்தன்றே. (௨௭)

ஆங்குநிற்குமாந்தருமிசைப்பயின்றிடுமதன்கீழ்த்
தேங்குபேரொளியாயதன்செழுங்குறிசூழு
மோங்குவேதியன்பூசித்தகுறியுங்கண்டுவக்கு
நீங்குறுமயிலொடும்பசுமயினெறிதொடர. (௨௮)

சத்தனெவ்வுருக்கொள்ளுமவ்வுருவிற்குத்தகவே
சத்தியும்முருக்கொளுமெனச்சாற்றலுமிருக்கச்
சத்தியெவ்வுருக்கொள்ளுமவ்வுருவிற்குத்தகவே
சத்தனும்முருக்கொளுமெனறறையெழுந்தன்றே. (௨௯)

மன்றைநாடியாட்டயர்தருமறைமுடிமயிலு
நன்றையாதரித்ததுதெரிஞாலமீன்மயிலு
மொன்றையொன்றுநீங்காதமைந்துவகையிற்றிளைப்பப்
பின்றைநீங்கலற்றுவப்புமேயினபிறமயிலும். (௩௰)

ஆயகாலையிறைங்கசரீரிவாக்கொன்று
நேயமாமலராளிவாவியினிபடிந்து
தூயமாவடிச்சிவலிங்கபூசனைதொடங்கன்
றேயமாமாமயில்செவியுறவெழுந்தன்றே. (௩௧)

அந்தவாசகங்கேட்டலுமுவகைமிக்கமையப்
பந்தமேதுமின்மஞ்ஞையவ்வாவியிற்படிந்து
சந்தமாவடிச்சிவக்குறிமுன்னுறச்சார்ந்து
நந்தமற்றதன்பொலிவினைநயந்துகண்டன்றே. (௩௨)

மஞ்சனஞ்செயப்பின்மலரருச்சனைவயக்கத்
தஞ்சுமின்றிநன்னிவேதநந்தவளதெடுத்தூட்ட
வஞ்சலித்திடக்கையிலேமருந்துதியறையக்
கஞ்சநேர்தருவாயிலேமென்செயக்கடவேம். (௩௩)

என்றுதன்னுளத்தெண்ணுபுமானதபூசை
நன்றுசெய்திடத்தலைப்படலையாலெனநயந்து
வென்றுமேம்படுமயில்விழைந்தாட்டுதலாதி
யொன்றும்யாவையுந்தன்மனத்துறப்புரிந்தன்றே. (௧௪)

மாவின்மேற்செலீஇநறுந்தளிர்வாயிலுல்வெளவுந்
தாவினம்பிரான்மேனிமேற்றதைதரச்சாத்துஞ்
சேவின்மேலவன்செய்யபட்டணிந்தனனென்று
நோவின்மாட்சிசெய்கண்களாலினிதுறநோக்கும். (௧௫)

நாடுகொக்குமந்தாரையினறுமலர்கொணருங்
கூடுதம்பிரான்மெய்யெலாமறைதரக்குவிக்கு
நீடுவெள்ளியபட்டலங்காரத்தைநிகர்த்த
தாடுநம்பிரான்கோலமென்றதிசயமடையும். (௧௬)

முல்லைவெண்முகைகொடுவந்துமேனியைமூடு
மெல்லையில்லவற்கின்றுவெண்பதஞ்சமைத்திடைய
வொல்லைநன்கபிடேகித்ததொத்ததென்றுவக்குங்
கொல்லையேற்றவனாமாவொடுகுலவுறச்சூழும். (௧௭)

நந்தியீருரிபோர்த்தவத்தம்பிரான்மேனி
நந்திவாசனைநாறுசெவ்வந்தியானயக்க
முந்தியெண்ணிலகொடுவந்துகொடுவந்துமூடு
மந்திவண்ணனென்பதுதகுமெனமனத்தமைக்கும். (௧௮)

துன்னுமல்லிகைமலர்பலகொடுவந்துதொகுக்கும்
பன்னுமெம்பிரான்றனைச்சுத்தப்படிகசங்காசன *
என்னுமோருரைமெய்யெனவிரதயத்துவகை
மன்னுமாறுகொண்டெழுந்துமேற்செயுந்திறமதிக்கும். (௧௯)

பட்டியின்பலவன்னமாமலர்களும்பறித்துக்
கிட்டியெம்பிரான்கிளர்திருவுருவத்தைமூடு
மொட்டிநோக்கியிக்கோலம்வெம்புலியதளுடையான்
கட்டிநீத்ததுபோர்த்ததொத்திருந்தெனக்களிக்கும். (௨௦)

கோலமாகருங்குவளைமாமலர்பலகொண்டு
நீலமார்களத்தண்ணறனதிருவுருநிறைக்குஞ்
சீலமார்முனிவரர்விடச்செறிநதவாரணத்தோல்
ஞாலமார்தரப்போர்த்ததொத்ததுவெனநயக்கும். (௨௧)

செறிதருஞ்செழுஞ்செருந்திகொண்மலர்பலசெறித்துக்
குறிதருந்திருமேனிமேற்குளிர்தரமூடும்
பறிதரும்பலகாசுகொண்டன்புளமபதித
லறிதரும்படியாட்டியதொத்ததென்றமையும்.

பத்தகோடிகட்கெளியவனாகியபரம
சித்தநாயகன்மேனிமேற்கோங்கங்கணிரப்புஞ்
சித்தமின்புறநோக்குநஞ்சிவபிரான்செம்பொ
னொத்தவண்ணனென்றுரைத்தன்மெய்யேயெனவுகளும். (௨௩)

* சங்காசன - ஒத்தவன்.

குலவுகொன்றையினறுமலர்பற்பலகொணர்ந்து
நிலவுதம்பிரான்மேனியுட்படமிசைநிறைக்குங்
குலவுயோகியர்பிரணவநீத்துட்குலவுறுமா
கலவுமெய்ப்பொருளென்பதுமெய்யெனக்களிக்கும். (சச)

மேயசீறிலைவில்வங்களநேகமாக்கொணர்ந்து
நாயனார்திருமேனியுண்மறையமேலூட்டும்
பாயமூவகைச்சத்தியுட்பொருளெனப்பண்பி
னாயமேலவர்கூறன்மெய்யேயெனவமையும். (சரு)

உறுவதாகவிவ்வண்ணமொண்பூசனைமூன்றூற்
றறுபதாண்டுநன்காற்றியாவயினமாந்தன்று
பெறுவதென்னிதனமேலெனப்பெரிதுளங்களித்த
திறுவதாயதுமறமுவர்ப்பரவைசூழிடத்தில். (சசு)

தலையெடுத்துநின்றார்த்தனதருமங்களனைத்து
நிலையெடுத்தபனமுனிவருமூவகையுணிறைத்தார்
மலையெடுத்தகைக்குடையினான்முதலியவானோர்
கொலையெடுத்தசூறபடையினானருள்குறித்தமாந்தார்

உற்றவான்புகழ்கௌரியேமயூரமாயுவந்து
நற்றவஞ்செயப்பெற்றகாரணத்தினாலஞ்சேர்
மற்றவத்தலங்கௌரிமாயூரமென்றொருபேர்
பெற்றதிவ்வுலகத்தொடெவ்வுலகமும்பேச.

மன்னுமேன்மைசால்கௌரிமாயூரமென்றொருகாற்
பன்னுவாரொனினவாபெரும்பாதகரொனினுந்
துன்னுமப்பெரும்பாதகமடியறத்தொலைய
வுன்னுமுத்தராகுவொனிலுரைப்பதென்னினியே. (சகூ)

வேதமுஞ்சிறப்பாயவாகமங்களுமிக்க
போதமேயருள்புராணமுமற்றுளநூலு
மேதமோதுமிக்கௌரிமாயூரமாமிசைத
வாதமந்திரமெவற்றினுமுயர்பெனவழங்கும். (ருo)

இசைகுலாவியகௌரிமாயூரமென்றிசைக்குந
திசைகுலாவியமாதிரமுனைபயுணர்சிறந்தோர்
வசைகுலாவியபாதகர்மறந்துமோதுவரோ
நசைகுலாவியமேற்சரிதமுநடத்திடுவாம். (ருக)

மாயூரப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம். ருருக.

தேவி வரம்பெறுபடலம்.

பூசையிவ்வாறுசெய்யும்புவனமுற்றீன்றதோகை
யாசைதன்னாயிற்சூழுந்தோகையாங்கவாநிற்கு
மோசைமுற்கூவர்ந்துநாளுமூவகையிற்றிளைப்பதோர்நாண்
மாசையிலுருவங்காட்டாவகைதெரிந்தயங்கிற்றன்றே. (க)

எதுபிழைசெய்தேன்கொல்லோவெளிமையிற்காட்சிநல்கு
மதுமலர்க்கடுக்கைமாலைமயிலின்றுமறைந்ததற்றை
முதுபிழைதீர்த்தற்கிங்குமுற்றினேனிங்குமேய
விதுபுகுந்தெங்குத்தீர்ப்பேனெனக்கவன்றிரங்காநிற்கும். (௨)

பிரிதராக்கருணைமஞ்ஞைபிரியுமேபிரிந்ததோர்ந்து
மிரிதராவுடம்பினோடுமிருப்பதேயானென்றேங்கும்
பரிதராக்கொடியேன்பூசைபண்ணலிற்குற்றமென்றோ
சரிதராவதுமுன்போலத்தழைவதுதெரிவேனென்று. (௩)

வாவியின்மூழ்கிவந்துமலர்முதறபலவுநேடி
யாவியினினியகோவையந்தரியாகபூசை
மேவினனியற்றிப்பின்னர்விழித்ததுதெரியக்கண்ட
தோவியர்முயன்றுநீட்டாவுருவத்தானுவக்குங்கோசம். (௪)

நாட்டியவக்கோசத்துநறுமணத்தைலமாதி
யாட்டியபலவுமேன்மையாயகூவிளமுமாகச்
சூட்டியபலவுமன்னஞ்சுவைக்கறியபூபமறறு
மூட்டியபலவுமெம்மானுவத்தலின்வெளிப்பட்டனறே. (௫)

நீட்டியசடையான்சூதநீழல்வாழ்பெருமான்பாங்க
ராட்டியவனைத்துமோடிவழியவுமனையான்மேனி
சூட்டியவனைத்தும்பறறித்துதையவுந்திருமுன்னேர்வைத்
தூட்டியவனைத்துமாங்காங்குறையவுங்கண்டதன்றே (௬)

அதிசயமிதுவாமென்றுங்ககன்றுவேதியனபூசித்த
நிதிநிகரிலிங்கமுனபுஞெறோலெனச்சேறலோடும்
பதியுமெவ்விடத்துமந்தப்படியேகண்டிறும்பூதுற்றுப்
பொதிதருமுவகைமேவப்புளகம்பூரித்ததன்றே. (௭)

இதுகொலோநாம்பூசித்ததினியமாநீழல்வைகு
மதுகொலோவெனவோரையமடைந்ததுபசியதோகை
யுதுவிதுவெனபதென்னேயுணர்தரினிரண்டுமொன்றே
கதுமெனநாஞ்செய்பூசையிரண்டினுங்கண்டவாற்றால்.

எனறுதனகருத்திறறெள்ளியிப்படியிருந்துநம்மோ
டொன்றுபுகளிப்புச்செய்யுமொருசிகாவளமித்தேத்து
நின்றுநீங்கிடுதறகேதுவென்னெனநினைந்துசாம்பும்
பொனறுமேவுறாமலனறிப்போகாதித்துயுமொன்றுள்ளும். (௯)

எனநினைந்தெம்பிராட்டியெனுமயில்கவலுங்காலை
யினமறைவாழ்த்துமல்கவிமையவர்பலருமேத்த
வனகமாமுனிவரியாருமரகரகரவென்றார்ப்பக்
கனவிடைமீதுகாட்சிநல்கினான்கருணைமூர்த்தி. (௧௦)

காட்சிதந்தருளுமையன்காமருமயிலைநோக்கி
யாட்சிநம்மெதிராந்தீர்த்தத்தடுத்தவையொடுமூழ்கென்ன
மாட்சியினதுபஃறோகையொடுமகிழ்ந்தாடிப்பண்டைப்
பூட்சியுற்றெழுந்ததம்மாபுலவர்பூமாரிதூர்ப்ப. (௧௧)

பிணிமுகவுருவநீத்துப்பண்டையவுருவம்பெற்ற
மணிமருள்கூந்தற்செவ்வாய்வாணுதலெம்பிராட்டி
யணிகிளர்விடைமேற்றோன்றுமண்ணலைவிரும்பிநோக்கித்
தணிவருமன்பூபொங்கத்தாளமிசைப்பணிந்தெழுந்தாள். (௧௨)

சூழ்தருமயில்களெல்லாந்தலைவிதன்றோற்றம்போல
வாழ்தருகளிப்புமேவமயிலுருவொருங்குநீத்து
வீழ்தருபழையரூபமேவியெம்பிரானையன்னாற்
றாழ்தருபாவையைச்சூழ்ந்துதாழ்ந்தளவளாவிநின்ற. (௧௩)

தாழ்ந்தெழுமுமையைநோக்கித்தம்பிரானருளிச்செய்வான்
போழ்ந்தநின்கரிசுமுற்றும்போயதித்தலம்புக்கன்றே
யாழ்ந்தவன்புடைநின்பூசைக்காற்றவுமகிழ்ந்தேமற்றால்
வீழ்ந்தபல்வரமுங்கோடியென்றலும்விமலைதாழ்ந்து. (௧௪)

ஐயனேபோற்றிபோற்றியழலவிர்மழுமானேந்து
கையனேபோற்றிபோற்றிகையர்கண்காணுமேனிச்
செய்யனேபோற்றிபோற்றிதேவரைக்காத்தகண்ட
மையனேபோற்றிபோற்றியென்றிதுவகுக்கலுற்றாள். (௧௫)

அடியனேன்புரிபுன்பூசைக்கையாநீயுவந்தநுண்டேற்
கடியவிரிவனையதானங்களெரிமாயூரமென்றே
நெடியவன்முதலோரோத்திநினைதரப்பொலியவேண்டு
மொடிவிலிநாமஞ்சொற்றோருவப்பெலாமுறுதல்வேண்டும். (௧௬)

தாயுமாயுலகுகெல்லாந்தந்தையுமானவைய
நீயுமாயூரநாதனெனும்பெயர்நிலவப்பூண்டு
தோயுமாதீர்த்தமாடிவநதுனைத்தொழுவோர்க்கெல்லாங்
காயுமாபாதகங்கள்கழற்றியின்புதவுவேண்டும். (௧௭)

நன்றுநான்பூசைசெய்யுநலத்தவிக்குறிகண்மாட்டு
நின்றுநீகழலாவண்ணநிகழ்பிரசன்னமாகி
யென்றும்வீற்றிருக்கவேண்டுஞ்செய்மையினிருந்துநின்பே
ரொன்றுளத்தெண்ணுவோருமுயர்கதியடையவேண்டும். (௧௮)

தினகரன்றுலாத்திற்செல்லுஞ்செழுமதிமுழுதுமோர்சா
றனகயான்புரிதல்வேட்டேனதுநிறைவேறுமாறு
முனகரும்பொன்னிநன்னீர்மூழ்கினருய்யுமாறு
மனனமர்தீர்த்தநல்கிவயங்கருள்புரிதல்வேண்டும். (௧௯)

வழிச்செலவொருநாணின்னைக்கண்டவர்வளர்சாலோகம்
பழிப்பறவொருநாள்வந்துகண்டவர்பகர்சாமீப
மிழித்தலற்றிடச்சின்னாளிங்கிருந்துபோற்றினர்சாரூப
மொழித்தலற்றுறைவோர்நின்றுட்கலப்புநன்குறுதல்வேண்டும். (௨௰)

கொலைகளிற்சிறந்ததாயவர்தனைக்கொலையும்வீரக்
கொலையுநாரியரைக்கொன்றகொலையும்பீடபச்சிதைத்த
கொலையுமாக்கொலையுந்தந்தையாதியர்தம்மைக்கொன்ற
கொலையுமித்தலத்தைச்சாரிற்குலைகுலைந்தோடல்வேண்டும், (௨௧)

இத்தலத்துதித்தபுல்லுச்செடிகொடிமரங்களின்னுங்
கைத்தபுள்கிருமிகீடங்கழுதைநாய்மலமார்பன்றி
மொய்த்தபல்கிரிபூனைபறவைகண்மொழியாமற்றும்
பைத்தபாப்பணியாய்நின்பொற்பாதமேசேரவேண்டும். (உஉ)

என்றொடுநின்னைப்போற்றுமியல்பினரியாவரேனும்
பொன்றொடுமணியுமற்றும்புகல்பொருள்யாவுமெய்தி
மின்றொடுநிகர்மருங்குன்மனைமகாரோடுமேவி
முன்றொடுபின்னிலாய்வாழ்ந்தீற்றுனைமுயங்கல்வேண்டும் (உஙு)

பொருணனிவேண்டினாலும்புலமையிற்சிறந்தோராரூந்
தெருணனிவேண்டினாலுஞ்சித்திகள்வேண்டினாலு
மருணனிவேண்டினாலும்வழங்காமலின்பந்துய்க்கு
மருணனிவேண்டினாலுமித்தலமளித்தல்வேண்டும். (உச)

விழியிலார்செவியுமில்லார்மேதருகைகாலில்லார்
மொழியிலார்குட்டமாதிமொய்த்ததுளாருய்யும்வேறு
வழியிலாரியாவரேனும்வந்தித்தித்தலஞ்சார்வாரேற்
பழியிலாராகியின்பப்பயனினுகர்தல்வேண்டும். (உரு)

பற்பலவுரைப்பதென்னைபரமநீவீற்றிருக்கும்
பொற்பமரினியகோயிற்பொருள்கவர்தீங்கினோடு
நிற்பழித்திழிக்குந்தீங்குநிறகமற்றெனையதீங்கு
மற்பமுமின்றாய்நீங்கவருணமதியெனாறுதாழ்ந்தாள். (உசு)

பராபரையிரந்தவாறேபராபரனனைத்துநல்கிப்
புராதனவிலிங்கத்துள்ளேபுக்கினிதமர்ந்தானாக
வராவணையவன்முன்வானோரலர்மழைபொழிந்தாரப்பாற
றரர்தலமகிழுமாறுநடந்ததுசாற்றலுற்றாம். (உஎ)

தேவிவரம்பெறுபடலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம். ருஎஅ.

மாயூரநாதர்வள்ளலாரென்னும்பெயர்பெற்றபடலம்.

அறிவில்கொடியவினைத்தக்கனுறுமகச்சாலையிற்புகுந்து
செறியுமயன்மான்முதற்றேவர்திறல்கூலவீரபத்திரரான்
முறிவிறண்டஞ்செயப்பெற்றுமுழங்கும்வீரட்டானமெனும்
பதியனின்றுமாயூரம்படாநதார்பூசைசெயல்குறித்தார். (க)

உரியவதிகாரமுமிழந்தோமுற்றமேன்மைகளுமிழந்தோம்
பெரியபரனையவமதித்தபேயன்றனைச்சார்ந்தறக்கெட்டோ
மரியதண்டமுறப்பெற்றுமருதநமைச்சார்ந்துறுகரிசு
மிரியமாயூரேசனைநாமின்றேபணிவோமெனக்கருதி. (உ)

மன்னும்பிரமதடந்தோய்ந்துவயங்குநீற்றுத்தூளணைமும்
பன்னுமதனமேற்புண்டரமும்பகரர்கமஞ்சொல்வழிபுனைந்து
மின்னுமுருத்திராக்கமணிவிளங்கப்பூண்டைந்தெழுத்தெண்ணித்
துன்னுமயன்மான்முதலாயசுரர்கள்யாரும்புறப்பட்டார். (ஙு)

ஆட்டுந்தயிலமுதற்பலவுமான்றமனுக்களொடுத்தோதிச்
சூட்டும்வில்வமுதற்பலவுந்தொக்கமுகமன்புகன்றுகசிந்
தூட்டமமுதமுதற்பலவுமுற்றதீபம்பலபொருத்திக்
காட்டுங்கருவிமுதற்பலவுங்கருத்துக்கியையவீட்டினார். (௪)

அருமாதவர்தமுளத்தொளியையுன்றுபுவனமுழுதுமுய்யக்
கருமாவிடமுண்டமைந்தானைக்கனிந்தபிரமற்கருள்சுரந்த
திருமாமணியைத்தக்கன்மகளுஞ்செற்றகோவைமாதேவை
யொருமாயூரேசனைப்பூசித்துவந்துதுதிக்கத்தொடங்கினார். (௫)

அருவாயுருவாயருவுருவாயனைத்துங்கடந்தவசஞ்சலமாய்ப்
பெருமாமறையின்முடிப்பொருளாய்ப்பெரிதாய்ச்சிறிதாய்ப்பேருணர்வா
யொருமூவுலகிற்குயிராகியுற்றகுறியாதிகள்கடந்து
கருதாவொளியாயமர்மாயூரேசநின்றாள்கைதொழுதேம். (௬)

ஒன்றாயருவாயுருவாய்மற்றுபயமாயொன்பதுங்கடந்து
நின்றாய்மூலமலவிருளானெருக்குண்டுடையுமூவுயிர்க்கு
நன்றாயுணர்வுபுணர்த்திடுவானவிலுமாயைமாமாயை
* என்றாயிரண்டிற்றனுவாதியியைப்பாய்நின்னைச்சரணடைந்தேம். (௭)

ஒருமூவகையதத்துவமுமுள்ளும்புறமுமெனப்புகலு
மிருபேரிடத்துங்கொளப்பொருத்தியியலுமாறுதொழிற்படுத்த
மருவாரணுக்களைந்துபுலன்வழிச்சென்றுற்றும்வினைசுவர்க்கங்,
கருளார்நரகந்துய்ப்பித்துக்கழிப்பிப்பாய்நிற்புகல்புகுநதேம். (௮)

மேவியமையும்பருவமுறவினைகளொக்குஞ்சமநோக்கி
யாவியருளுற்றிடப்பதித்தேயமைந்தசகலந்தனினீக்கித்
தாவி * அறிவோரிரண்டுமறத்தாவாச்சுத்தந்தனில்வயக்கி
யோவியகலாவின்பளிக்குமொருவாநின்னைச்சரணடைந்தேம். (௯)

ஏதங்கடந்துவினைகடந்துகருவியென்பவெலாங்கடந்து
வாதங்கடந்தாருயிர்கடந்துமாறாவருளின்றொடர்கடந்து
பேதங்கடந்துபரவசமாய்ப்பிரியாச்சுகவாரிதிமடுத்துப்
போதங்கடந்துநிறைந்தபரம்பொருளேநின்னைச்சரணடைந்தேம். (௧௦)

அல்லார்கண்டத்தற்புதனேயடியார்க்கெளியகருணையனே
சொல்லார்மறையின்முடியானேதூயபிறைசார்வேணியனே
செல்லார்கூந்தலுமையமைசெறியோர்பாதிமேனியனே
நல்லார்புகழுமாயூரநாதாநின்னைச்சரணடைந்தேம். (௧௧)

என்றுதுதிக்குமலரோற்குமெஃகத்திகிரிப்படையோற்குங்
கன்றுவயிரப்படைசுமந்தகடவுண்முதலாமெண்மருக்குந்
துன்றுமொளிசாலிலேகருக்குந்தொக்கமற்றையாவருக்கு
மன்றுகருணைசெயவெளிவந்தனனவ்விலிங்கநின்றையன். (௧௨)

அண்ணல்வெளிவந்ததுகாணூஉவயன்மான்முதலோரடிமிசைத்தாழ்ந்
தெண்ணலினியாதெனநிற்கவெம்மானனையர்முகநோக்கிக்
கண்ணலருந்தீதிந்தலநங்குறிப்பூசனையாற்கழிந்துயர்ந்தீர்
நண்ணலரியவரமுமக்கின்றருள்வோமென்றுநவில்கின்றான். (௧௩)

---

* என்றாயிரண்டில் - என்றாயஇரண்டிலெனப்பிரித்து, அகரந்தொகுத்தல் விகாரமாகக்கொள்க. ** அறிவு இரண்டு - பாச அறிவு, பசுவறிவு.

போற்றுமறைகண்முழுதுணர்ந்துபொலியுங்கலைமாமகட்புணர்ந்து
சாற்றுஞ்சிருக்குமணிவடமுறபலவுந்தவாதுகைத்தாங்கி
யாற்றுஞ்சிருட்டிமுன்போலவாற்றியடுத்தார்வினையனைத்துங்
காற்றுநந்தாள்கருதிவாழென்றுகஞ்சன்றனைவிடுத்தான். (௧௪)

பொறியைப்புணர்ந்ததிகிரிமுதறபொலியைம்படையுங்கைத்தாங்கி
நெறியைக்கருதாவவுணருயிர்நீப்பச்சவட்டிமழுவொடுமான்
மறியைப்புணர்கைததலத்தொருநம்மலர்த்தாள்கருதியுலகோம்புங்
குறியைக்கொடுவாழெனறருளிக்கொண்[illegible]ன்மேனியனைவிடுத்தான. (௧௫)

வேறு,

மேகவாகனசசியொடுவிண்ணவர்வணங்க
நாகநாடுபல்வளததொடுமென்குகாத்திநிதி
வேசமாகவேழ்சாலுளாய்விண்ணவருண்ணும
பாகமேநதிமற்றவாவாக்குசவெனப்பசர்நத. (௧௬)

கூறறுமீயறஞ்செயார்களைக்குமைபெருநதவத்தோர
சாறறுமிநசமாயூரஞ்சாரநதார்களைததாழ்நீ
யேறறுவேறுனறுசெயயலையெனறுநினறிசையைப்
போற்றிவாழனெ நிருதியைபபாாததிருபுகனறு (௧௭)

வருணசேளுசிதறொலாமுசிராய்வயஙகப்
பொருணயந்துநீபுரிநதிடுவாயெனப்புகனறு
வெருவிலாஅவாவாயுவேமேதினிக்குயிராய்ப்
பருவமோர்நதுநீதகுதியிறபயிலெனபபகாநத. (௧௮)

அளகையாளியைநிதிக்கிறையாகெனவறைந்து
பளகிலாதவீசானனைபபாாத்தறுதடடா
தனாதரும்படிதண்டிதநுவருகெனச்சாறறிக்
கிளரநாலிருவோரையுமபேமுறவிடுத்தான். (௧௯)

பொருள்பெறததினகாபுகல்கருமசான்றாகி
யிருளறுத்துநீயியங்குபுவாழதியென்றியம்பித்
தெருண்மிகுத்திடுமதியமேயோடதிசெழிப்ப
வருண்மிகுந்திநீநனறுகாத்திடுகெனவறைநது. (௨௦)

இவவிரண்டுகோளொடுமறறுளவெழுகோளுஞ்
செவ்விதாகவோகூவுபுதிருநகி ரிரளி
லெவ்வமோவநீரிருநதுயிர்ினபமுறநன்புர
தெவ்வுமாறளிந்திடுகெனச்செபபினன்விடுத்தான். (௨௧)

வேறு·

உடுக்கணத்தைவிண்மீதிலுறுதிபெறவிருக்கென்றும்
வடுத்தவிர்பைநகொண்டலகளைமழைபொழிமினீரென்று
நடுக்குகுணுங்கினமுருவநண்ணுறுபயில்கவென்று
மடுத்தநதிகளைநீரோடமைநதறமாக்குகவென்றும். (௨௨)

வரைகளைப்பூதரமெனும்பேர்வயங்கவமருகவென்றும்
விரைமலர்ப்பல்வநங்களைப்புண்மிருகமோம்பிடுகவென்றுந
திரையெறிவாரியையளவில்செந்துகளோம்புகவென்றும்
புரையிலுலகங்களைநஞ்சத்தியாற்பொலிகவென்றும் (௨௩)

பலதலையசேடனைப்பார்பரித்தினிதுவசியென்றும்
பலமறையோர்களும்யாகம்பண்ணிவாழ்குகவென்றும்
புலவமரர்களும்யாகபலியுண்டுபொலிகவென்றும்
பலமறையுநம்முடையபடிவமாகுகவென்றும் (௨௪)

மருவுமிருதுகளாறும்வயங்குதேவுருவாகிப்
பொருவறவாழ்தரவென்றும்புண்மிருகமுதலான
வொருவில்பலவுயிர்களுக்குமுணவுமலிதரவென்றுங்
கருதியபற்பலவுமுளங்களிப்பவருளுபுவிடுந்தான். (௨௫)

நந்திமுதறகணத்தவரைநாடிவேறுறநோக்கி
யந்திமதிமிலைந்தநமக்கன்னியமில்லாநீவி
ரிந்தியம்வெல்யோகியாசேரித்தலத்தில்விதிப்படியே
முந்தியெமதருட்குறிகண்டேத்திடுமினெனமொழிந்தா. (௨௬)

அன்னதிருக்குறிதொறுநாமிடையறுதமர்கிறபோ
மென்னவரங்களுநீரோயாவருக்குமீயும்வர
முன்னமுதாதனமின்னுமொழிந்தனமென்றருளபுரிந்து
சொன்னமலைக்குழைத்தபிரான்றெழுமிலிங்கத்துட்புகுந்தான. (௨௭)

மலரோனுநெடுமாலும்வானுடர்கோமகனும்
புலராமற்றிமையோரும்பூரணன்பேரருணோக்கி
விலகாதபெருவரங்கண்மிகக்கொடுத்தபெருமானை
நலமாரும்வள்ளலென்றோர்நாமமுவந்திட்டழைந்தார் (௨௮)

தக்கனெனுங்கொடியனுமாங்கடைந்தவித்தடமூழ்கி
முக்கணுடைவள்ளல்பதமுருகலர்கள்கொடுபோற்றித்
தொக்கசிறுமைகடவிர்த்துதூயனுயவனருளுற
றக்கணமேசிவலோகத்தினிதமரும்பேறுற்றான். (௨௯)

பெருங்கருணைவள்ளலார்பேரருளைமிகப்புகழா
வொருங்குபலவானவருமுறைதத்தமிடம்புக்கார்
நெருங்குபுகழவளளலெனும்பெயர்நிகழ்தறகாரணமீ
தருங்குணாத்தெனறிடுமற்றைக்காதையினியறைகுவாம். (௩0)

மாயூரநாதாவள்ளலொன்னும்பெயாபெறறபடலம் முற்றிறறு.

ஆ திருவிருத்தம். ௬0௮.

தேவியாராதனைப்படலம்.

தரையாதியுலகனைத்தும்படைப்பாதியைந்துமொருதனிநின்றுற்ற
வுரையாதிகடந்தொளிரும்பரையாதியாயமருமொருத்திவெள்ளி
வரையாதியினுமவாய்மாயூரத்தலத்தமரும்வள்ளற்றேவைக்
கரையாதிநிகமாகமப்படிபூசனைபுரியுங்கருத்தளானாள். (௧)

பூப்பொலியுந்தோழியருமங்கைமுற்றொழியரும்புரிந்துசூழ
மாப்பொலியுமலர்ப்பிரமதடங்குடைந்துவெண்ணீறுவயங்கப்பூசி
மீப்பொலியும்பெரும்புகழ்சாலுருத்திராக்கமணிமாலைவிரவப்பூண்டு
நாப்பொலியுமைந்தெழுத்துங்கணித்தெழுந்துநந்தவனநண்ணினாளால். (௨)

தோழியராகியபலரும்படைக்கைகரங்கொண்டேவுந்தொழின்மேனிற்ப
வாழிபுடையுடுத்ததளைமகள்பதந்தீண்டிடுபெரும்பேறடைந்துள்ளோர்க
வாழிமறப்பகையனைத்தும்வளர்த்தோங்கவளர்த்ததிருமலர்க்கைகொண்டு
வீழிநறுங்கனிபுரையுஞ்செய்யவாய்க்கௌரிமலர்மிதப்பக்கொய்வாள். (௩)

நந்தியாவட்டமாமலகமாமந்தாரஞாழலொண்செவ்
வந்திபாடலங்கன்னிகாரமாதளைகுராவகுளம்வில்வஞ்
சிந்துவாரங்கடுக்கைதேங்கொன்றைநீர்முள்ளிசெவ்வகத்தி
சந்துகூதாளமராநீர்மிட்டான்வழைகாஞ்சிதண்புன்னாகம். (௪)

குருந்துபொன்னுவிளைபொன்னூமத்தைவன்னிகுசைகூத்தன்குதம்பைவேங்கை
செருந்திகொக்குமந்தாரையெண்மலரார்பலாசுபட்டிசெவ்வரத்தம்
பொருந்துபன்னீர்வெட்பாலையசோகம்வெள்ளிலோத்தம்விளாப்பூளைதான்றி
திருந்துதுரோணம்பருத்திமாவிலிங்கநாயுருவிசெழுஞ்சரோசம். (௫)

மருமருவின்கொழுந்தருக்கம்வெள்ளைக்காக்கணந்துழாய்மாயனகாந்தி
கருவிளங்குவளையாம்பல்சதகுப்பைசெங்கீரைகாந்தள்வெட்சி
யொருதளத்தாமரைகண்டங்கத்திரிமல்லிகைகிளுவையோங்குகோட்டம்
பொருவில்விலாமிச்சவேர்வெட்டிவேர்குச்சுப்புல்புலிதொடக்கி. (௬)

வழுதுணைவெற்றிலைமஞ்சணத்திசூரியகாந்திவாகைதாழை
கொழுவழிஞ்சில்கருஞ்செம்பைகடம்பறுகுகருங்காலிகுளவிநாவ
லெழுநரந்தமெலுமிச்சைபாரிசாதங்காரையிருங்கரந்தை
தழுவுபச்சைவதரிகாயாநாணனமயிலைநறுந்தாளிசாலி. (௭)

அலரிமுதற்பறபலவுநிரம்பவெடுத்தமைத்தொருதேத்தணுகிவைகி
வலரியலுமிண்டைகளுமாலைகளுந்தொங்கல்களும்வயங்குதண்டிற
பலரியையப்புனைவனவுமினும்வெவ்வேறுப்புரியும்பணியுநோக்கிச்
சிலரினியபல்வகையந்வேதனமுமமைமினெனச்செப்பிபபின்னா. (௮)

கதிரெழுமுனமஞ்சனநீர்வடிந்தெடுத்துப்புதுநிறையுட்கலக்ககொட்டி
முதிர்மணஞ்செயகருப்பூரம்பொடித்திட்டுமலர்வேருமுயங்கச்சேர்த்துப்
பிதிர்தலிலாவகையமைக்கச்சிறசிலரையேவிமணம்பிறங்குசந்த
மதிர்தரத்தேய்த்துருவிளையுங்கலந்தமைக்கச்சிற்சிலரையனுப்பினளால். (௯)

நறைகமழுஞ்செழுநயிலமினியதேனயிர்கனிகணல்லாவின்பால்
குறைவிறயிரகழைச்சாறுமுதலியவுமோரிடத்தேகுழுமச்சேர்த்து
நிறைதருவட்டகைகலசம்படலிகைகொப்பரிகும்பநிகழ்தூபககான்
முறையமையுந்தீபக்கான்முதலாயபறபலவுமுன்னியீட்டி. (௧௦)

குடைகொடிசாமரையாடிசிவிறிமுதற்பற்பலவுநலவச்சேர்த்து
மிடைதருபற்பலகாம்புமுதலாயபரிவட்டம்விளங்கவீட்டி
யடைமணிசெயகுண்டலங்கேயூரமரைஞாண்முதலாவனைத்துங்கொண்டே
யுடைதிரையினியமுழங்கப்பூசைசெயல்குறித்தெழுந்தாளுச்சிவேலை. (௧௧)

முன்போலநீராடிநீறுதிபுனைந்திறைவன்முன்புசென்று
மின்போலநுடங்கிடையாளவனனுஞ்ஞைபெற்றுளத்துவிருப்பமூறப்
பொன்போலப்பொலிபுண்ணியாகவாசனஞ்செய்துபொலிவுமேவத்
தன்போலவேறிலவள்கௌவியபூசனைபுரிந்தாடரணிவாழ. (௧௨)

சுவையமுதமோராந்தம்போற்றிநவகும்பமீதிற்தொழுதுமேலா
னவையகலவக்கினிகாரியம்புரிந்துவேழமுகநம்பனுதி
யவைவியக்குந்துவாரவானவர்பூசையாயவெலாமன்பினுற்றிக்
குவைமலர்வாணவரிறைப்பக்கருப்பகிரகம்புகுந்தாள்கொம்பர்போல்வாள். (கங)

தக்கவரநதிபூசைதகச்செய்துபூதசுத்திதானசுத்தி
மிக்கமனுச்சுத்திதிரவியசுத்தியிலிங்கசுத்திவிருப்பினுற்றி
நக்கபுகழ்ப்பாத்தியமாசமனமருக்கியம்பண்ணிநலம்விராய்த்தோ
முக்கவாதாரசத்திமுதற்சத்திமண்டலமீதுறப்பூசித்து. (கச)

உரைசெயுமர்வாகனமுந்தாபனமுமுள்ளத்தன்புறைப்பவாற்றி
வரைசெயுமையாறதன்மேலெட்டங்கநியாசமுநன்மாண்பினுற்றிக்
குறைசெய்சந்நிதானமொடுசந்நிரோதனமவகுண்டனமுஞ்செய்து
புரைசெயுமாநற்றேனுமுத்திரைமுற்பற்பலவும்பொருந்தநல்கி. (கரு)

தக்கவகைப்பாத்தியாசமனவருக்கியங்கொடுத்துத்தழைவிண்மேலு
மிக்கவியம்பலமுழங்கநறுந்தயிலமாநெல்லிவிளங்குமஞ்ச
ளொக்ககுடஞ்சுட்டுறுமைந்தைந்தமிர்தநறுநெய்பாறேயுந்தன்மை
புக்கதயிர்தேனயிர்வண்கதலிபலாச்சூதமிக்கிறபுரிந்தசாறு. (கசா)

நல்லவிலிகுசநரந்தநயக்குமாதுளைதமரநல்குசாறு
வல்லவிளநீரன்னஞ்சந்தனபனங்கங்கைமாண்பேயென்று
சொல்லவமைதருவில்வக்குழம்புசகத்திரதாரைசுடர்சிருங்கம்
பல்லவலம்புரியுரைத்தமுறையாட்டியாட்டுதொறும்பசுங்கொம்பன்னாள். (கஎ)

இடையிடையேசுத்தநீராட்டனிவேதனமாதியினியசெய்து
கடைமுறையொற்றுடையிட்டுப்பரிவட்டம்புனைந்துநூல்கவினச்சேர்த்து
மிடையுமணிமகுடம்பொற்குழைவாகுவலயமொளிவிளங்கச்செய்த
கிடைவயிரகடகமினிர்மதாணிமோதிரமரைஞாண்கெழுமச்சாத்தி. (கஅ)

வெள்ளியநீறணிந்துசாந்தணிந்துபலதொடைவகையும்விளங்கச்சூட்டி
யொள்ளியவாநறுந்தூபமொளிர்தீபமுறவயக்கியுதற்குமேலா
னள்ளியவண்டளவரும்பிற்பொலிசுத்தோதனம்பருப்புநயநதபொம்மல்
புள்ளியவண்குளச்சொன்றிபாலடிசிறிலமூரல்புளிசாலன்னம். (ககூ)

நாடுமரிசயினிநெய்சொட்டயிர்மிதவைததிமடைநன்னறுங்குய்மொய்த்து
நீடுபலகருனைசுவைப்பாகரில்லட்டுகந்தோசைநிரம்பவுள்ளாற்
கூடுசுவைமோதகமென்பிட்டுமுந்தவடைமற்றுங்குலவபூபந
தேடுமிளநீர்குளநீர்கனிநீர்நீர்மோர்சுத்தத்தெளிசானன்னிர். (உ0)

இன்னவைபற்பலவுமொவ்வொன்றுவிருப்பின்முகமனுடுமினிதினீந்த
பின்னருக்கியங்கொடுத்துத்தாம்பூலமுகவாசம்பேணிநல்கிப்
பொன்னவிர்தூபங்கொடுத்துமேலடுக்குத்தீபமுதற்பொருந்தாநின்ற
பன்னரும்பற்பலவாராதன்ம்புரிந்துநறியமணப்பலபூத்தூவி. (உக)

பாடுநீராஞ்சனஞ்செய்தபின்பளிதவிளக்கெடுத்துப்பருத்திவித்துங்
கூடுவேப்பிலையுமுறச்சூழ்ந்தேறிந்துநீறணிந்துகுலவுமாடி
நீடுவான்குடைகவரியாலவட்டஞ்சிவிறியிவைநேர்வயக்கி
யேடுசானறுமலரக்கதைசாத்தியருக்கியமுமீந்தபின்னர். (உஉ)

தூயமலர்பல்லவெடுத்தைதெழுத்துமுளத்தெண்ணியண்ணல்பாதந்
தோயநலமுறச்சாத்தித்தொழுதெழுந்துவெளிவந்துதொல்லோன்மேனி
யேயவொருதலத்தினமர்ந்திதயத்துக்குறித்திருந்தாளீனுதின்று
தூயமலரவன்முதலாம்பல்லுயிருமினிதோம்புஞ்சுகுணவல்லி. (உ௩)

இந்தவிதமிருந்தவள்பின்னெழுந்துவள்ளல்பிரசாதமெவர்க்குநல்கி
யந்தமிலான்முன்னிற்பவவ்விறைவன்வெளித்தோன்றியம்பிகாய்முன்
வந்தமயிறனக்கபயங்கொடுத்தனைநாமமுமதுவாமருவியார்க்கும்
பந்தமறுத்தெவ்வரமுமித்தலத்தெம்மோடமர்ந்துபாலிப்பாயால். (உ௪)

என்றுதிருவருள்புரிந்துமுதல்வன்புக்கமர்ந்தானவ்விலிங்கத்துள்ளால்
வென்றுமினிந்தோங்குமபயப்பிரதாம்பிகையெனும்பேர்விளங்கப்பூண்டு
குன்றுதலற்றெவ்வுயிருமீடேறப்பெருங்கருணைக்கோலங்கொண்டு
நன்றுமகிழ்ந்தினிதமர்வாண்ஞாலமுழுதீன்றளிக்குநம்பிராட்டி. (உ௫)

தேவிதிருவாராதனைப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம். சுஙங.

திருநடனப்படலம்.

இந்தவாறுளங்களிதரவமர்தருமிறைவியெம்பெருமாட்டி
சந்தமாமறைமுடிப்பொலிதருபெருந்தம்பிரானருள்போற்றி
யந்தமாதியிலாய்முன்மயூரமாயழகியநடஞ்செய்தாய்
பந்தமேவியதண்ணுமையாதியபலதமுவிலையனமே. (க)

உரைசெய்தண்ணுமையாதியபலதழீஇயொள்ளியமலர்மேலான்
றிரைசெய்பாற்கடற்பாயலான்முதலியதேவருமுனிவோரும்
வரைசெய்மண்ணுலகத்தவரியாவருமற்றுளாரெல்லாரும்
புரைசெயானந்தமருவியின்பமர்தரப்பொலிநடஞ்செயல்வேண்டும். (உ)

தில்லைமாநகர்மன்றினும்விசேடமித்தேத்தெனவுரைசெய்ய
வொல்லையிவ்வுருவடைந்தயான்கண்டுகண்டுளங்களித்திடயாருந்
தொல்லைவல்வினையிரிதரநோக்குபுதொழுதுகைகுவித்தேத்த
வெல்லையில்லவவருடியென்றிரந்திரந்திறைஞ்சினளதுகாலை. (௩)

ஆதிநாயகன்றிருவுளமிரங்கிநீயவாவியபடித்திமை
காதியோங்குமித்தலத்துநாந்தாண்டவங்கரிசறப்புரிகிற்பா
மோதிமாமுகில்புரைதருகௌரியாமுன்பொருட்டதனாலே
சோதியாகியகௌரிதாண்டவமெனச்சொலப்படுமெனக்கூறி. (௪)

நந்திவாண்முகநோக்கியித்தலத்தியாநடஞ்செய்வாமதுகாண
முந்தியாவரும்வரும்படிசெய்யெனமொழியமுற்றுவோகை
தந்தியாலெனப்பணிந்தெழுந்தியாவருஞ்சார்கவென்றுளத்துன்னக்
கந்திசூழுமாயூரத்தில்யாவருங்கடுகவநதடைகின்றார். (௫)

தந்தியூர்திறலிந்திரன்முதலியதந்திசைகாப்பாள
ருந்திபூத்தவனுந்தியினுதித்தவனும்பர்தானவர்சித்தர்
மந்தியாதுகற்றுயர்ந்தவித்தியாதரர்வயங்குகின்னரர்நாகர்
புந்திசாலியர்முதலளவில்லவர்பொள்ளெனப்புகுந்தாரால். (௬)

புக்கயாவரும்பாவநாசப்பெரும்புனலுறப்படிந்தாடித்
தக்கநீறுகண்மணிதரித்தெழுத்தைந்துந்தம்முள்ளத்துறவூன்றி
மிக்கவள்ளலாரஞ்சனயகிவர்மென்மலர்ப்பதம்போற்றி
யுக்கதீவினையாளராய்நடனமுள்ளுவந்துகாண்பானின்றார். (எ)

அம்மையாவருநடங்கண்டுபோந்திடவணைந்துளாரெனக்கூறச்
செம்மைநாயகன்மன்றமுண்டாமெனத்திருவுளங்கொளலோடும்
வெம்மைதீர்ந்துபல்கதிர்திரண்டமைந்தெனமேவியதொருமன்ற
மெம்மையாள்பவனத்தருமன்றமேலெழுந்தருளுபுநின்றான. (அ)

வலமலிந்ததோட்டிருநெடுமாலொளிர்மத்தளமதுதாக்கப்
புலமலிந்தநான்முகமுளான்றாளங்கைப்பொறுத்தொலியெழமோத
நலமலிந்ததேனெழுக்கெனத்தும்புருநாரதரிசைபாட
வலமலிந்தயோகியருளத்துறைபவனனநதநடஞ்செய்வான். (கூ)

மல்லல்வான்றவமுனிவரரரவொலிவயக்கியஞ்சலிசெய்யச்
செல்லறீர்ந்தனமென்றடியவரொலாஞ்சிநகையிற்களிப்பெய்த
வொல்லல்வாய்ந்தவேயங்குழன்முதற்கருவிகொண்டுரியரப்பணிசெய்ய
வல்லறீர்ந்தெமையாள்பெருங்கருணையானனநதநடஞ்செய்வான். (க0)

ஒருபுறத்துநின்றருள்பராபரைமுகத்தொளிர்விழிக்கடைசெல்ல
கருகிருட்பெருங்குறளவெரிந்மிசைவிழிசழலவோர்தாளுன்றிப்
பெருவனப்பொருதாண்மலர்குஞ்சிதபெறறியினெடுதடதோவா
வருள்சுரந்தெமைப்புரந்தருள்பரம்பரனனநதநடஞ்செயவான. (கக)

தோயும்வான்றமருகமொருகைததலததுழனிசெயதிடவோரகைக்
காயுமாரழலெழவிருகரத்தொன்றுகவியவொன்றமைவெய்தப்
பாயுமால்விடையரபுரகரவரபரவெனுந்துதிமல்க
வாயுமாமறைக்கதீதமாகியபிரானனநதநடஞ்செயவான். (க௨)

சடைகளெண்டிசைதடவரவெண்பிறைதண்புனலொடுதுள்ள
வுடையெனும்புலியதளரைவயங்கிடவொள்ளியதலைமாலை
மிடைபுயங்களிற்றுயல்வரக்குறுநகைமிளிர்ந்தசெவ்வாய்த்தோற்ற
வடையுமெம்மனோர்க்காரருள்சுரப்பவனனநதநடஞ்செயவான். (கந)

பொற்புமேவியசெவிக்குழைபசைதரப்புருவமுமுரிவெய்த
வற்புமேவியபிரணவமலர்ப்பெருமாலிகைமணமவீசக்
கற்புமேவியமறைச்சிலம்புண்மையிற்கலகலகலவென்ன
வற்புமேவியவுளங்குடிகொள்பவனனந்தநடஞ்செய்வான். (கச)

மறையுமற்றதனந்தமும்பந்தமின்மற்றுளகலையாவு
நிறையும்பூதமுங்கரணமும்பொறிகளுநிகழ்வற்றொளியாகி
யுறையும்பேதமுங்காலமும்விந்துவுமோங்குநாதமுந்தேற
தறையுமற்புதஞானரூபபிரானனந்தநடஞ்செய்வான். (கரு)

உரியவஞ்செழுத்தெட்டெழுத்தாறெழுத்தோங்குநாலெழுத்தப்பாற்
பிரியமிக்கபிஞ்செழுத்தெனயாவரும்பேசுமூவெழுத்தெல்லாந்
தெரியநின்றதாமீரொழுத்தோரொழுத்தென்னுமெண்டிறனுகி
யரியமாமறையந்தத்திற்பயில்பவனனந்தநடஞ்செய்வான். (கசு)

சிகரமாமுகங்கரமொண்டாடிருவுதரமகரந்திண்டோள்
வகரஞ்சென்னியசிதுடிகவிதருகைவகரமபயக்கைய
மகரம்வெங்குறணகரந்தீபிரணவம்வாசிகையதுவாக
வகரநேர்தரநிற்குமெம்மிறையவனானந்தநடஞ்செய்வான் (௧௭)

தோற்றமந்தமருகஞ்செயவபயஞ்சார்துதிக்கரம்பூவாற்ற
வேற்றசெந்தழனமுழுவதுமழித்திட விருங்குறள்வெரிநோர்தாண்
மாற்றருந்திரோபவஞ்செயவெடுத்ததாண்மதித்தனுக்கிரகிக்க
வாற்றன்மேயவெண்டோளுடையெம்பிரானானந்தநடஞ்செய்வான். (௧௮)

ஒன்றதாமலமிருவினைமூவகைமாயைமற்றுடலாகி
யென்றநான்கவத்தைகளைந்துமனுமுதலாறுமற்றிவ்வாறும்
பின்றவெண்ணுவார்புரிபணியொன்பதும்பிறங்குமொன்றெனும்பத்து
மன்றதென்றிடாவண்ணமொண்சபைப்பிரானானந்தநடஞ்செய்வான். (௧௯)

புண்ணியம்புணராநந்தநடநெடும்பொழுதிவ்வாறுறச்செய்ய
நண்ணியங்கமர்பிராட்டியுள்ளுவந்தனணான்முகன்முதலானோ
ரெண்ணிலின்பமுற்றாமெனத்தாழ்ந்தனரிறைவியுமிவ்வாறே
மண்ணிலெற்றைக்கும்வழங்குகவென்றனள்வள்ளலுமோமென்றான். (௨௦)

இருந்துதெய்வமாயூரத்திற்கௌரிதாண்டவதரிசனஞ்செய்வார்
பொருந்துபேற்றினையாவரோயறைகுவார்புண்டரீகத்தானுங்
கருந்துழாயனும்பணிந்துமைவதுவைநீகனிதரச்செயப்பெற்றா
லிருநதியாங்கள்கண்டுய்குவமென்றனரிசைந்தனன்பெருமானே. (௨௧)

திருநடனப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம். கூடுச

திருமணப்படலம்.

கண்ணந்தாமலர்க்கற்பகவேந்தனுந்
தண்ணந்தாமரைமேயதவத்தனும்
வெண்ணந்தாளொருகைத்தலவிண்டுவு
மெண்ணந்தான்மிக்கெழுமற்றையாவரும். (௧)

நடனங்கண்டுநனிமகிழ்பூத்தநா
மிடமருங்கமரோமுலகீன்றவ
ளுடனமர்ந்தொருவன்புரிமன்றலுந்
திடனமர்ந்துகண்டேத்துந்தவஞ்செய்தோம். (௨)

என்றுபேசியித்திங்களுமைப்பசி
நன்றுசெய்ததுநாடுந்தவமெனாக்
கன்றுதீர்ந்தமனத்துக்களிப்பினா
ரின்றுசெய்வனசெய்துமென்றெண்ணினார். (௩)

கற்றவிச்சுவகன்மனைக்கூயிவட்
பொற்றமன்றல்புரிதிருமண்டப
மற்றமில்வகையாக்குதியாலெனச்
சொற்றனர்தலைமேற்கொண்டுசூழ்ந்தனன். (௪)

நீலமாமணிவேதிநெடுநிலஞ்
சாலவாக்கித்தவாதமரகதக்
கோலமார்ந்துகுலவுபடிகீனு
மேலநாற்புறத்தும்மியையச்செயா. (ரு)

அந்தவேதிகைமேற்பளிங்காற்சுவர்
சந்தமார்தரநாற்புறத்துஞ்சமைத்
துநதவாயிலொருநான்கும்போக்குபு
நந்தவெண்ணில்சாலேகமுநாட்டினன். (சு)

ஆயவுள்ளிடத்தாயிரஞ்செம்மணி
மேயகும்பவடிநிலைமேறகொளத்
தூயவச்சிரச்சோதிபரப்பிடு
நேயவாயிரந்தூணநிறுவினன். (எ)

ஆநதத்தூண்மிசையம்பொன்செய்போதிகை
சந்தத்தாயதுலாமுஞ்சமைத்தன
னந்தச்செம்பவளஞ்செய்நலுத்திரம்
பநதத்தேய்ந்துபதியப்பொருத்தியே. (அ)

திருந்துமுத்திரமேற்றிகழ்மேதகம்
பொருநதுபல்சரம்பொற்பக்கிடத்தியல்
லருநதுமம்பொற்றகடுமிசைக்கொள
வருந்துதீர்தொழின்மாண்பிற்பரப்பினன். (௯)

நாப்பணம்பொறகுறடுநகச்செய்து
மீப்பல்செம்மணியாதிமிளிர்தரக்
கோப்பமைத்துக்குலாவுமடிநிலை
யாப்பமைந்ததூணன்கதன்மேனிறீஇ. (௧௦)

போதியுத்திரமாதிபொருந்தமுன்
னோதியாங்கொளிவீசவுஞற்றியே
சோதிமேவத்துலங்குவிமானமும்
பேதியாதுபிறஙகவியற்றினன். (௧௧)

சுற்றுமேவத்துலங்குகொடிங்கையி
னுற்றுநாலவொளிர்தரளத்தொடை
பற்றுசூஞ்சங்கணுப்பட்பயினறிடக்
கற்றுவல்லகருமணியறறினன். (௧௨)

இரசதத்தினியற்றியவுண்டைகள்
பரவியெங்கும்பண்பார்ந்திடத்தூக்கியே
விரவுசெம்பொன்விதானமுதலிய
வுரவின்மிக்கவையாவுமுறுத்தினன். (௧௩)

சோதிமண்டபஞ்சூழதரக்காவண
நீதிவானமறையநிரப்பியே
தீதிலாதவிதானஞ்செழுந்தொடை
யாதியாவுமமையப்பொருத்தியே. (௧௪)

காவணத்தமைகால்பலவறறினு, மாவணத்தகதலிவளக்கமைழ,
தூவணத்தகமுகுந்துறுத்துபு, பூவணத்ததொடையும்பொருத்தினன். (கரு)

அடியின்முத்தமண லளவில்லன, நெடியதாகப்பரப்பியிரப்பியே
யொடிவின்மண்டபத்தொண்மணிக்கம்பலம், படியவிட்டுப்பலவுமியற்றினன். ()

வந்துமாலயனுதியவானவர், முந்துநின்றுமுடி........னன்றனு
நந்துமோகையினன்கெழுந்தாரிரு, ஞந்துமறறதுநோக்கியுவந்தனர். (கஎ)

விண்ணின்மேயவர்யாவரும்பாதலக், கண்ணில்வாழ்பவர்யாருங்கடல்சுலா
மண்ணில்வாழ்க்கையர்யாரும்வரப்புரிந, தெண்ணிலாவுவப்பெய்திமுயலுவார்,

மண்ணுளாரென்றுமாமலர்க்கறபக, விண்ணுளாரொன்றுமேவரும்பாதலக்
கண்ணுளாரொன்றுங்காணிவரித்தனே. யெண்ணுளாரொனறுநதேர்தலங்கில்லேயே.

மாடமாளிகைமண்டபங்கோபுரங், கூடமேடைசெய்குன்றஞ்சதுக்கங்க
ளாடரங்கமணிமறுகாதியா, நீடவாய்ந்தநெருக்கமெண்வீழ்தரா. (உ0)

இன்னவாறுநெருக்கமியைதர, வன்னவாகனனுதியவானவர்
முன்னவன்கலியாணமுகுர்த்தநாள், சொன்னவந்நகர்தேற்றிடச்சூழுவார். (உக

இன்றுநாதன்றிருமணமெய்துமென், றென்றுகேள்விமாயூரத்துளார்க்கெலா
நனறுசொறறிந தமுறையாலெனுத், தொன்றுவள்ளுவறபார்த்திதுசொறறனர். ()

நாடுவள்ளுவனக்குநீராடுபு, கூடுநீறணிநதுண்டுகுலாய்ப்புனைந
தீடுசாலிபமேன்முரசேறறியே, பாடுமோகையினீதுபகருவான். (உ௩)

அஞ்சனுயகிபார்வள்ளலாரிவர், தஞ்சமாகமணம்புரிதன்மையா
லெஞ்சலினறிப்புனேமினிம்மாநகர்த், நஞ்சலினறித்தொழுவருவீரொன்றன். (உச)

என்றவார்த்தைசெவியகத்தேறலு, மொன்றயாவருமுள்ளங்களித்தனர்
வென்றமாதவமிக்குளோம்யாமெனு, வன்றம்மாநகரம்மணிவாரரோ. (உரு)

வேறு.

காவணமிடுவாருங்கண நிரைகோப்புண்ண
மாவணமாளிகைமேல்வண்கொடிநடுவாரு
தூவணமணிபொனனறதோரணம்புனேவாரும்
பூவணநறுமாலைபொலிதாரதொடுபபாரும். (உசா)

கன்னலுங்கதலிகளுங்காமுறுமமைசப்பாரு
மினனல்செய்பசும்பொன்சார்விதானங்களிசைப்பாரு
முன்னலதரிதென்னமுகந்துபொனனிறைப்பாரு
மின்னலென்பதுதீர்நததெங்குமென்றுரைப்பாரும். (உஎ)

கரிமிசைவருவாருங்கடுநடைவிறல்வாயாத
பரிமிசைவருவாரும்பார்கிழியுருள்பூண்ட
கிரிமிசைவருவாருங்கிளர்மணிச்சிவிகையெனு
மரிமிசைவருவாருமணிதல்கண்டுவப்பாரும். (உஅ)

அடிசில்கள்சமைப்பாருமந்தணர்க்கிடுவாரு
முடிவருந்தாம்பூலமுகந்தளர்கொடுப்பாருங்
கடிதலில்கருப்பூரக்கலவைகலவாரு
நொடிதலின்மலர்மாலேநோன்மையிற்றரிப்பாரும். (உக)

புதுக்கலன்புனைவாரும்புத்துடையுடுப்பாரு
மதுக்கமழ்மலர்க்கூந்தன்மகளிரைப்புனைவாரும்
விதுக்குறைநுதலார்தமியிர்நடங்காண்பாருஞ்
சதுக்கமுன்மறுகெங்குந்ததைதரப்பயில்வாரும். (௩௦)

வேறு.

ஆயினர்மைந்தர்மாதரத்தகுகாலத்தாங்கு
வேயினவயன்மாலாதிவிண்ணவரொருங்குகூடிப்
பாயினசீர்த்திவள்ளற்பரம்பரன்மணத்தின்முன்னுண்
மேயினமண்கவர்ந்துவித்துகள்வித்தினரால். (௩௧)

பணைபலமுழங்காநிற்கப்பன்மறையெழுந்துதுள்ள
விணையிலாப்பெருமான்றன்னையிலங்குபொற்பீடத்தேற்றி
யணைதருசெம்பொனன்னுணலங்கமுன்கையிற்சேர்த்திப்
பிணைதருவாழ்த்தெடுத்தார்பிரமன்முற்றேவர்யாரும். (௩௨)

புரிதருசடங்குமற்றும்பொலிதரச்செய்தபின்பு
வரிதருபணைமுழங்கமஞ்சனச்சாலைபுக்குத்
தெரிதருகங்கையாதித்தீர்த்தங்கள்பலவுங்கொண்டு
விரிதருமன்பினாட்டல்வேண்டினாரீதுசெய்வார். (௩௩)

அடிகள்செஞ்சடையும்புற்றோலாடையுமரவப்பூணுஞ்
செடிதருகபாலமாலைசெறியும்வெள்ளெற்புமாலை
முடியவுமொழித்துவேறோர்முழுக்கவினுருவங்கொள்ளி
னொடிவறயாங்குற்றேவலுஞற்றுதற்கழகாமென்றார். (௩௪)

என்றுவிண்ணப்பஞ்செய்யவடியவரெண்ணியாங்கே
நன்றுவந்தளித்தல்வல்லநம்பிரான்வள்ளறபுந்தே
னொன்றுமப்படியேயாதுமென்றொருவடிவங்கொண்டான்
கன்றுதறவிர்ந்தியாருங்கைகுவித்திறைஞ்சிநின்றார். (௩௫)

மறைமுடியிருக்குநதேவைமணிசெய்பொற்பீடத்தேற்றிக்
குறையறப்பூரித்துள்ளகும்பத்துநன்னீராட்டிக்
கறையிலொறறுடையிட்டாகனிந்துசுந்தரப்பேர்நம்பி
யிறையில்வட்டகையேந்தத்தொட்டியையநெற்றியினீறிட்டு. (௩௬)

புலியதள்பிணங்கிச்சேரப்பொருநறுதிக்கெட்டுமெண்ணை
நலிவறுசெம்பொன்னுடைநலத்தகமருங்கிற்சேர்த்தி
யொலிசெய்முற்செருக்கின்சீருமுற்றபிற்போக்கின்சீரு
மெலிவருமுகுநதற்கம்மாமிகுமயல்செய்யாநிறக. (௩௭)

முன்னிகழ்கரித்தோனீங்கிமுயலிநதுளம்புழுங்காநிற்கப்
பொன்வரைச்சிகரநின்றும்பொன்னரித்திழியாநிற்குந்
தன்னிகரருவிமானத்தனையொவ்வாச்செம்பொன்னுடை
மின்னியவுத்தரீயம்வெகுண்டிருளனைத்துமேய. (௩௮)

ஒழுகொளிபரபபுநதிங்களொளிர்சடைநின்றுஞ்சற்றே
வழுவிநெற்றியினுற்றென்னவயங்குபுண்டரவெண்ணீறுந
தழுவுமம்மதியின்பாங்கர்ச்சாரோகணியேயென்னக்
கெழுமணிகளாத்தசாந்தக்கேழ்கிளர்பொட்டுமின்ன. (௩௯)

ரநதிசடைக்காட்டோடுமறைந்தவண்மன்றநாய்ப
ரவுறமுடியின்மேலானுறுதலுங்கூடுமென்று
ரவுறுமதைமறைத்தபண்புபோன்முடியின்மேலால்
ரவுறவிளங்குங்காந்திமிளிர்மணிமகுடஞ்சேர்த்து. (௪௰)

டையெனுமிருக்கைதீர்ந்துதனியமர்கங்கைமங்கை*
இடைசெவியடைந்தேதேனும்விளம்பினுமேருவண்ண
டையவும்வயிரமாதியலங்குபன்மணிகால்யாத்த
புடையமர்செம்பொற்றோடுபொலியிருபாலுஞ்சேர்த்து. (௪௧)

தன்னைமுன்குழைத்துநாளுந்தவாதெழுவீக்கமாற்ற
பின்னைவென்றொளிர்மாமேருமேயபன்மணிகளோடு
மென்னையென்றெண்ணுவண்ணமியைந்துமேற்கவிந்ததொக்கும்
பொன்னைவென்றொளிருந்தோளிற்பொருத்தியமணிக்கேயூரம். (௪௨)

பிழையறியாதுசெய்யிற்பெருஞ்சினங்கொடுபல்பலுந்
தழையொளிவிழியும்போக்கறவிர்த்திடப்பன்னிரண்டு
விழைகதிர்களுஞ்சீராழிக்கடகமாய்விராய்முன்கையி
னுழைவிரல்களினுற்றென்னவுறைத்தவையொளிரச்சேர்த்து. (௪௩)

பன்றிமுன்கொடுத்தகோடும்பரந்தகச்சபத்தினோடுந
கன்றியவனப்புமார்பிற்றுலங்கமுத்தாரஞ்சாத்தி
வென்றியசெழும்பாலாழிகடுவெழுவெய்யோன்மான
வொன்றியவதற்குநாப்பணெண்மணிமதாணிசாத்தி. (௪௪)

திசையுடுத்தவையின்மாட்டுநேத்திரஞ்செறியச்சூழின்
வசையெனவிலக்கினுலும்விலக்குமற்றதுசெயாம
லசைவறப்பிடித்தல்போலவணிகெழுமுதரபந்த
மிசைதரவெடுத்துப்பூட்டியிருண்முழுதறுத்தபின்னை. (௪௫)

உலகில்யாவரும்யான்சொற்றவுரைவழிபற்றுவாரோ
விலகமேலுயர்வர்பற்றலிதுவெனத்தெரித்தல்போலக்
குலமறைஞெகிழியாகிக்கோலங்கொள்பாதம்பற்ற
வலர்தொடையெடுத்துத்தோளிலற்புதம்பொலியச்சேர்த்து. (௪௬)

இன்னுமற்றுள்ளயாவுமிமையவர்புனையப்பெற்று
மன்னுபேரழகுபொங்கமறைமுதனிற்றலோக்கி
முன்னுகண்ணெச்சில்போக்கிமுகுந்தனாதியவானோர்கள்
பன்னுமுண்மகிழ்ச்சிபொங்கப்பரவினர்வாழ்த்துகின்றார். (௪௭)

திருவுலாப்போதல்வேண்டுமென்றுவிண்ணப்பஞ்செய்து
மருவுலாங்கடுக்கைமாலைவள்ளலாருடன்பாடோர்ந்து
குருவுலாஞ்செம்பொன்மானங்கொணர்ந்தெதிர்நிறுத்தினார்க
ளுருவுலாமமராதியாவருமொருங்குமொய்த்தார். (௪௮)

முரசுதண்ணுமைதடாரிமொந்தைகல்லலகுபம்பை
விரசுபன்முருடுமற்றுமிளிர்தகுணிச்சமெல்லாம்
பரசுபல்கடலுமொன்றியார்த்தெனப்பரவியார்ப்ப
வரசுகுணத்தினோங்கிமற்றுளவனைத்துமார்ப்ப. (௪௯)

* இடைசெவி - என்பதில்சகாரந்தொகுத்தல்விகாரம்.

கொடிகுடையாலவட்டங்கோணியதண்டங்கோணாத்
தடிகிளரொலியலாதியாவையுந்தகைந்துமொய்ப்ப
நெடியவன்பிரமன்பாங்கர்நீட்டுகைமிசைக்கைவைத்துக்
கடியபாதுகைத்தாள்வைத்துநடந்தனன்கருணைமூர்த்தி. (௫0)

மறைமுடியமர்வான்வந்தான்மாயூரநாதன்வந்தா
னறைபெருங்கருணைச்செல்வியஞ்சனாயகியைவேட்கு
முறையுடன்மணாளன்வந்தான்மூவுலகாளிவந்தா
னிறையவன்வந்தான்வந்தானென்றுசின்னங்களார்ப்ப. (௫௧)

மறைபலமுழங்காநிற்கவானவர்பல்லாண்டோதக்
கறைதபுமுனிவரெல்லாங்கைதலைகுவித்துநிற்ப
நிறைபெருவிமானத்தேறிநிகழ்தரநடத்துங்காலைக்
குறைமதிநுதலார்யாருங்கூடுபுநோக்கினாரால். (௫௨

நோக்கியமடவார்தம்மைநோக்கினன்மாரவேளு
நோக்கியலனையான்கையிறேன்சிலைவிடுக்கும்பூவு
நோக்கியவுடைவாளென்றுநலல்விளைத்தாழம்பூவு
நோக்கியலவயன்மட்டுநோக்கிலானாகிச்செல்வான். (௫௩

கருங்குழற்பரமுநெஞ்சுங்கட்டவிழ்ந்துலைந்துசோர
நெருங்கியமுலையுங்கொண்டகாமமுநிமிர்ந்துவீங்க
மருங்குலுமுயிருந்தேம்பவரிவளையாழியாடை
யொருங்கிழப்புறறமாதருயிரிழப்பதற்குமுள்வார். (௫௪)

ஒருமடமயிலஞ்சாயலுமையைநீர்வளைவீரென்னிற
பருவமங்கையரோயாயயாமெலாம்படரின்மூழ்கி
வெருவரமையல்பூட்டல்வேண்டுமோவிதிதானீதோ
பொருவரும்வன்ப்புவாய்ந்தீர்புகலுவீரென்பார்மாதர். (௫௫

மயர்வுற்றமங்கைநல்லாளொருத்திமாதேவற்பாரா
வயர்வுற்றயானவாவுமதனைநீரளித்தல்செய்யீ
ருயர்புற்றீர்வறுமையீருமலீருமைவள்ளலென்றோர்
பெயர்வைத்துவிளித்தார்க்காணிற்பேசுதல்பலவுண்டென்றாள். (௫௬)

இளமுலைமங்கைநல்லாளொருத்தியெம்மிறைவன்முன்போய்க்
குளநடுவலர்ந்தசெங்கட்கமலத்தாற்கோலமார
னளவிரவழல்செய்தீரொன்றறைகுவர்நும்மையாரு
முளமமர்வில்லுமேவுமொழித்தெரித்தீரோவென்றாள். (௫௭

எண்ணியவெண்ணியாங்கேயடுத்தவரெய்தச்செய்யும்
புண்ணியமொன்றுநும்மையாவரும்புகழ்வார்பொய்யே
யெண்ணியவெண்ணியாங்கேயெனக்கருள்செய்யீரோனு
நண்ணியசிறிதுநல்கீரோனநவின்றனளோர்நங்கை. (௫௮

ஊற்றின்பவாரியாயவும்பர்நாயகன்முன்சென்று
பற்றின்பறுகூரவெண்ணும்பைந்தொடிக்கரத்தொருத்தி
முற்றின்பங்குறித்தீர்நம்மைமுயங்குமினென்பீரொற்குச்
சிற்றின்பஞ்செய்யார்நீரோபேரின்பஞ்செய்வீரென்றாள். (௫௯)

தளரிடையொசியக்கொங்கைபொருமிடச்சார்ந்தோர்மங்கை
கிளர்புகழ்மிகுமாயூரகேத்திரத்தும்மைக்கண்டோர்
விளர்தபுத்தெண்ணம்வாய்ப்பாரெனவிளம்பிடும்புராணம்
வளர்மயலெனக்குமட்டுமற்றதுபொய்யோவென்றாள். (சு0)

நிறைகருங்கூந்தற்செவ்வாய்நேரிழையொருமடந்தை
மறைபுணரொருதேர்வேட்டீர்மறைபுணரொருதேரொன்பான்
முறையுறவமையுமெனறுமொழியவும்வேளீர்நும்மைக்
குறைமதியுடையாரொன்றுகூறுதலொக்குமென்றாள். (சுக)

அருந்தியிற்றொருமடந்தையண்ணறன்னெதிர்சென்றோர்தேத்
தொருத்திபூமாலைசூட்டியுமைவனைவித்தாண்முன்னம்
பொருத்தியவதுபோலாதுபூமாலைசூட்டுவேனுன்
திருத்திகொண்டனங்கவேள்செய்சிறுமைதீர்த்தாளுமென்றாள். (சுஉ)

சினவிடையாளிமுன்னஞ்சென்றொருதெரிவைநின்று
மனவிடையாமையோடுவயக்கியமார்பீரென்னை
நனவிடைவந்துகூடீராயினுநள்ளிராவிற்
கனவிடைவருவீரப்பாற்காண்பனும்விரதமென்றாள். (சுங)

உவாமதிமுகத்துநல்லாளரிவையாங்கொருத்திநேர்ந்தென்
கவாறொருதிருப்பைஞ்ஞீலிக்கதலியேதோணெல்வேலித்
தவாதெழுகழையேயெனனிற்றழுவுறத்தடையொன்றுண்டோ
வவாவியதிருக்கநீர்பின்னளித்திடுபயனென்னென்றாள். (சுச)

தக்கன்மாட்டடைதல்கூடாதென்னவுந்தடுத்துச்சார்ந்த
பக்கமாமடநலாளைப்பரிந்தின்றுவதுவைசெய்வீர்
புக்கயான்மறுத்தல்செய்யேனென்னவும்பொருந்தல்செய்யீர்
தக்கதோவிதுவென்றேதித்தாழ்ந்தனளாங்கோர்தையல். (சுரு)

கண்ணகன்புவனமெல்லாங்காப்பவர்நீரோயென்பா
ரண்ணலங்கருப்புவில்லானடர்ந்தெனைவருத்தஞ்செய்யு
நண்ணருந்துயரங்காப்பார்மற்றெவர்நவிலுமென்றாள்
பண்ணலங்கனிந்தநீஞ்சொற்பைந்தொடியொருபொற்கொம்பு. (சுசு)

கொடுவிடமுண்ணப்பார்த்துக்கொண்டிருந்தவள்பால்வேட்கை
விடுவதுசெய்யீர்மேலுமேலுநீர்விழைதல்செய்வீர்
தொடுமுனம்யானுண்பேனென்றெழுமெனைத்தொடர்புகொள்ளீர்
படுவதீதழகோவென்றுபகர்ந்தனளங்கோர்மங்கை. (சுஎ)

ஒருபுறத்தொருத்திமேவவுவந்துநீர்வைத்திர்மற்றை
யொருபுறத்தென்னைவைப்பினுண்டாகுங்குற்றம்யாதே
பொருவருமுடம்புமுற்றும்பசந்ததும்பொருந்தக்காண்பீர்
பொருவிலீரொன்றுபோற்றிப்புகன்றனளெதிர்ந்தோர்மாது, (சுஅ)

உடைமுதலெவையுந்தோற்றேழும்பொருட்டாயகோல
மடையவுமுகத்துநோககாணேக்குமினதற்கொவ்வீரோன்
மிடையழனெற்றிநாட்டம்விழித்தேனுநோக்கல்செய்வீர்
புடைமழுப்படையீரொன்றுபுகன்றனள்சினந்தோர்பூவை. (சுகூ)

இவ்வண்ணம்பேதையாதிப்பேரினம்பெண்ணீருய
செவ்வண்ணமடவாரெல்லாஞ்செறிபெருங்காமமூழ்க
வெவ்வண்ணமாயினேருவிறைஞ்சிநின்றேத்தல்செய்ய
வவ்வண்ணமானேன்கோயிலணிகிளர்வாயில்வந்தான். (எ0)

மானநின்றிழிந்துமன்றன்மண்டபகாப்பணெய்தி
யூனமில்செம்பொற்பீடத்தும்பர்நாயகனிருந்தா
னனவப்பொழுதுபற்பலரமடமாதர்யாருங்
கானமுற்றழுவிநின்றுகவின்பெறநடித்தாரன்றே. (எக)

திருமகண்முதலோராய்தெய்வமின்னார்கள்பல்லோ
ரருமறைவாழ்த்துமல்கவான்றபல்லியமுமார்ப்பப்
பொருவருமுலகமீன்றாண்முன்கையிற்பொன்னாண்சேர்தநி
மருவுமஞ்சனச்சாலைக்குட்போயினார்மகிழ்ச்சிதுள்ள. (எஉ)

கருங்குழறகட்டவிழ்த்துக்கமழ்நறுந்தயிலம்பூசி
யொருங்குபல்விரையினோடுமுறுதுவர்பலவுமப்பி
யருங்குறைத்தென்னூநன்னீர்மஞ்சனமமையவாட்டி
மருங்குமொய்த்தகலாரெல்லாம்வயங்கவொற்றுடையிட்டார். (எங)

செறிபலபல்வாய்த்தந் ச்சீப்பெடுத்தொருங்குசீவிப்
பறிநிகர்சடையான்றேவியெனல்வெளிப்படுத்துவார்போ
னெறிதருஞ்சடையிற்றிகழ்தருநாகமாதிக்
குறிகொளுங்குஞ்சமீருக்கோப்பனபலவுங்கோத்து. (எச)

குழலெனுமிருளேவேறல்குறித்தசெங்கதிரும்வானத்
துழல்பிறைமதியுங்கூடியொருங்குவீற்றிருத்தலென்ன
வழல்படுகமலராகமலங்குவெண்டரளமேவி
நிழல்படுபணியிரண்டுநிலவுறமுன்னர்வைத்து. (எரு)

பிறைமிசைவானவில்லுபபிறங்குறக்கண்டாறபோல
நிறையொளிநுதலின்மேலாலிலம்பகநிலவச்சூட்டி
மறைபுகல்கற்புவாயநதமாதரார்திலகமாய
விறைவிதனெற்றிநாபபணிலஙகூவோர்திலகமிட்டு (எசு)

கருநதடங்கண்ணியெனறுகரைவதறகேற்பவேலை
பொருந்தடங்கண்ணினம்மவஞ்சனம்பொலியத்தீட்டித்
திருந்தியவாயோசெய்யபவளமோவெனத்தேர்பாக்குப்
பொருந்தியமுத்தமென்னமூக்கணிபொருந்தக்கோத்து. (எஎ)

முடிமிசையொருபெண்வைத்தானென்னெனின்முழுநீரொன்பான
கொடியிடையுடையானியேகுறிக்கொளென்றுணர்த்தும்பாக்கு
வடியிளங்கதிரிரண்டோரிருபாலுமருவியாங்குப்
படியில்செம்மணிகுயின்றகாதணிபலவுஞ்சேர்த்து. (எஅ)

கொடியெனத்துவளாநிற்குங்கோலமார்மருங்குல்சூழப்
படிபெறலரியசெய்யபட்டுடைகொய்துடுத்திக்
கடிதலில்கச்சுப்பூண்டுகவின்றதோண்மிசைமுன்றானை
வடிவமைந்திடச்சூழ்வித்துமருங்குற்பாற்செருகல்செய்து. (எகூ)

கொங்கையங்குவட்டுமேலாற்குலவிழுருவியென்ன
வங்கதிர்முத்தமாலையமைதரவெடுத்துப்பூண்டு
பங்கமில்கழுத்துச்சூழப்பற்பலபணியுஞ்சேர்த்துப்
பொங்குபொன்மணிசெய்கோவையாவையும்பொருந்தப்பூண்டு. (அ0)

இரவினுங்குவிதல்செய்யாக்கமலங்களிவையாமென்று
பரவிவந்ததிசயித்துப்பார்க்குஞ்செங்கதிரோபோல
வரமணிக்கடகமாதிவளைபலமுன்கைசேர்த்து
விரனிறைதரப்பொன்னுழிபற்பலவிளங்கக்கோத்து. (அக)

திருவளையொட்டியாணமேகலைசெழுங்கலாப
மொருவரும்பிறவுஞ்சேர்த்திட்டொளிகிளர்பாதசால
மருவியவனைத்தும்பூண்டுமணியாழிவிரலிற்கோத்துப்
பொருவரும்வனப்புநோக்கிப்போற்றிநின்றனரெல்லாரும். (அ௨)

கணிதநூல்வல்லமாநதர்காலமீதென்னவல்லே
பிணிவிசிவியமுழங்கப்பெருமறையார்ப்புமல்கத்
தணிவருமுலகமீன்றுதயங்குகற்பகப்பூங்கொம்பை
யணிபெறக்கொண்டுவந்தாங்கையன்மாட்டிருத்தினுரால். (அ௩)

இரவியுங்கதிரும்வேறுவேறிருந்தென்னமேய
பரமனையுமையைநோக்கிப்பங்கயத்தவன்மாலாதி
வரமிகுபுலவரொல்லாம்வாழ்ந்தனமென்றுதாழ்ந்தார்
திரமிகுமுவகைபொங்கவெழுந்தனன்செங்கண்மாயோன். (அச)

சுவைமதுப்பருக்கநல்கித்தொடங்குபாவனையில்பூசை
நவையறப்புரிநதுமுந்தைநாமமாதிகளுரைத்துச்
செவையுறுவள்ளல்கையிற்றிருத்தகைனனீர்வார்த்தா
னவையகத்துள்ளார்யாருமரகரகரவெனவுரைத்தார். (அரு)

செம்மலராளுமையன்குண்டத்துச்செந்தீயிட்டுக்
கைம்மலர்நிறையவோமகாட்டமுமுறித்துச்சேர்த்துப்
பொம்மலுற்றமைசிருக்குச்சிரவத்தானெய்பூரிப்ப
விம்மலுற்றெழுந்ததம்மாவேள்வித்தீவலஞ்சுழித்தே. (அசு)

ஆயபல்லியங்களார்ப்பவந்தணர்வாழ்த்துமல்க
மேயபன்மறைமுழங்கவிரும்புமூவுலகும்வாழத்
தூயமங்கலநாண்கையிறசுந்தரவள்ளல்கொண்டு
நாயகிதிருக்கழுத்தினலமுறப்பூட்டினுனே. (அஎ)

ஆர்த்தனதடாரிபேரியார்த்தனமுருடுமொநதை
யார்த்தனபடகந்தக்கையார்த்தனசின்னம்பீலி
யார்த்தனபம்பைசங்கமார்த்தனதாளம்வீணை
யார்த்தனமுனிவர்செவ்வாயார்த்தனமறைகளெல்லாம். (அஅ)

வள்ளலும்பிராட்டியங்கைமலரொருகையிற்பற்றி
யொள்ளழற்கடவுளுநதானென்பதானுவந்தருசூழ்ந்து
தெள்ளரிச்சிலம்பலம்பச்சேயிழையொடுநேர்நின்று
விள்ளலைக்குறித்திடாதவெண்பொரியட்டினுரால். (அகூ)

மங்கலமணுட்டிபாதமல்லொருகையாற்பற்றி
மங்கலவம்மிமேலான்மலர்ப்பரப்பியையவைத்து
மங்கலமடமீனேரேவந்தடிபணியக்காட்டி
மங்கலத்தவிசின்மேலான்மருவினனுலகம்வாழ்த்த. (௧0)

நத்தமென்றுரைக்குங்கூர்தனையகியோடும்வைகுஞ்
சுத்தமெய்ஞ்ஞானானந்தச்சுந்தரச்சோதிமுன்ன
ருத்தமவயன்மாலாதியும்பர்கடேர்வையோடு
முத்தவாலரிசிவாரிமுனிவறத்தூவிவாழ்ந்தார். (௧௧)

இருவரும்யானமேலாலியைந்துலாப்போதல்வேண்டும்
பருவருந்தன்மைநீங்கிப்பாரொலாமுய்யவென்ன
மருவருங்கடுக்கைமோலிவள்ளனுன்குறித்தவாறே
யொருவருமஞ்சலம்மையொடுமுலாப்போந்தானன்றே. (௧௨)

ஆரணமுடிக்குமெட்டானஞ்சனையகியையேட்டு
வாரணமாதிசெற்றமறுகுலாப்போதல்கண்ட
தாரணவியதோண்மைந்தர்தடங்கணுருவகைபூத்து
நீரணக்கும்பிட்டேத்தியிவையிவைநிகழ்த்தலுற்றார். (௧௩)

சீலமார்வள்ளலார்தந்திருக்கோலஞ்சிறந்ததென்பார்
கோலமாரஞ்சலம்மைகோலமேசிறந்ததென்பார்
மூலமாரிருவர்கோலமுழுமையுஞ்சிறப்பேயென்பார்
ஞாலமாரீதுகாணநாஞ்செய்ததவமென்னென்பார். (௧௪)

விழிபடைத்ததற்குப்பேறுமேதகப்பெற்றேமென்பார்
பழியிலிச்சன்மமேநற்பண்புகூர்சன்மமென்பார்
தழியமற்றிதுநோக்கார்தஞ்சன்மமேசன்மமென்பார்
கழிசுவையுடைத்தாலிந்தக்கல்யாணக்காட்சியென்பார். (௧௫)

சிலர்நறுமலரிறைப்பார்சிலர்செழும்பொரியிறைப்பார்
சிலர்நறும்புனலளாயசந்தனச்சேறிறைப்பார்
சிலர்பசும்பொன்னிறைப்பார்சிலரணிவிளக்கெடுப்பார்
சிலரரக்கமைந்தநீர்சுழற்றுபுகவிழ்த்தல்செய்வார். (௧௬)

இன்னணநகரம்வாழ்வோர்யாவருமின்பமெய்தக்
கன்னலங்குதலைச்செவ்வாய்க்காமருதோகையோடு
முன்னவன்வள்ளற்பெம்மான்முனிவருமுலாப்போந்துற்றுன
சொன்னமுமணியுமேயசுடர்ப்பெருங்கோயிலம்மா. (௧௭)

ஆங்குச்செய்சடங்குமுற்றுமழகுறச்செய்தபின்னை
யோங்குபேரிடபதீர்த்தத்துற்றுநீராடல்செய்து
வீங்குதன்மணத்துவந்தவேதன்மாலாதியோர்க்கும்
பாங்குசேர்விருந்துமுன்னுப்பலமுகமனுமன்காற்றி. (௧௮)

அவரவரிருக்கைசேரவிடைகொடுத்தனுப்பிப்பின்பு
கவீர்மனத்தடையாவையன்கருதிலிங்கத்தைமேவி
யிவர்பெருங்கருணையோடுமிருந்தனனிலகுவஞ்சிப்
பவர்புரைமருங்குற்செவ்வாய்ப்பைந்தொடித்தோகையன்னாள். (௧௧)

ஒருகரமபயஞ்செய்யவூருவிலொருகைவைத்தே
மருவுபல்லுயிர்க்குமின்பவாழ்வளித்தமர்ந்தானிந்தப்
பொருவருமன்றல்காண்போர்பொலிதரகடாத்துவோர்மெய்த்
திருவொடும்பொலிந்துபின்னர்ச்சிவகதியடைந்துவாழ்வார். (கoo)

திருமணப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம். எருச.

யானையுரித்தபடலம்.

இயங்குபல்லுயிருமேனையுயிர்களுமிரியாவின்ப
முயங்குமான்மியத்ததாகிமுழுமறைமுடியினுளுந்
தயங்குமுண்மையதேயாயதவாப்புகழ்மாயூரத்தின்
வயங்குதென்மேல்பாற்றாருவனமெனும்வனமொன்றுண்டால். (க)

அத்தருவனத்தில்வாழுமருந்தவமுனிவர்பல்லோர்
சுத்தவில்லொழுக்கம்பூண்டுகருமமேதுணிபாமன்றிச்
சத்தறிவின்பரூபத்தனிமுதல்வேறின்றென்னும்
வித்தகமருவிநின்றார்மேல்வரும்விளைவுதேறார். (உ)

அனையபன்முனிவர்தங்களில்லறக்கிழமையாளு
நனையமென்கூந்தற்செவ்வாய்ப்பார்ப்பனநல்லார்பல்லார்
புனையவாங்கற்புப்போலப்பொற்புமேம்பட்டோமென்று
ளினையயாவரையுமெள்ளித்தருக்குவாய்ந்திருப்பாரம்மா. (ங)

இருதிறத்தவருங்கொண்டவிருஞ்செருக்கொருங்குதேர்ந்து
பொருவருமகதிநல்யாழ்ப்புங்கவன்மாயூரஞ்சார்ந்
தருவுருமுபயமாயவண்ணலையடியிற்றாழ்ந்து
பெருகுமற்றவர்செருக்கின்பெருக்கம்விண்ணப்பஞ்செய்தான். (ச)

அன்னவன்செருக்குக்காண்டுமென்றவற்கருளிப்போக்கி
முன்னவன்மாயூரேசன்முகுந்தனைநினைத்தானம்மா
மன்னவன்வந்துதாழமாயமாதாகியாழோன்
சொன்னவன்முனிவர்பாற்போய்ச்சோதனைபுரிதியென்றான். (ரு)

என்றலும்வணங்கிமாயனெழுந்தனனஞ்சலம்மை
கன்றலில்கருணையேற்றுக்காமருமடந்தையாகி
மன்றல்செய்மலர்சூழ்தாருவனத்திடைச்சென்றாளாக
வொன்றல்செய்முனிவர்யாருமொருங்குகண்விடுத்துக்கண்டார். (சா)

காண்டலுங்கருப்புவில்லான்கணைக்கெலாமிலக்கமாகி
மூண்டவெங்காமம்பொங்கப்பருகுவார்போலமொய்த்துப்
பூண்டமால்யானையுண்டவெள்ளிலங்கனியேபோன்று
மாண்டதந்தவமுமுள்ளச்செருக்குமாண்டவரேயானார். (எ)

முலையொன்றேகண்டுசில்லோர்முரிதருபுருவமாய
சிலையொன்றேகண்டுசில்லோர்சிற்றிடையுடுக்கப்பட்ட
கலையொன்றேகண்டுசில்லோர்கலையுளுமணிகால்யாத்த
தலையொன்றேகண்டுசில்லோர்தவமொரீஇமயங்கிவீழ்ந்தார். (அ)

விழியினாலுடைந்தார்சில்லோர்கிளியினுமிழற்றுமின்றே
மொழியினாலுடைந்தார்சில்லோர்மோகஞ்செய்மேனிச்சாயற்
கழியினாலுடைந்தார்சில்லோர்கண்டனகவருமுந்திச்
சுழியினாலுடைந்தார்சில்லோர்தோற்றத்தாலுடைந்தார்சில்லோர். (௯)

முந்தியகடுப்பிற்சென்றுமோகினிவடிவங்கண்டு
பிந்தியநடையராகிப்பேதுற்றுநெஞ்சமாழ்ந
திந்தியமனைத்தும்வீழ்த்திச்செயலின்றியேங்கிவீழ்ந்தா
ருந்தியகருமமொன்றேயுறுபொருளெனக்கொண்டுள்ளார். (௧௦)

இவர்செயலின்னதாகவினியமாயூரமேய
பவர்படுசடிலமோலிப்பரம்பரன்வள்ளற்பெம்மான்
றவர்மனைக்கிழமைபூண்டுதருக்குமேன்மேலுங்கொள்ளு
மவர்திறமளக்குமாறோரழகியவுருவங்கொள்வான். (௧௧)

மன்னியகுறுக்கையினகண்மதனனையெரித்தபின்ன
முன்னியவனையான்செய்கையொருதானேசெயக்கொண்டாங்குத்
துன்னியவனந்தகோடிசூரியர்திரண்டாலொத்து
மின்னியவனப்புவாய்ந்துவிளங்குமோருருவங்கொள்வான. (௧௨)

எண்ணிலாவண்டத்துள்ளுமியைதரவியாபித்துள்ள
வெண்ணிலாவனப்புமுற்றுமெழுந்தொருங்குற்றாலென்ன
வெண்ணிலாவுயிர்களுக்குமெஞ்ஞான்றுங்களைகணாய
வெண்ணிலாமறைக்குமெட்டாணிலங்குமோருருவங்கொள்வான். (௧௩)

மாமருமதிகளங்கமாறிவநதிருந்தாலன்ன
காமருமுகமும்பொன்கடைந்தெடுத்தனையதோளும்
பூமருமாலைமார்பும்பொழிபெருங்கருணைக்கண்ணுந்
தூமருவியவெண்மூரறேற்றிடுஞ்செய்யவாயும். (௧௪)

அணிகெழுமுழந்தாடோயுமங்கையுமெழிற்கவானுங்
கணிகெழுசிறப்புவாய்ந்தகனைக்காலுங்கமலத்தோடு
பிணிகெழுதுயர்க்கணுழப்பிறங்குசெம்பதமுமற்றுங்
குணிகெழுமாமைசொட்டுங்கோசமும்பொலியநின்றன. (௧௫)

பனிமுகமலர்ச்சிகாட்டப்பவளவாய்கீதம்பாடத்
தனிறுதனீறுமல்கமணிக்குழைசெவியிற்சார
முனிவரைமயக்கிவீழ்த்தமோகினிமயங்கிவீழக்
கனியொளியலங்கிமின்னிக்கட்டழகெறிப்பநின்றான். (௧௬)

ஒருமேனிவீசாநின்றசேயொளியுலகமூடு
மிருண்மேயவெழுந்தகாலையிளங்கதிருதயஞ்செய்ய
வருமூரலொடுவெண்ணீறுமாமதியுதயஞ்செய்யத்
திருமேனியழகன்வேதம்பாதுகைசிவணிவேறி. (௧௭)

தமருகமொருகையார்ப்பப்பலிக்கலமொருகைதாங்கப்
பமரமுண்மலரிற்பாடும்பாட்டின்வாய்கீதம்பாட
வமருவந்தியமற்கோலையனுப்புமைக்கருங்கணல்லார்
தமரொடுவூர்முழுஞ்சேரிச்சார்ந்தனன்பலிகொள்வான்போல். (௧௮)

பயப்பயநடந்தபெம்மான்பார்ப்பனமடவார்வீதி
நயப்புறச்சேர்ந்துகையினகுதடிமுழக்கலோடுங்
கயப்பில்யாழோசைகேட்டவசுணங்கள்கடுகவந்து
முயக்குறல்போலவங்கைப்பலியொடுமொய்த்தார்மாதர். (௧௯)

பலியிடவந்தமாதர்பரம்பரன்முகமுங்கண்ணும்
வலிகெழுபுயமுமார்பும்வயங்குசெங்கையுங்காலும
பொலிதிருவரையுங்கோசப்பொற்புமற்றனைத்துநோக்கி
மெலிவருமயக்கம்பூண்டார்வேளுந்தன்வலிதெரிந்தான். (௨௦)

நடுக்கலெநெகிழ்ந்ததோராரநங்கையங்கொருத்திபிச்சை
யெடுக்கவந்தனையேலாடையின்றிவந்தனையென்னென்றாள்
கொடுக்கவந்தனையேனீயெக்கோலமாய்வந்தாயென்று
னுடுக்கைவிண்டதனையப்போதுணர்ந்தவனுணுக்கொண்டாள். (௨௧)

நள்ளியவளையும்வீக்குகலையுமேகலையுஞாலங்
கொள்ளியநெகிழ்நதுவீழ்ந்தகுறித்தவைசிறிதுநோக்காள்
வெள்ளியமுறுவரேற்றிப்பலிகொளமேயவைய
ளௌ்ளியகோசநோக்கியொருத்திகும்பிட்டுநின்றாள். (௨௨)

தண்ணியவடிகேள்யானுந்தனப்பிச்சைதருவேனென்னி
லண்ணியகலத்திலேற்றுக்கோடுமென்றறைந்தாளோர்பெ
ணெண்ணியமடவாய்நீயிங்கிரட்டுறமொழிதலாலே
கண்ணியவதுதேறேனென்றுரைத்தனன்கருணைமூர்த்தி. (௨௩)

கடுமிடற்றொளித்துநிற்குங்கடிளையோன்வதனநோக்கி
நடுவெனமேனிமுற்றுநலிந்திளைத்திடுமோர்மங்கை
யிடுபலிகொளவந்தீரோவெனனுயிர்ப்பலிமறறினனே
கொடுவெனக்கொளவந்திரோகூறுமின்குறித்ததெனறாள. (௨௪)

ஒருமடமங்கையெம்மானுருவெளிதோற்றக்கண்டப்
பொருவிலாவுருமுன்சென்றுபொள்ளெனக்கோடியின்னே
தருபலியென்றுசெங்கைத்தலக்கலத்திட்டாண்மண்வீழ்ந
தருவருப்படையப்பொள்ளற்கலங்கொலோவமைந்ததென்றாள். (௨௫)

பொன்னுடைப்பூணளங்கோர்பொனணிறையுருவந்தோன்ற
மன்னுடைக்கலத்திறசோறிட்டதுமண்ணில்வீழக்கண்டாங்
குன்னுடைக்கலமிக்கோட்டையுளதென்றாளிறைவனோட்டை
யென்னுடைக்கலமோபிச்சையிட்டநின்மனமோவென்றான். (௨௬)

ஒருமகள்கடிளைவாய்ச்சோற்றொடுவளையாழியிட்டு
மருமலர்க்கைகள்கூப்பிவணங்கிப்பின்னெழுந்துசொல்வா
ளருமையாயான்மாலானேன்வளையாழியளித்தாயென்னில்
வருகுறையில்லையென்றாளிடைக்குறைமாறுதென்றான். (௨௭)

காதல்கூரொருத்திநேரோகைகுவித்திறைஞ்சிச்சொல்வா
ளோதருன்யாதுக்குள்ளக்குறிப்பறிந்துடம்பாடெய்திப்
போதராய்நீயிரக்கமனமிலாய்போலுமென்றாண்
மாதராய்நாமிரக்கமனங்கொண்டேவந்தேமென்றான். (௨௮)

புள்ளவாமலர்மென்கூந்தற்பொற்றொடியொருத்தியாங்கே
நள்ளவாதரவுதோற்றிநண்ணவுமுணர்தலில்லா
யுள்ளவாறுணர்ந்தேன்பூண்மாலறியாய்கொலுரைத்தியென்றாள்
வள்ளலுயகனுமென்றுமாலறியான்யாமென்றான். (௨௯)

இனங்கிளர்மயிலஞ்சாயலேந்திழையொருமடந்தை
மனங்குழைந்தனைத்துநல்கவாஞ்சித்துநிற்பதோரா
தனங்கொளுவென்பாயன்னனங்கண்டறியாய்கொலென்றாள்
கனங்குழாயின்னுமன்னனங்கண்டறியான்யாமென்றான். (௩௦)

மாசற்றவடிவீரீங்குவந்துளீர்பயிக்கம்வேண்டி
யேசற்றகோசமூடலறமெனவிசைக்கும்போதே
தூசற்றவளிவ்வென்றுசொலக்கலையிழந்தாளோர்பெண்
ணூசற்றவனிதாய்நீயுமறமல்குன்மூடலென்றான். (௩௧

முதிர்மயலொருத்தியன்னமுகந்நகையேந்திஐய
னெதிருறவணையுங்காலையிடுக்கியுமுடுக்கைவீழ
வதிர்கழலான்பின்னிட்டானவள்பயந்தனையோவென்றாள்
கதிரிழாயல்குற்பாம்புகண்டுநான்பயந்தேனென்றான். (௩௨

பூணுருவொழிந்தவாங்கோர்பொன்னிறையெதிரோநோக்கி
யாணுருவொன்றுமின்றியானையுடம்பானேனென்று
ளேணுருவுடையானன்னளெதிர்நோக்கியான்முன்னேபெண்
மாணுருவொன்றுமன்றாவையுடம்பானேனென்றான். (௩௩

போனகங்கொள்ளவாதிர்பொலிதருசுவர்க்கமீது
வானகம்பதிப்பீர்கொல்லோவென்றொருமடந்தைகேட்டாள்
போனகம்விடமாக்கொண்டோன்பொலிதருசுவர்க்கமீது
வானகம்பதிப்பேன்போற்றிவழிபடுவோராயென்றான். (௩௪

மருவுலாங்கோதைக்கூந்தன்மடநலாளொருத்திவந்து
பொருவினும்மூரலென்றோர்புரஞ்சுடலென்னேயென்றாள்
வெருவினம்மூரன்முன்னம்புரமூன்றும்வேவச்சுட்ட
தருமையோபுரமொன்றின்றுசுடுதிறமென்றானையன். (௩௫

விரைக்கருங்கூந்தற்செவ்வாய்வெண்ணகையொருத்திநேர்வந்
துரைக்கரும்வனப்புவாய்ந்தவுத்தமவடிவுள்ளீர்நும்
மரைக்கலையெங்கேயென்றாளரைக்கலைமுடிமேலென்றான்
வரைக்கரும்பித்தரோவென்றாளதுவாய்மையென்றான். (௩௬

கொன்னவிலிடையான்முன்போய்க்கோற்றொடியொருத்திகண்டா
டன்னவையுடுக்கைநீத்தாடவைவிழுமிதைநீவாங்கி
யென்னவையுடுத்துசென்றாளுடுத்திடல்யான்கற்றன்றே
வுன்னவையுடுத்தல்செய்வேனென்றனனுயங்கினின்றாள். (௩௭

கயல்புரைகருங்கட்செவ்வாய்க்காரிகையொருத்தியோவா
வியல்கெழுமேனியான்முன்னியம்புவாளென்னைநோக்கால்
வியலுறச்சுடுவாய்மேலும்மெய்நடுக்கடைவானூற்ற
முயன்மதற்சுடுதியென்றுண்முன்னமேசுட்டோமென்றான். (௩௮

கொம்மையொண்மதியம்போலுங்குளிர்முகத்தொருத்திநேர்வந்
தும்மையானிருகப்புல்லியுகளவெம்முலைக்கோட்டானுஞ்
செம்மைசேர்மார்புந்தோளுங்குழைதரச்செய்வேனென்று
ளெம்மையாளுடையான்பாகமெய்யிலையேலாதென்றான். (௩௯)

தானெனச்செய்யவல்லான்சார்ந்தவர்தமையெலாநங்
கோனெனப்புகல்வர்மேலோரதுகுறித்துணரின்மெய்யே
மீனெனப்பிறழுங்கண்ணார்யாவருமேவிமேவி
யூனெனப்படுதம்மெய்யினுடையிலாதொழித்தீரால். (௪0)

வேறு.

வண்ணங்கிளர்குலமடவார்பலருமிவ்வண்ணந்தழைதரன்மலிகற்புத்
திண்ணங்குலைதரவவணின்றேகியொர்சிறையுற்றான்மறைமுறையுற்றான்
றணணம்புயமகடழுவுந்தனியொருதயலாடலின்மயன்முதிர்வுற்றே
யெண்ணந்தபவுயர்தவமுங்கெடவுடைமுனிவோர்யாவருமிதுதேர்வார். (௪௧)

நாமுந்தவநிலைகெட்டுக்குலைதரநம்மாதருமுயர்நிலையற்றுத்
தோமும்புனைதரவிதுசெய்தவனுயர்சூதப்பொழில்வளைமாயூரத்
தாமுஞ்சிறுமதியுங்கொக்கிறகுமலங்குஞ்சடைமுடியவனேயென்
றேமுந்துறமொழிமறைதேர்முனிவருடன்றாரழல்சினமுற்றாரே. (௪௨)

கொடுவெஞ்சினமலிதரலாலாங்கொருகுண்டஞ்செய்தனரழலிட்டார்
கடுவெம்பரிதிகணிம்பத்துறுநெய்கலந்திட்டனர்மனுமுறையோதித்
தொடுவெங்குழிநிறைதரமற்றுள்ளவுமிட்டார்துகளறமுயல்காலை
யடுவெங்களிறுசினத்தொன்றுர்தரவார்த்திட்டதுவெளிவந்தன்றே. (௪௩)

வருவெங்கடகரிதிசையிற்கரிகளும்வானக்கரியுமயங்குற்றுத்
தெருமந்துலைதரவுவராழித்தலைசிந்திக்கவிழ்தரவடிபேராப்
பொருமந்தகனுநடுங்கிப்புகல்புகுமிடமாய்தரமுகில்களினுள்ள
வுருமுங்கடிதுகவுரறுவெதிர்மலையுறுதூள்படவுழிதருமன்றே. (௪௪)

நீலப்பெருமலைபோலப்பொலிகருமுருவிற்றிருபிறைநிகர்கோட்ட
தேலப்புவிதடவந்தூசற்றிறமெனவாடுந்துளைபடுகைய
தாலத்தினுமுலகெல்லாமுலைதரவழலுங்கொடுமையதடுமூழிக்
காலத்தெழுகனல்குளிரக்கனல்சொரிநிரியாணத்ததுகருவேழம். (௪௫)

இத்தன்மையினெழுகொடுவேழத்தினையெம்மானெதிர்செலவிட்டார்க
ளத்தன்மையினுயிரொல்லாநிறைதருமண்ணற்பரமனுமதுகாணூஉ
மைத்தன்மையின்மலையெனநேர்வருமதமாமுன்வேறொருவடிவுற்றுக்
கைத்தன்மையின்வலிசிறிதேதீர்தருவகைக்காட்டத்திருவுளமதுகொண்டான். ()

அவ்வேலையினிஃதென்னுருவதெனவச்சுற்றஞ்சலணங்கோவாச்
செவ்வேலுடைமழவோடுஞ்சென்றுயர்தேவன்புடையொருசிறைநின்றுண்
மைவேலையின்வருகொடுவாரணமுயர்வள்ளற்பரனைவிழுங்கிற்று
லெவ்வேதமுநனிகதறப்பெருவலியிமையோர்களுமுளம்வெருவுற்றார். (௪௭)

கனிவாயிதழ்புடைபெயரக்கண்பிசைசேயுந்தாயையணைத்திட்ட
தினிநாம்யாதுசெயத்தக்கதுவெனவெங்கோமாட்டியுமச்சுற்றாள்
பனியாழித்தரைவாழ்மன்பதைபடுபாட்டைப்பகர்தரவல்லார்யார்
நனியாதரவுசெயெம்மானுண்மையைநாடித்தேறுநருள்ரேயோ. (௪௮)

மதவேழத்தினுரற்றனதனுடல்வகிராமேற்பொதியதன்கொண்டே
யிதமாமிதுவெனமெய்யிற்போர்த்திருண்மழைமூடியகதிரொனநின்றான்
சுதமேதினியுலகிற்கென்றமரர்கமோமலர்மழைநனிபெய்தார்
சதமாமகனயனெடுமாலிவரிவர்தாவாவுவகைதலைக்கொண்டார். (௪௯)

ஐயன்கொடுமதவேழத்துரியோடணைந்தான்வெளியெனமகிழ்வுற்றுக்
கையங்குலிகொடுகாட்டிற்றிளமுலைகண்டாளன்னையுமயர்வோப்பி
வையம்பொலியவுவந்தாள்பற்பலவுயிருநனிமனமகிழ்பூத்த
செய்யம்புயமலர்மதியங்கண்டதுசெத்துத்தவர்முகம்வாடுற்ற. (௫0)

வேறு.

கருமமேபொருளாக்கொண்டார்கருத்தின்மிக்கிலச்சைபூண்டு
தருமமால்விடையான்முன்னர்ச்சார்ந்துபொற்றாளின்விழ்ந்தே
யருமருந்தன்னாய்நின்னையறியாதுகெட்டேமெங்கள்
பொருமலந்தவிர்த்தாட்கோடியெனப்புகன்றிரந்துநின்றார். (௫௧)

மெலிதருமனையார்செய்தவிண்ணப்பஞ்செவிமடுத்துக்
கலிதருமுனிவீர்நம்மைப்பொருளெனக்கருத்துட்கொண்டு
பொலிதருமாயூரத்திற்புகுந்துநும்மடவாரோடும்
வலிதருநமைப்பூசித்துமருவுதிர்முத்தியென்றான். (௫௨)

என்றருள்செய்யக்கேட்டமுனிவரரிறைஞ்சிப்பின்னுங்
குன்றவிற்குழைத்தாயிந்தக்கோதிலாத்தானத்தெம்மை
வென்றமெய்க்கோலங்காட்டிவிளங்கிடவேண்டுமென்றா
ரன்றதற்கிரங்கியெங்கோனங்ஙனமாகவென்றான். (௫௩)

முனிவரர்மடவாரோடுமுழங்குமாயூரஞ்சார்ந்து
பனிமலர்ப்பிரமவாவிபடிந்துவெண்ணீறுபூசிக்
கனிதரவள்ளலாரையஞ்சனாயகியைக்கண்டு
துனிதவிர்தரப்பூசித்துத்தோலாதமுத்திபெற்றார். (௫௪)

முழுமறையுணர்ந்தார்கொண்டகோளுமொய்குழலார்கற்பும்
வழுவுகாரணத்தாலுமவ்வழுவூரென்றுரைப்பாரின்னுஞ்
செழுமதக்களிற்றைகீண்டுசெற்றலாலத்தானத்தை
யுழுவலன்புடையோர்வீரட்டானமென்றுரைசெய்வாரால். (௫௫)

பண்ணியதவத்தார்போற்றும்பறியல்வீரட்டானம்போற
புண்ணியவழுவூர்வீரட்டானமும்பொலிந்துமன்னு
நண்ணியவங்குச்சார்ந்துநலமுறவழிபாடாற்றுந
திண்ணியதவத்தோரெய்தும்பெருமையார்தெரிக்கற்பாலார். (௫௬)

பறியல்வாழ்மகசங்காரபத்திரப்பெருமான்போல
முறிகுலாஞ்சோலைசூழ்ந்தமுழுப்புகழ்வழுவூர்த்தேத்து
மறிவில்வெங்களிறுவென்றவலியுடைப்பிரானுமாதர்
செறிதருகற்புமாய்த்ததேவனும்பொலிந்துவாழ்வார். (௫௭)

மதமலையுரித்துப்போர்த்தவலியனைமாதர்கற்புச்
சுதமுறப்பயிக்கம்புக்கசுந்தரவடிவினானை
யிதமுறக்கண்டுபோற்றுமியல்பினரடையும்பேற்றை
யுதவியினியங்குமென்னாலொருங்குரையாடப்போமோ. (௫௮)

முனிவரர்வசித்ததானமொய்யழல்வளர்த்ததானங்
கனிதரமற்றும்பல்லகருமங்கள்செய்ததான
மினியவாயவ்வப்பேராலின்னமும்வழங்குமந்தத்
தனியமர்தானமெல்லாந்தம்பிரான்றனியுமேவும். (௫௯)

இனியமாயூரத்தானத்தெல்லைசூழ்யோசனைக்குட்
பணியவாஞ்செம்பொன்பள்ளிநனிபள்ளிபறியன்மூதூர்
முனிவர்சூழ்வழுவூரின்னமொய்புகழ்ப்பெருமையிற்றே
னனிசெயுமாயூரத்தினகுபுகழ்பேசற்பாற்றே. (௬௦)

யானையுரித்தபடலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம். ௮௧௪.

தலவிசேடப்படலம்.

கும்பிபாகமிரவுரவங்கொடியதவனம்வாலுகமே
வெம்புமசிபத்திரவனமேவீமோர்க்கடமேமகாசூலங்
கம்பித்திடுசான்மலிதத்தசூலங்காலசூத்திரமே
தம்பம்புரியுநிருச்சுவாசம்வைதரணிதத்தசிலை. (௧)

மலபூரணமூடிகாகூடமாருக்கயசோணிதகூப
மிலகாதெழுமூத்திரபானமிருகசோணிதகூபமெழ
லுலவாவன்னிசுவாலைசிலாவருடமுறுவாதாதிக்க
மலகீர்சுரதாரணம்வன்னிவருடமங்காரசயனமே. (௨)

கீலவருடம்பதனஞ்சுக்கிலபூரணமைப்பூரணமே
ஞலம்வெருவுந்தயிலவியநதரமேகுதிகானரம்பெடுத்தல்
சூலவாரோகணம்பாசபநதந்தூமபானமே
சாலநெடியதருவேற்றித்தள்ளறிரிகையிடைச்சுழற்றல். (௩)

நிலையாநீரிற்றள்ளிடுதலூசிநுனையினிறுத்திடுத
லுலையாச்சிதலையீயுறவியுருத்தேளரவுபுழுவருத்த
றுலையாதுறுப்பினூசிவிடறுக்கதரக்காதிகள்வருத்தல்
குலையாநடுங்கக்காய்தயிலங்குடிக்கச்செய்தன்முதலாக. (௪)

எண்ணிலாதகொடுநரகமின்னும்பலவாலியம்புநரார்
மண்ணிலமைந்துபாதகஞ்செய்மறவரோயிந்நரகடைவார்
கண்ணிலோரொண்பத்தாறுயிரம்யோசனைகள்கழியளவும்
புண்ணில்வாளிட்டெனவியவைத்தண்டம்பொருந்திப்போயதற்பின், (௫)

மலமூத்திரமாநரகத்தில்வருடம்பதினாயிரமுறுப்பி
னுலவாவூசிசெருகப்பட்டுடற்றும்புகையேயுண்டழுந்தி
நலவாசனையில்சண்டாளகோடிசன்மநயந்துதுயர்
கலவாவுழிதந்திடுமநதோகள்ளுண்டுழன்றகண்ணிலியே. (௬)

கொடியவிடமூடிகநரகங்கொள்ளப்பதினாயிரவருட
நெடியதுயரத்தொடுமழுந்திநீத்தமுடுத்தபுடவியிடைக்
கடியசிலைவேட்டுவனாகப்பிறந்துபிறந்துகழிதருவான்
படியவாவும்பொற்கரவுபண்ணுந்தீயபாதகனே. (௭)

குறியிலூசிபலசெருகக்கொடியகாலசூத்திரத்து
முறியநெடுநாளமூழ்கிப்பின்மூர்க்கவரக்கன்புலையனாய்
மறியுமரிட்டங்கோட்டானாய்க்கரமாய்நாயாய்வந்துழல்வா
னறிவிலவனுய்க்குருமனையையவாவிப்புணர்ந்தகொடியோனே. (அ)

பெற்றதாயைமூத்தாளைப்பிறங்கவுடன்வந்தவர்க்குரிமை
யுற்றதாரமடவாரையுஞற்றலரியவிட்டிசெயக்
கற்றமறையோர்பன்னியரைக்கற்புவழாதமங்கையரைச்
செற்றவுபாத்தியாயரிருதோடோய்நலத்துமங்கையரை. (கூ)

தந்தைகூடப்பிறந்தாரைத்தகுமாதுலர்தமனைவியரை
நிந்தையில்லாமாமியரைநிலவுஞ்சிறியதாயாரை
யந்தையகன்றகுருவீன்றவந்நலாரைப்புணர்கொடியோர
முந்தையாசானிறபுணர்ந்தமூர்க்கர்க்குரைத்தவெலாமுறுவார். (க0)

பந்திபேதஞ்செய்தல்குடும்பத்தில்வேறுவிதஞ்செய்து
முந்தியிருநதுபுசித்தல்சந்நியாசிகளைமொய்யிழிபுரைத்த
லந்திநிறத்தானடியாரையந்தணரைநிநதித்துரைத்த
னந்திநலமிக்குடையாரைப்பொல்லாதொன்றேநவின்றிடுதல். (கக)

மறையைவிற்றலிவைசெய்தோர்மகைறயோர்க்கொலைசெய்தவராவர்
முறையிலிவர்கள்கடுங்கும்பிபாகநரகமுயங்கியே
நிறையுந்துயரமனுபவித்துப்பின்புகிகழூர்ப்பன்றியாயக்
குறைவினூறுயுகம்பிறந்துபவ்வீக்குழிவீழ்நதுழிதருவார். (கஉ)

தத்தகுலம்யுகமொன்றுதமூவுங்கணிகையனம்புசிததோன்
சித்தமருண்டுமீனாயுஞ்செனித்துவலையன்கொலப்படுவா
னுத்தவினமல்லார்தமுணவுண்டோன்மதுபானியைநிகர்வான
முத்தநிகர்பற்பரமாதாமுயக்கங்குருவின்முயக்கமே. (கங)

பூத்தகாலமனையாளைப்புணர்ந்தானிரத்தகூபத்தில்
யாத்தநூறயுகமமூநதமிரியும்புலைச்சிமூலைதோய்ந்தான்
மூத்தவிருத்தயோனியிடைமுயங்கும்படிசுக்கிலங்கவிழ்த்தான்
சித்தகயினிமூலைதினைத்தான்வலிநதுபரமாதளைச்சேர்நதான. (கச)

இன்னகொடியபாதகத்தோர்நாயூனுகநூறெடுத்தருநதிப்
பின்னமருவிக்காலொடுகைபெயர்க்கக்கூடாவிதங்கிடப்பார்
சொன்னவிரதத்துபவாசத்தோகையரைச்சேர்ந்தவனுப்புத்
துன்னநிறைகூபத்திலுகநூளைநதுசெந்நாயாய்ப்பிறப்பான். (கரு)

மறையாளருக்கொன்றீவேனென்றுரைத்துப்பின்னர்மறுத்துரைத்தோன்
குறையாவசிபத்திரவனத்தேகிடநதுகுரைநாயாய்ப்பிறப்பா
னிறையாம்பரமனடியார்வேதியராக்களுக்கூறிழைத்திட்டோன்
மிறையார்சூலவளற்றழுநதிவேடனாய்ப்பின்புழிதருவான். (கசு)

நானம்பானந்தவமோமஞ்செபமற்றிவைகணவியூறு
மீனவிழைத்தோனுற்பதனமருவியளவாதுன்புற்றுப்
போனபின்னர்மூகையாய்வெதிராய்ப்புகலில்கோத்தையா
யீனமருவுமினும்பலவாய்த்தோன்றியர்தோவிழிதருவான். (கஎ)

நீதிநூல்சோதிட நூலேனைகழுங்கழுவர்யுரைக்குநூல்
பேதியாததரணிநூலிவற்றைப்பேதித்திடுபாவி
யோதியுணராப்பிரமகாதகனென்றுரைப்பாருறுநரக
மோதியலைப்பத்துன்புற்றுப்பின்புகழுதையாய்முளைப்பான் (கஅ)

பொருள்பெற்றனமென்றிறுமாக்கும்புன்மையானின்பொய்யுரைப்போ
னருளிற்பணித்தமந்தணத்தையாருமறியவெளிவிட்டோன்
மருளிற்றீர்ந்ததருமத்தைமதித்திடாதுநிந்தித்தோ
னிருளிற்பொலியும்பாடாண்டர்வேடமினிதென்றுறப்பூண்டோன். (க௯)

இனையரிழிநாயூனருந்தியெரிவெந்நிரையத்துகமழுந்திப்
புனையலாகாவிழிபறவையாகிப்பின்னர்ப்போதருவார்
நினையமுடியாப்பயம்பொருத்துநீசர்கோளர்நிறைதருதீ
வினையர்கொடுமூத்திரபானமெய்திமிருகமாய்ப்பிறப்பார். (உ0)

பதிதரன்னஞ்சூதகங்கோட்பட்டோரன்னம்புசித்திடுவார்
முதிருஞ்சுடுபாறையிற்கிடந்துமுற்றிமூகையாய்ப்பிறப்பார்
விதியிற்புசிக்குங்காலத்துவிழைந்துபூத்தவளைநாயைப்
பொதியப்பார்த்தோர்பேசிடுவோர்பொல்லாநரகத்தழுந்திடுவார். (உக)

பிரமசரியமனுட்டிப்போர்பிறங்கிருள்ளிமல்லிமுதற்
பரவுபிறவுங்கவர்த்திடுதல்பழுதாம்புசிக்குங்காலத்தில்
விரவப்பேசல்கோபித்தனசைத்தலிவையும்விரோதமாங்
கரவினுலோகஞ்சநதாதிகனிகாயமுதற்றெவ்வலும்பழுதே. (உஉ)

தந்தைதாய்க்குத்திதிகொடான்றக்ககாலங்கிரியைசெயான்
றந்தைதாய்வார்த்தையைக்கடப்பான்றன்னில்பிழைதீர்வுந்துறந்தோன்
றந்தைதாயர்பசித்திருக்கத்தானேயுண்பானன்றிகொன்றான்
றந்தைதாயர்முதுமையிடைததாங்காணிளையர்பாதகரே. (உங)

புத்தர்மனையுட்போனவனுமவர்சாத்திரமோர்புந்தியனு
மொத்தமறைநிந்தித்தவனுமுவக்குங்கொடையைத்தடுப்பானுஞ்
சுத்தமார்க்கம்விடுத்தானுமதிதிபூசைதொலைத்தானுஞ்
சத்தமகமைநதாற்றானுந்தாவாகொடும்பாதகராவார். (உச)

தேவாலயத்துமகச்சாலையிடத்துஞ்செந்தீயெதிரிடத்து
மோவாப்பசுங்கொட்டிலினிடத்துமுயர்பிப்பிலத்தினடியிடத்துந்
தாவாதுழுதபூமியினும்வன்மீகத்துநந்தனத்து
மாவார்தீர்த்தக்கரையினுமீரியக்கம்விடுத்தோர்களுமனையர். (உரு)

பருவர்திங்கட்பிறப்புவிதிபாதம்பகருமட்டமியே
மருவும்வைதிருதிசிறப்புவாய்ந்துவிளங்குஞ்சதுர்த்தசியே
பொருவில்விரதத்தினமிவற்றிற்பொருந்தமகளிர்முலைதோய்வார்
பெருகவிவைகண்டொருவரசர்பேசுமிவருமனையரே. (உசா)

தம்மையெடுத்துப்புகழ்ந்திடுவோர்தம்போனினையாதன்னியரை
வெம்மையுறநிந்தித்திடுவோர்வேதாதிகள்சொல்லியகருமஞ்
செம்மையுறச்செய்யாதொழிப்போரொடுத்தவிரதஞ்செயாதுவிட்டோர்
மும்மைப்புவனங்களுமிழிக்கமுடிந்தவிவருமவர்கண்டீர். (உஎ)

உரைத்தவிவர்மற்றிரவுரவமாதியொழியாநரகங்களுள்
புரைத்தமனத்தராய்த்திளைத்துப்புவியின்மீட்டுப்பிறந்திடுங்கால்
வரைத்தகுருடுசெவிடுமுதன்மற்றுமுறுப்புக்குறையாகிக்
குரைத்தபுலைவாய்ஞாளியினுமிழிந்துதுயரக்கோட்படுவார். (௨௮)

கொடியபாவம்புரிந்தொலாங்கொடியநரகெலாந்துளைந்து
கடியவிலங்குபறவைகளாய்ப்பிறந்துபிறந்துகழிந்ததற்பின்
முடியவுறுப்புக்குறையோராய்ப்பிறந்துபிறந்துமுடிந்திடுவா
ரொடியவுறுப்புக்குறைநீத்துநிலத்துமருவப்பிறந்ததலும். (௨௯)

பிறந்தபொழுதேகழிவாரும்பிறந்துசிலநாளிருந்துவனப்
புறந்தபொழுதேகழிவாருமொத்தவாயுளடைந்தாலு
மையகலாரியககோலத்தாங்கமர்நதானனையதுலாமதியினவானறேய்
சையுமிழிபொன்னியிடபத்துறையல்லாதுமந்தாகினிமுன்றுப
தையமையுநதிகளிபிறவினுமூழகார்வீட்டுநெறிகாமுறறேறோ. (௨௬)

உபதேசப்படலம் முறறிறறு.

ஆ திருவிருததம் ௧௪௨௮.

சத்தபுரப்படலம்.

பிராமியாதியசத்தமாதர்களெழுபேரும்
பராவுமாப்பெருங்கயிலையிறபரம்பரறபணிநது
விராவுமின்னையாமருச்சித்தல்விழைந்தனம்விமல
தராதலத்துயர்மான்மியத்தலமெதுவென்ன, (௧)

கடவுளுமயகனதுதிருவுளங்கொடுகரிசி
லிடபதீர்த்தத்தின்முழுகிமற்றதனருகிருக்குந
தடவுமாத்தலமேழினும்பூசனைசமைப்பி
னுடன்விராவுமெய்ப்பேறுமென்றுரைத்தனன்விடுத்தான். (௨)

விடுத்தமாதர்களெழுவருமேன்மைமாயூர
மடுத்துமான்மியவிடபதீர்த்தம்படிந்தாடித்
தொடுத்தகொன்றைசூழ்வள்ளலைத்துலங்கருளுருவ
மெடுத்தவஞ்சனாயகியைமிக்கிறைஞ்சினரேத்தி. (௩)

நெஞ்சநெக்கனருருகினர்நினைத்தவையனைத்துந்
தஞ்சமாகமற்றெய்துமாத்தலமிதுவென்றே
கஞ்சமாமலர்புரைதிருக்கரங்களிற்குருகின்
புஞ்சமாதரார்தனித்தனிப்பூசனைபுரிவார். (௪)

விரையமாமலர்சந்தனமிகுகுளிரடுத்த
தரையவாவுமஞ்சனநிவேதனந்தகவமைந்த
புரையபாத்திரம்பரிவட்டமுதலியபொற்ப
வுரையவாவுகோதில்லன்வீட்டினரொருங்கு. (௫)

பேசவாம்புகழ்ப்பிராமியென்றுரைப்பவடான்றேன்
றீசனாதனையிமையவர்வாழநஞ்சுண்டு
நாசமில்லியைநலந்தருபூசனையாற்றித்
தேசமைந்தபல்வரத்தொடுசிறப்பெலாம்பெற்றாள். (௬)

சிரத்துமாமதிசூடியதேவனைக்கருணை
புரத்துநாதனைப்புண்ணியமூர்த்தியைப்புகழ்சா
லுரத்துமேம்படுமயேச்சுரிபூசனையுஞற்றி
வரத்துமேதகுசிறப்பெலாம்பெற்றனள்வாழ்ந்தாள். (௭)

ஆறுசூடியையற்புதக்கூத்தனையவிர்கஞ்
சாறுமேவியசங்கரனறனைக்கவுமாரி
யூறுமன்பினிலொளிகெழுபூசனையுஞற்றி
யேறுபற்பலவரங்களுமின்புறப்பெற்றாள். (௮)

பரவுபுண்ணியநாதனைப்பசுபதீச்சரத்து
விரவுமாதியையடியருக்கெளியவேதியனைப்
புரவுபூண்டொளிர்வயிணவிபூசனைபுரிந்து
கரவுதீர்தருவரமெலாம்பெறறுளங்களித்தாள். (௯)

கரியின்றோறிருமேனியிற்கவினுறப்போர்த்தி
யரியின்கண்ணடியணிதருமண்ணலைச்சத்தி
புரியின்மேவியபொருளினைவாராகிபூசித்தா
டெரியின்மேம்படுவரமெலாஞ்சிறப்புறப்பெற்றாள். (௧௦)

கரம்விராயவச்சிரக்கவின்பெற்றவிந்திராணி
தரம்விராயபல்லுயிர்க்குநன்கருடிருத்தரும
புரம்விராயவற்புதனடிப்பூசனைபுரிந்தாள்
பரம்விராயபல்வரங்களும்பண்புறப்பெற்றாள். (௧௧)

பாரமேருவிற்பரமனைப்பரவுமுத்தரமா
யூரநாதனையும்பர்கடம்பெருமானைத்
தீரமேதகுசாமுண்டிபூசனைசெய்து
வாரமேயபல்வரங்களும்பெற்றுளமகிழ்ந்தாள். (௧௨)

இன்னவாறெழுமாதரும்பூசனையியற்றி
நன்னர்சேர்வரம்பெற்றனர்நயந்துளங்களித்தார்
சொன்னமாத்தலமேழுளொன்றண்ணுபுதுதிப்பா
ரொன்னராயினுமுயர்ந்துபேரின்பமுற்றிருப்பார். (௧௩)

சத்தபுரப்படலம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் ௧௪௪௧.

சுகந்தவனப்படலம்.

தீங்குமலிகொடியதொழிற்றிதிமைந்தர்பெருங்குலத்து
வீங்குபுகழிமையோர்தங்குலமனைத்தும்விதிர்விதிர்ப்பத்
தேங்குமறந்தலையெடுப்பவறஞ்சாயத்திறம்புதலி
னோங்குவிதலாசுரனென்றொருவன்முனமுளனானன. (௧)

அன்னவன்றன்குருவாயமழைக்கோடனடிவணங்கி
யென்னவடியேன்செய்பணியினிதருளவேண்டுமெனச்
சொன்னவனையவனுளத்துச்சூழ்ந்துமலரவறகுறித்து
நன்னாநெடுந்தவமாற்றிநல்வரங்கண்மிகப்பெறுதி. (௨)

பெற்றபினெண்டிசையினொடுபெருங்கடல்சூழ்மண்ணுலகுங்
கொற்றமிகுவிண்ணுலகுங்குறித்துவெகுண்டமராடி
யற்றமிலாவாகைபுனையபானின்வலிமாறறச்
செறறபொழின்மாயூரஞ்சேர்குவர்விண்ணுடொலாம். (௩)

அன்னதலம்புகுந்திடபதீர்த்தநீரவர்படிந்து
முன்னவனைவழிபட்டான்முடிகுவைநீயிதுசரத
மின்னதொழினிகழாமலியம்பியவத்தலத்தமர்ந்து
மன்னவவர்வரவொழித்துவாழென்றுவிடைகொடுத்தான். (௪)

குரவனெனும்பளிங்குறைமேறகொண்டனையானடிபணிந்து
கரவமையாவிடைபெற்றுக்கமலத்தோன்பதங்கருதிப்
பரவமருந்தவம்புரிந்தானபன்னெடுநாளதுகாலு உ
வுரவமையவவன்முன்னாத்தோன்றினனவ்வொண்மலரோன். (௫)

கஞ்சனெதிர்வரவுணர்ந்துகடிதெழுந்துபதமபணிய,
வஞ்சன்முகமவனோக்கிவாடினாய்தவம்புரிந்தே
நெஞ்சநினைந்தமையாதுநிகழ்த்துதிநல்குதுமென்றுன்
செஞ்சரணமறுவலுந்தாழ்ந்திதுகேட்குந்தீயவனே. (௬)

திரைவளையுமண்ணுலகுஞ்செம்பொன்செய்விண்ணுலகு
முரையமையவடிப்படுத்தற்கொததவலிதரல்வேண்டும்
விரையமையுநறுங்கமலமேலுறைவோயின்னமுமோர்
வரையமையாப்பெருஞ்செல்வம்பெறவும்வரந்தரல்வேண்டும். (௭)

இந்தவரங்கொடுத்தியெனவிரத்தலுநல்கினமென்று
கந்தமலரவன்மறைந்தான்களிப்படைந்தகொடுவிதலன்
முந்தவொருகுரவனடிமுண்டகத்துமுடிபொருத்தி
நந்தவரம்பெற்றவெலாநவின்றுவிடைகொண்டெழுந்தான். ௮)

உடைகடலிற்பெரும்படைகொண்டொய்யெனப்பூருவதிசைமுன்
னடைதருமெண்டிசைதொறுஞ்சென்றமராடிச்சயங்கொண்டு
மிடைவலியின்மண்முழுதும்வென்றுதாட்கீழ்ப்படுத்திப்
புடையமர்விண்ணாட்டிடத்தும்புக்கியற்றல்குறிக்கொண்டான். (௯)

எண்ணியவாறொருதானத்தெய்திணைறைகூவித்
திண்ணியவாளுடனொடுசெருச்செய்துவலிதொலைத்துக்
கண்ணியமாமலர்வாகைகல்லடுதிண்டோட்புனைந்தான்
பண்ணியமாதவம்போலப்பயன்படுதல்வேறுளதோ. (௧௰)

வாளுடுகைக்கொண்டவன்கண்விதலாசுரன்மற்
றாளுடுபடையமரொருமாயூரம்புகுந்து
தேனுடுகடுக்கையணிசிவனைவழிபடுவரெனத்
தாளுடுகுரவனுரைதப்பாதுநினைந்தனனே. (௧௧)

நினைந்தவுடன்மாயூரநெடியபடையொடும்புகுந்து
புனைந்ததிசைதொறுங்காவல்புகுத்தியகந்தானமார்ந்து
வனைந்தபுகழமராமுனிவரர்வருகையதுமாற்றி
நனைந்தகுணமில்லாதுநலிவுசெயத்தொடங்கினான். (௧௨)

நிறையுமகக்குழியினழனிகழாமலொருங்கவித்து
மறையவர்தம்வயிற்றழலும்வானவர்தம்வயிற்றழலுங்
குறைவுதவிர்ந்தெழவளர்த்தான்குண்டையமர்திருப்பொன்னித்
துறைமுழுகப்புகுவாரைத்துரந்துகடுந்துயர்செய்வான். (௧௩)

சாறுநடந்திடறவிர்த்துத்தகப்புரியுந்தருமத்திற
கூறுபலவுறநிகழ்த்தியுறுகொடுமையாற்றுதலின்
வேறுபலவுரைப்பதெவன்விசம்புகருகக்கொளற்விரைந்த
கூறுவறந்தலையெடுத்துக்குலவியதாலுலகனைத்தும். (௧௪)

வற்கடமேலோங்குதலும்வானோருமண்ணோருங்
கற்கடம்வாழ்முனிவோருங்கவன்றனராங்காங்கமர்ந்தே
நறகலைசேர்சடைமோலிவள்ளலார்நறுமலர்த்தா
ளொற்கமறத்தியானித்தேயுள்ளுருகியிதுமொழிவார். (௧௫)

ஐயனேமாயூரமடைந்துநினைவணங்காமல்
வெய்யனாகியவிதலன்வெங்காவலதுசெய்து
பொய்யவாமறநெறியேபுதுக்கினானறியாய்போற
செய்யநீயிருப்பதுவோதிருவுள்ளமிப்படியோ. (௧௬)

என்றுகசிந்திடுகாலைமாயூரத்தெம்பெருமான்
கன்றுமவர்துயர்க்கிரங்கிக்காப்பார்களுணராமல்
வென்றுமிளிர்திருமாலைவிரைவொடுதனபாலழைத்தே
யொன்றுதிறன்முதற்பலவுமுதவியீதுரைசெய்வான். (௧௭)

மாயனேவிதலனெனும்வல்லசுரன்றனைச்சவட்டித்
தீயுமறத்தரட்டடக்கிச்செம்மைபுரியென்றருளப்
பாயுபேருவகையொடும்பத்திமையிற்பணிந்தெழுந்து
நாயனேயருள்செய்பணிநாயினேன்றலைக்கொண்டேன். (௧௮)

இத்தலத்துவசிப்பதனுக்கெல்லாருங்காமுறுவார்
கைத்தலத்தாமலகமெனக்களிபயக்குங்காரணத்தா
லெத்தலத்தும்புகழ்படைத்தவீங்கியானமரும்வகை
யைத்தலப்பாப்பணிப்பரமபாங்குபெறவருளென்றான். (௧௯)

என்றுகரியோன்சொலச்சற்றெமக்குவடமேற்றிசையி
னொன்றுவளம்பொலிசுகந்தவனமெனவொன்றுண்டதன்க
ணன்றுமருவுகவென்றானாயினேனுய்ந்தேனென்
றன்றுதிகிரிப்படைமாலையனைத்தாழ்ந்தெழுந்தனனே. (௨௦)

விடைகொண்டுபுறம்போந்துவிண்ணவர்தங்கணமாயப்
படைகொண்டுபோராட்டிப்பூரந்தவவுணப்படையைத்
தொடைகொண்டுமிளிர்புயத்துநட்டவிதலனைச்சவட்டிக்
கடைகொண்டுமறங்கழியக்காற்றியறநிறுத்தினான். (௨௧)

சுகந்தவனமதுநண்ணித்தூக்கோயிலமைத்தன்பு
முகந்ததிருமகள்விடுவச்சேனன்முதலோர்நெருங்க
விகந்தகவலையனாகியெல்லாருமனமகிழத்
திகந்தமளவெழும்பெருஞ்சீர்த்திருநெடுமால்கண்வளர்வான். (௨௨)

தாவாததான்றோன்றீச்சரத்தமரும்பெருவாழ்வை
மூவாததனிமுதலைமுப்போதுந்தரிசித்துத்
தூவாதபெருங்களிபுத்தொடர்ந்தெழக்கண்வளர்தருவா
னோவாதமதுப்பொழியுமொண்டுழாயததோளவனே. (௨௩)

சுகந்தவனப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௪௬௪.

மாயூரவள்ளல்
நாற்றிசைவள்ளலாகியபடலம்.

அரிமுதலமரரெல்லாமபயமென்றடைந்தகாலை
கரியதளுரித்துப்போர்த்தகண்ணுதற்சாமிமேரு
வரிசிலைகுழையவாங்கிவாசுகிநெடுநாணப்பூட்டித்
திரிபுரமொருங்குவீயத்தீக்கணையொன்றுய்த்தானால். (௧)

கணைநுனைதாக்காமுன்னங்கடும்புரமாயமூன்று
மணைதருபூளைவீயேயாயினவதன்பின்னாகத்
துணைமுலைபிரதிராணிதுணைவனுமலரினானு
மிணையில்பொன்புணர்கோமானுமெரிக்கணைகாண்பான்புக்கார். (௨)

மன்னியவதிகைநின்றுந்தென்றிசைமருவப்புக்கார்
துன்னியகாடுநாடுந்தொகுவளக்குன்றுமற்று
முன்னியகடப்பினேடிமூரியங்கணைகாணாராய்
மின்னியபொன்னியாற்றுவடகரைமேவினாரால், (௩)

வடகரைமருங்குமேயமூவரும்வடியேவீழ்ந்த
தடநெடுவரைப்பிற்சாரும்வழிசற்றுந்தெரியாராகி
மடலவிழ்கொன்றைமாலைவெள்ளலேயோலமோல
முடனமர்மாயூரேசவோலமென்றிரங்கினின்றார். (௪)

சோதனக்கனைப்புக்கேட்டுக்குழைகுடஞ்சுட்டுப்போன்று
மாதனமேருக்கோட்டும்வள்ளல்பேரிரக்கமெய்தி
யாதனமலரோனாதிமூவர்க்குமருளிச்செய்வான்
சாதனமேவுமாங்கோர்கிராதனாய்ச்சார்ந்தானன்றே. (௫)

கிராதனாப்வந்தவையன்மூவர்முன்கெழுமச்சென்று
பராவுமித்தேத்துநீவிர்படர்ந்ததென்னுரைமினென்ன
வராவணைப்பெருமானாதிமூவருமவாவினோக்கிக்
கராசலவுரியில்வேடர்காவலற்பார்த்துச்சொல்வார். (௬)

திரிபுரமெய்தசோலித்தேத்திடைவிழுந்ததாக
வரிகழற்கிராதரோறேமற்றதுகாண்பானபுக்கேம்
புரிதருவழிகாணாதுபுத்தியுண்மயக்கம்பூண்டேந்
தெரிதரக்காட்டுவாயேற்செய்வதொன்றினியென்னென்றார். (௭)

என்றலுமார்க்கங்காட்டியெம்பிரான்முன்னேசெல்ல
மன்றலங்கற்பநாட்டுமன்னவன்முதன்மூவோரு
மன்றவன்பின்றொடர்ந்தாரடாந்தபுனனாகச்சோலைச்
சென்றனர்கிராதறகாணாசிவக்குறியொருகோல்கண்டார். (௮)

கழிகாட்டுமுவகையோராய்க்கைத்தலங்குவித்துப்போற்றி
வழிகாட்டும்வள்ளலோவென்றுரைத்தனர்வாளிபெற்றுக்
கொழிகாட்டுதம்மிருக்கைகூடினர்நீடிவாழ்ந்தார்
பழிகாட்டுபாவமெல்லாம்பாறுமத்தானத்தம்மா. (௯)

திருமகண்மகிடற்செற்றுடிகழெழுமாதரோரோழ்
பொருபரித்தேரோனெங்கள்புண்ணியவடுகப்புத்தேண்
மருமலர்க்கொண்டர்ச்சித்துவரம்பலபெற்றாராங்கு
வெருவறவினும்பூசித்தமேன்மையோரனேகரம்மா. (௧௦)

குடதிசைவள்ளன்மேன்மையிதுகுறிக்கொண்டுதேர்மின்
வடதிசைவள்ளன்மேன்மைமுன்னமேவகுத்துச்சொற்று
மிடபமுன்பெற்றாற்போலவெண்ணிலார்க்கருணீரா
லுடனமரவன்கைகாட்டுவள்ளலென்றொருபோபெற்றான். (௧௧)

மோனமுத்திரைக்கைகாட்டிமுழுதுணர்ஞானந்தன்பா
லானவர்க்கருளுமன்னான்மான்மியமறைவார்யாவ
ரீனமில்பேரானந்தமெய்திவாழ்குவரன்னானைச்
சானஞ்செய்பேறுவாய்ந்தாரொணிலினிச்சாற்றலென்னே. (௧௨)

தவநெறியென்றுமேலோர்தாங்கொளத்தக்கதாய
சிவநெறிதழைந்துவாழச்செறிபரசமயமென்னு
மவநெறியனைத்துந்தாழவருட்கிலக்காகியாமும்
பவநெறியதுதீர்ந்துய்யப்பாரொலாமுவகைதூங்க. (௧௩)

காழிமாநகரின்மேன்மைக்கவுணியர்குலத்துவந்த
வாழிமாமறையோர்தொண்டர்குழாத்தொடுமாயூரஞ்சார்ந்
தாழிமாயோற்குநல்குமண்ணலைத்தொழுவான்வந்தா
ரூழிநீருலாயதென்னப்பொன்னிநீருலாயதன்றே. (௧௪)

கடைமுடிமுதலாயுள்ளதலமெலாங்கண்டுபோற்றி
யுடையமாயூரநாதனொண்மலர்ப்பதங்கண்டேத்தற்
கடைவதுகருத்துட்கொண்டாரளவினீர்பரத்தலாலே
மிடைதிரைப்பொன்னியாறறுத்துறைவெளியாகக்காணார். (௧௫)

இறங்குமோர்துறைகாணாராயெண்ணிலாத்தொண்டரோடு
நிறங்கிளர்முந்நூன்மார்பினிகரிலாச்சண்பைவேந்த
ரறங்குடிகொளுமாயூரத்தண்ணலேயன்பர்வாழ்வே
மறங்குலாமழுவோயநின்னைத்தரிசிப்பான்வாஞ்சையுற்றேன். (௧௬)

அன்னதற்கிடையூறாகக்காவிரிபெருகிற்றைய
வின்னதுதுறையென்றோதற்கிங்கொருவரையுங்காணேன்
முன்னவகனைக்குமேலிட்டோடும்முழுநீரொன்னிற
பின்னெவன்செய்கேனென்றுபெட்புறவிரங்கினாரால். (௧௭)

அனையதுதெரிந்தவையனாங்குமோர்கிராதனாகித்
துணைதரவவர்முன்சென்றுதுறைகாட்டுவேன்யானென்று
புணைதரமுன்புசென்றான்பொள்ளெனப்பின்புசென்றா
ரணைதருந்தொண்டரோடுமழவிளங்குருளையாரே. (௧௮)

பாலறாவாயர்செல்லப்பரவியபொன்னியாற்றுச்
சேலறாநீர்கணைக்காலளவுசில்லிடத்தாயிற்று
மாலறாச்சில்லிடத்துமணறெரிந்தன்றுநோக்கி
நூலறாமானறோனமார்பர்நுவலருமுவகைபூத்தார். (௧௯)

தென்கரையேறுங்காலைச்செறிவிழன்மிகப்பரம்பி
நன்கமையோரிடத்துமறைந்தனனகுகிராதன்
பொன்கமழ்முளரிமார்பர்பொருக்கெனவச்சமெய்தி
யென்குலவிதுவென்றாயவிலிங்கமொன்றிருந்ததாங்கே. (௨௰)

துறைகாட்டுவள்ளலோவென்றிறைஞ்சினர்துதித்துப்பாடி
மறைகாட்டும்பவளவாயார்மாயூரம்வந்துதாழ்ந்து
நிறைகாட்டுபதிகம்பாடிநிகரிலானந்தமுற்றி
முறைகாட்டும்பிறதலங்கள்சேவிப்பான்முயன்றுசென்றார். (௨௧)

ஆண்டளப்பவன்மாயூரமடைந்தொருவள்ளல்பாதம
பூண்டனனிறைஞ்சிப்பன்னாட்பொற்பமைதவமுஞற்ற
நீண்டவனுணராமுக்கணின்மலனேரேதோன்றி
மாண்டநின்கருத்தவாவும்வரமெவனுரைத்தியென்றான். (௨௨)

விண்ணவர்குரவனாதல்வேட்டனனதனுக்கேற்ப
வண்ணநல்வாக்குநல்கவேண்டுமாதேவவென்றா
னெண்ணமைநமக்குத்தென்பாலெய்திநங்குறிபூசித்துக்
கண்ணமைதருவாக்காதியாவையுங்கைக்கொளென்றான். (௨௩)

அவ்வண்ணந்தென்பாலேகுமாண்டளப்பவன்கண்காணச்
செவ்வண்ணவள்ளலாங்கோர்சிவலிங்கமாயமர்ந்தான்
வெவ்வண்ணமுழூஉந்தீர்க்கும்வியாழமற்றதனைநோக்கி
யெவ்வண்ணமெனக்குமுன்வந்திங்கிருந்தனையாகென்றான். (௨௪)

விருப்பொடுபூசையாற்றிமேதகுவாக்குப்பெற்றுத்
திருப்பொலிவாக்குநல்கும்வள்ளலேயென்றுசெப்பி
மருக்கொடன்னுலகம்புக்கானவற்கருள்வள்ளலென்று
பெருக்கவெவ்வுலகமோதப்பிறங்கினனனையமூர்த்தி. (௨௫)

மன்னியபுகழ்மாயூரவள்ளலேயொருநாற்றிக்கு
மின்னியவள்ளலாகிவேறுவேறுயநாமம்
பன்னியவிளங்கினானிப்பண்புசாறலங்கண்டேத்துந்
துன்னியநவத்தார்பேறுசொற்றிடற்கடங்குங்கொல்லோ. (௨௬)

மாயூரவள்ளல்நாற்றிசைவள்ளலாகியபடலம் முற்றிற்று.
ஆ திருவிருத்தம் ௧௪௬௦.

விசுவநாதப்படலம்.

திரையெறிதெய்வக்கங்கைத்திருமகடன்பாற்கொண்ட
புரையெறிமோகந்தானேபுண்ணியப்பெருமாயூர
வுரையெறிசீர்த்திசான்றவொருதலந்தன்பாற்கொண்ட
கரையெறிகாதருந்தேவென்றேகருதநேற்றேம். (௧)

இரவிவண்டலாத்திற்செல்லுந்திங்களினிந்துவோடு
மிரவிசேர்தினத்துக்கங்கையிரம்புனற்பொன்னியாற்றி
னிரவலர்நிறையப்பூத்தவிடபவான்றுறைக்கணெய்த
விரவலரரியகாசிவிச்சுவநாதனெம்மான். (௨)

இந்திரன்முதலாம்வானோரிணர்மலர்மாரிபெய்யத்
துந்துமிபலவுமேங்கத்தொழுதுபன்முனிவர்வாழ்த்த
வந்தனனிடபதீர்த்தவளப்பெருந்துறைக்குத்தென்பா
லந்திலோரிலிங்கமாகியமர்ந்தனனுலகம்வாழ. (௩)

அன்னதுதெரிந்தவெங்களன்னபூரணியென்றோது
மின்னகுமருங்குற்செவ்வாய்விசாலநேத்திரத்தினாளும்
பன்னருஞ்சிலதிமார்கள்பாங்குறத்தொடர்ந்துவந்து
நன்னலக்கொழுநன்பாங்கர்நண்ணிவீற்றிருந்தாளன்றே. (௪)

இருமுதுகுரவரானோரிடபதீர்த்தத்தின்றென்பா
மருவுறக்கண்டதுண்டிவாரணமுகப்பிரானு
மொருவருங்கணங்கள்சூழவுறுவலியாகுவூர்ந்து
பொருவருமனையதானம்புக்கினிதமர்ந்தானன்றே. (௫)

இருவருமூத்தசேயுமெய்தியதெய்தநோக்கி
மருவருவலிசால்காலவயிரவப்பிரானுமோர்தன்
பொருவருங்கணங்கள்சூழப்பொருக்கெனப்புகுந்தோர்பாங்கர்
வெருவருஞ்சிறப்பின்மேவியினிதுவீற்றிருந்தான்மாதோ. (௬)

சூர்முதறுணித்தவென்றிச்சுடரிலைவேலோனுதிப்
போர்கெழுகணங்களெல்லாம்புக்கினிதமர்ந்ததோர்ந்து
பார்கெழுகையையுமாயோன்பாதமுமாலுமெய்திச்
சீர்பெறவமர்ந்தவம்மாசெப்புவதினிமற்றென்னே. (எ)

விச்சுவநாதனுதியாவருமேயதோர்ந்து
கச்சமில்பெருமைசான்றகாசியின்விசேடமாய
துச்சமிக்கோங்குமிம்மாயூரமென்றுவகைபூத்து
நிச்சயமுலகத்துள்ளார்காசியினேசநீத்தார். (அ)

எறிதிரைக்கங்கையாற்றினேறறமாமிடபதீர்த்தத்
தறிதரமுழுகியெங்களகிலநாயகன்பொற்றூளு
நெறியினிதருளவிசாலநேத்திரத்துமையாடாளுங்
குறிகொளுமறமேர்தாளுங்குணங்கொளப்பூசித்தேத்தி. (கூ)

பிதிரர்களுவக்குமாறுபெருங்கயைச்சிராத்தஞ்செய்து
மூதிர்தவத்தினருண்மேபமுன்னவன்மாயூரேச
னதிர்கழற்றூளும்போற்றியஞ்சனயகியைத்தாழ்ந்து
கதிரினும்விளக்கம்வாய்ந்துகளிப்பவரனேகரம்மா. (க0)

இடபதீர்த்தத்தின்மூழ்கியகிலநாயகனையேத்தித்
திடமுறுசிராத்தம்பிண்டதருப்பணமாங்குச்செய்வோர்
மடனமைபிதிரர்தம்மைவான்கனாயேறறிஞோராய்க்
கெடலருஞ்செல்வம்வாய்ந்துகெழுமவிறறிருப்பரன்றே. (கக)

விசுவநாதப்படலம் முற்றிறறு.

ஆ திருவிருத்தம் கரு0க

அட்டலிங்கப்படலம்.

கருதரும்பெருமைவாய்ந்தகவுரிமாயூரத்தெய்தி
மருதநன்னிலத்துவேந்தனுதியவானோரொண்ம
லோருதனிவள்ளலார்பாலுறுவரங்கொண்டனான்றுத
தருதகவாண்மையெண்ணித்தனித்தனிப்பூசித்தாரால். (க)

பூருவதிசையைநண்ணிப்பொருசதகோடிவேந்த
னுருவமானமில்லாவொருகுறிநிறுவியாரு
மாருவதாகத்தீர்த்தமகழ்ந்துதன்பெயரோயிட்டுக்
கூருவகையிற்பூசித்துக்கொண்டனன்வரங்கள்பல்ல. (உ)

தாலமேழுடையதேவன்றனக்குரியாசையெய்திக்
கோலமார்குறிதாபித்துத்தீர்த்தமுங்குலவத்தொட்டு
ஞாலமேத்திடுமோர்தன்பேர்நாட்டிப்பூசைசெய்து
பாலலோசனன்பாற்பெற்றுன்பற்பலவரமுமாதோ. (ரு)

செய்யகோல்செலுத்துவோன்றன்றிசையடைந்தடைந்துளோர்க்கு
வெய்யதீங்கறுக்குங்கோசம்வீதிவழுவாமலூன்றிப்
பொய்யவாவாததீர்த்தமகழ்ந்துதன்னுமம்பூட்டி
மொய்யவாமிகப்பூசித்துப்பெற்றனன்முனிவில்யாவும். (ச)

நிருதியென்றுரைக்கும்வல்லோனிலவுதென்றிசையின்மேவிச்
சுருதிபற்றிடுமோர்கோசந்தாபித்துத்தூயதீர்த்தந்
கருதியபடியேதொட்டுத்தன்பெயர்களுலச்சாத்தி
யொருதியக்கமுமில்லாதுபூசிந்தானூரவுபெற்றான். (௫)

நீரினுக்குரியவேந்தனிலவுதன்கருபமேவிச்
சீரினுக்கினியகோசந்திகழ்தரும்படிதாபித்துப்
பாரினுக்கினியதீர்த்தமகழ்ந்துதன்னாமம்பன்னி
நாரினுக்கினியபூசைநடாத்தியுள்ளுவப்புப்பெற்றான். (௬)

எறிவளிக்கடவுளென்பானிலங்குதன்காட்டைமேவி
யறிதருங்கோசந்தாபித்தரும்பெறற்புனலுந்தொட்டு
முறிவிறன்னாமஞ்சாத்திமுனிவரும்பூசையாற்றிப்
பறிநிகர்சடைப்பிரானூர்பரவருணிரம்பப்பெற்றான். (௭)

நிறைநிதிபெற்றசெல்வனிலவுமுத்தரப்பாலெய்திக்
குறையகறீர்த்தநதொட்டுக்கோசமுஞ்சிறப்பத்தாபித்
துறைதருதன்பேர்சாத்தியருச்சனைசெய்துபெறறு
னிறையவனுவநாநல்குமேற்றமார்வரங்கள்பல்ல. (௮)

ஏற்றமர்தருமீசானனிலங்குதன்றிசைக்கணெய்தி
டாற்றல்செயிலிங்கந்தாபித்தரும்பெறற்றீர்த்தநதொட்டு
மாற்றருந்தன்பேர்சாத்திமாண்புசால்பூசையாற்றிப்
பாற்றரும்வரங்களெம்மானருளிடப்பன்பிற்பெற்றான். (௯)

இவ்விதந்திருமாயூரத்தெண்டிசையினுமோரொண்ம
ரவ்வியமனுக்கும்பூசையாற்றினர்பேறுபெற்றார்
செவ்வியதீர்த்தமெட்டுஞ்சிவலிங்கமெட்டுநந்தாய்யு
வெவ்வினைகழியப்போற்றின்வீடுபேறடைவதுண்மை. (௧௦)

தலமெனுமிவைபோரொட்டிறசாற்றியதீர்த்தமெட்டு
நிலவியதளிகளெட்டுங்கரினமான்மியத்தவாருங்
கிலமுறிற்புதுக்குவோருங்கிளர்தரச்சிறப்பிபபோறு
முலவரும்போகநதுய்த்துமுத்தியீற்றுறூறாதலுண்மை. (௧௧)

அட்டலிங்கப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௩௫௧௨.

நாதசன்மன்
அனவித்தைமுத்தியடைந்தபடலம்.

கலத்தகையவெண்டரங்கக்கருங்கடல்சூழ்காசினியில்
வலத்தகையபெருந்தெய்வமறையொழுக்கம்பயினிட்டிற்
புலத்தகையவேதியர்தம்பொற்பமையுங்குலத்துதித்த
நலத்தகையவொருவனுளனாதசன்மனெனும்பெயரான். (௧)

காதலமைவெண்ணீறுங்கண்மணியுமெய்விளங்க
வோதலமையைந்தெழுத்துமோவாதுகணித்திடுவா
னாதலமையிட்டிபலவாற்றுவதல்லாமலும்வீண்
போதலமையாவினையேபுரிந்துநாள்கழித்திடுவான். (௨)

அன்னமறையவன்மனைவியனவித்தையெனும்பெயராள்
சொன்னநிகர்தருகுணத்தாயநெறிதலைநின்று
ளொன்னதவமுங்கொழுநனிரும்பணியாற்றுதலென்றே
மன்னமனனமைத்தொழுகுமாண்புடைமாதவளம்மா. (௩)

அனையமனையொடுநாதசனமனெனுமறிவுடையான்
புனையவமையில்லறத்துப்பொருநதியறம்பலவியற்றித்
துனையவுயர்புண்ணியத்தாற்சுரர்முனிவர்கொண்டாட
நினையவினியவனமருநிலவுகைலையையடைந்தான. (௪)

தரைபுகழுங்கைலையிடைச்சாலோகபதமடைநத
வுரைசிறந்தமாமறையோனுற்றபலநாள்கழிய
வரையியைந்ததனுவாகவளைத்தபிரானடிக்கலப்பிற
புரைவிளங்குபேரின்பம்புணர்வதனுக்குள்ளங்கொண்டான். (௫)

உளங்கொண்டமாமறையோனும்பருயவாலாலங்
களங்கொண்டபெருமான்பொற்கழலபணிநதுநாயடியேன்
வளங்கொண்டமனையொடுநின்மலரடியிறகலக்கும்வகை
குளங்கொண்டவிழியாயநீகுலவருள்செயயென்றிரநதான். (௬)

நாதசனமனெனுமறையோனயந்துபுரிவிண்ணப்பம்
போதவுருப்பெருமானார்புநதியுறக்கொண்டருளி
மேதருநம்மடிக்கலப்புவேணடுதியேற்புவியிடையுற
ரோதவுயர்தலநதருச்சிததுறுகவெனவிடைகொடுநதார். (௭)

கன்றுநெறுந்தமிர்க்கைக்கௌரியார்கண்காண
மன்றுடும்பெருமானைவணங்கியருள்விடைகொண்டு
நன்றுடுமெழிறகைலைநாயகமால்வரைநீங்கி
வெனறுடபடந்தாங்குவியனிலம்மலொடுமடைந்தான். (௮)

பன்னியொடுநிலததிழிநதபார்ப்பனோத்தமன்பெருமான்
மன்னியமாதலத்துளொநறுவாசியதெனறுராய்ந்து
முன்னியலையெறியுமணிமுத்தாறுசூழ்கிடநத
மின்னியொளிர்தருவிருததாசலநகரமேவினன் (௯)

முத்தாறுபடிநதெழுந்துமுற்படுவெண்ணீறணிநது
சததாறுநடையுடையான்மனையாட்டிதன்னொடுமுப
பத்தாறுகடநதபிரான்பதநதொழுதுபோற்றுபுமொய்த
துததாறுபடுங்கதலிசூழ்தருமாவயினமர்வான். (௧௦)

பெரியநாயகிமருவுபெருமானைவிருத்தகிரி
யுரியநாதனைப்பன்னாளோவாதுவழிபடலுங்
கரியமாலுணர்வருமக்கடவுள்வெளிப்பட்டெவருந்
தெரியநீயையாறறிற்சென்றுவழிபடுகென்றான். (௧௧)

எண்ணியதுபெறுவதற்காமிரும்பருவம்வரும்பொருட்டே
புண்ணியனையாற்றிற்போவென்றொன்றுவந்து
தண்ணியமாமறைக்குலத்தான்றன்மனைவியொடுமெழுந்து
கண்ணியவத்தலம்புகுநதான்கருத்தினதிசயம்பயப்ப. (௧௨)

மையாறுமுழுதொழிந்துமாருதபலமாய
கையாறுகடந்திடுவான்காதலித்ததிருமறையோ
னையாறுபுகுந்துவளமடங்கிலுநோக்கினனழகு
லைதயாறுமுகப்பெருமான்றுணையிருதாள்பணிந்தான். (௧௩)

மறம்வளர்த்தமலந்துமித்துமன்னுயிர்கட்கின்பருளுந்
திறம்வளர்த்தபெருங்கருணைச்செல்வியைப்பல்லுயிர்வாழ
வறம்வளர்த்தவுமையாளையையாறப்பனைப்போற்றி
நிறம்வளர்த்தபேரன்புநிகழவழிபடன்முயன்றான். (௧௪)

ஓவாதுவழிபடலுமொருதினத்துற்றவர்க்கேகை
தாவாதகருணைநனிசுரக்குநாயகர்தோன்றி
மேவாதவிடலரியவேதியநிற்கெவன்வேண்டுந்
தாவாதுகொடுத்துமெனாதருதியெனப்பணிந்துரைப்பான். (௧௫)

விளங்குபெருங்கங்கையினுமேலாயபெருந்தீர்த்தந்
துளங்குதவிர்தரமூழ்கித்தொகுபிதிரர்கரையேற
வளங்குலவுகயையடைந்துமாண்டசிராத்தம்புரிந்து
களங்குலவாவெழுமரதர்காதலித்தவிடம்போற்றி. (௧௬)

நல்லசிவஞானமரீஇநாடுசிவலிங்கநிறீஇ
யல்லகண்டமுழுதொழியவன்பினொராதித்துப்
புல்லகண்டத்தினுமினியாய்பொருநதுறநின்னடிக்கலப்பிற
செல்லவருள்புரிகென்றன்றேவேசரிஃதுரைப்பார். (௧௭)

எண்ணியவையொருங்கடைதற்கேற்றதலமிஃதன்று
தண்ணியமாயூரமொன்றேசாற்றுமிதற்கையமிலை
நண்ணியவத்தலவிருப்பாறுமுமுடன்வருகின்றேம்
பண்ணியமாதவத்தாய்பின்வருதியெனப்பகர்ந்தனரே. (௧௮)

கட்டளையிட்டருளியவாகடைப்பிடிப்பேனென்றுவந்து
சட்டவெழுந்தனன்மறையோன்றவாதமனைவியுந்தொடர்
வட்டமூர்த்தியுமுன்னரறம்வளர்த்தாளொடுநடந்து
பட்டநீர்மாயூரப்பச்சிமதிக்கினையடைந்தார். (௧௯)

மறையவனைமுகநோக்கிமாயூரத்தலமிதுவே
நிறைவிருப்பின்மனைவியொடுநீயிடபப்புனன்மூழ்கி
முறையுறத்தென்பாலடைந்துமுனிவில்சிராத்தம்புரிந்து
கறையகலவெழுதானங்கண்டேத்திவழிபட்டு. (௨௦)

உத்தரமாயூரத்திலுபதேசமதுபெற்றுச்
சித்தாபுகழ்தக்கணமாயூரத்திலுறச்சென்று
பத்தர்தொழுஞ்சிவலிங்கப்பதிட்டைசெய்துபூசித்து
முத்தனுயடிக்கலப்பின்முயங்குதியென்றருள்புரிந்தார் (௨௧)

அருள்புரியமறையவன்றாழ்ந்தையாற்றினமர்வதுபோற்
பொருள்புரியித்தலத்துநீர்புரிந்தருளவேண்டுமெனத்
தெருளமைநம்பெருமானுர்சிறப்பினமர்குதுமென்றார்
மருளமையாவேதியனைமனைவியொடும்பணிந்தெழுந்தான். (௨௨)

நாதசன்மன் அனவித்தை முத்தியடைந்த படலம்.

சிறந்தகாவிரியிடபதீர்த்தத்திற்படிந்தாடி
யறந்தவாத்தென்பாலுற்றகிலநாயகற்பணிந்தே
யுறந்தவானீழலின்கீழுறுபிண்டமிடலாதி
மறந்தபுயாவையும்புரிந்துமுழாருதவுப்பெய்தி. (௨௩)

மேதகுதான்றோன்றீசம்விளங்குகருணபுரமோ
வாதவளக்கஞ்சாறுவண்பசுபதீச்சரநற்
போதமெழவருள்சத்திபுரிதருமபுரம்பலரு
மோதவமைமான்மியஞ்சாலுத்தரமாயூரமே. (௨௪)

என்றுபுகறலமேழுமின்பநிறைசரப்போற்றிக்
குன்றுதலிலாசிரியன்குணைகழற்றொழுதெழுது
நன்றுமகிழ்ந்தருணைக்கநயந்துபுரிந்தருகிருந்தி
வென்றுமிளிர்சேவினுக்குவிருப்பினருளியபடியே. (௨௫)

பதியியன்முன்னொருமூன்றும்பொதுச்சிறப்பிற்பகுத்துணர்ந்தித்
துதியமையாமலங்கழித்திட்டருள்காணுநதுணிபியற்றி
மதியமையுமருளகலவயங்குபுதன்னொடுகலக்கும்
பொதிதருமின்பியைவாழ்வுபுணர்த்தமனையொடுஞ்சென்று. (௨௬)

தென்றிசைமாயூரமெனுந்திருத்தலத்தினகம்புகுந்து
நன்றிசையும்வள்ளலெனுநம்பிரான்மலர்ப்பதமும்
வென்றிசையும்பெருங்கருணையஞ்சலாண்மென்பதமுந்
துன்றிசையும்படிபோற்றித்தொழுதாடியுள்ளுருகி. (௨௭)

பன்னாளும்போற்றிசைப்பப்பருப்பதமீன்றருளஞ்சன
மின்னாளுமொருபாகன்வெளிவந்துமறையோய்நம்
முன்னாளுமிடப்புறத்தோர்முயற்குசிவக்குறிநிறுவிப்
பொன்னாளுமலர்கொண்டுபொற்புறப்பூசனைபுரிதி. (௨௮)

இடப்பாகத்தினிதமருமோர்திழைதன்வலப்பாணின்
மடப்பாவைக்குறிநிறுவியங்குபூசனைபுரிக
வடப்பாயலரியாதவானவருமனுகரிய
திடப்பான்மைப்பரமுத்திசின்னாளிலருள்செய்வோம் (௨௯)

என்றுவரங்கொடுத்தருளுமெம்பெருமானடிபணிந்து
நன்றுமறையவனின்னுநாயினேற்குதவிடுவ
தொன்றுநினைத்தரிசித்தோரோங்குறுமென்பெயரிலிங்கஞ்
சென்றுதரிசித்திடுமாதிருவருள்செய்திடல்வேண்டும். (௩௦)

என்றிரந்துவிண்ணப்பமினிதுறச்செய்திடுகாலை
நன்றமையுமனவித்தைநாதனடியிணையிறைஞ்சி
யொன்றுறுமென்பெயரிலிங்கமுமையைவழுத்தினர்வழுத்தக்
குன்றலிலாவரங்கொடுத்திகுழகாவென்றிரந்தனளே. (௩௧)

இரந்தபடியிருவருக்குமேற்றவரங்கொடுத்தருளிச்
சுரந்தவருண்முதல்பின்னுங்கருணையினாலிதுசொல்லும்
பரந்தவெமைத்தரிசித்தோர்றுங்கள்குறிபாராரேல்
வரந்தவருப்பயனடையாரென்றருளிமறைந்தனனால். (௩௨)

இறைவனருளியவிடத்தேயிருவர்களுங்குறிசிறவி
முறையமையவர்ச்சித்துமுற்றியபின்னுலகேத்தப்
பொறைமருவுமவ்வவர்செய்யிலிங்கத்துட்போய்ப்புகுந்தார்
குறைவிறவப்பார்ப்பானுங்கோகிலாப்பார்ப்பனியும். (௩௩)

மண்ணவர்களதிசயித்தார்வானவர்பூமழைபொழிந்தார்
வண்ணமறைக்குலநாதசன்மனெனுமாதவனு
மெண்ணருமெய்த்தவன்மனைவியனவித்தையென்பவளு
நண்ணரியசிவானந்தபோகமேநயந்தமர்ந்தார். (௩௪)

வள்ளறனைக்காண்போருமஞ்சலாண்மலர்ப்பாத
முள்ளமுறக்காண்போருமுவர்பூசைபுரியிலிங்க
நள்ளலுறக்காணுரோற்பலனிலராயநலிதருவார்
கள்ளமிலாமுனிவரர்காள்கருத்துறக்கொள்ளுதிரென்றான். (௩௫)

நாதசன்மன்அனவித்தைமுத்தியடைந்தபடலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௩௪௭.

ஐயாறப்பர்சிறப்புப்படலம்.

மாதவநாதசன்மமறையவன்றனக்குநல்கு
மேதகுவரத்தினலுமாயூரவிருப்பத்தானு
மாதரவையாறப்பரலங்குமையாறுநோக்கி
மேதகவுடனமர்ந்தார்விரும்புயிரனைத்தும்வாழ. (௧)

சத்தனெவ்வாறுமற்றைச்சத்தியுமவ்வாறெனனு
மொத்தநற்சுருதிக்கேற்பவுயிரெலாமுவகைபூப்ப
வந்தவெக்கலையும்வாழ்த்தவறம்வளர்த்தருளுஞ்செல்வி
மத்தகவிழிப்பிரானறன்மருங்குவந்தமர்ந்தாளன்றே. (௨)

இருவருந்திருமாயூரத்திங்ஙனமமர்தலோடும்
பொருவருமொருகோட்டண்ணல்புண்ணியமுருகப்புத்தேள்
வெருவரும்வடுகனந்தியாதியவிற்றகணங்க
ளொருவருமொழிதராமலொருங்குவந்திறுத்தாரன்றே. (௩)

வடகயிலாயமற்றைத்தென்கயிலாயமென்னு
மிடவியதலமிரண்டுமிண்டைமென்மலர்கள்பூத்து
மடவனமாதிமொய்த்ததீர்த்தமுமற்றையாவு
முடனொருங்கமர்ந்தவம்மாவொவ்வொருகூறதினுளே. (௪)

நாதசன்மாவுக்காகநல்லருள்சுரந்துமேய
வாதரவையாறப்பரடியருக்கெளியரென்று
மாதகவுடையரொன்றும்வழுத்தினார்க்கருள்வாரென்று
மோதல்செய்வார்த்தையெந்தவுலகமும்பரந்ததன்றே. (௫)

அடியருக்கெளியராகியணைந்தனரிவர்தாமென்பார்
முடிவின்மாயூரத்தாசைமுகிழ்த்தலினணைந்தாரென்பார்
வடிவமைதிருவையாற்றுள்வாஞ்சையுமுடைமையாலே
படியில்பச்சிமமுகம்பார்த்தமர்ந்தனர்பாரீரென்பார். (௬)

அணிதிகழையாறப்பரவாவியீங்கமர்தலாலே
பணிபுரியடியார்கூடிப்பைம்பொனுலையமுன்னுய
தணிவில்பற்பலவுமாக்கித்தவாதுசித்தியமுன்மூன்று
மெணியுறநடத்திவந்தாருலகெலாமுவகையெய்த. (எ)

நந்திதன்றிருக்கல்யாணவிழவெனநல்லோரேத்திட
புந்திசெய்சத்ததானவுலாப்புறமுதற்பொருந்து
மந்தில்பல்விழவுமாற்றியகங்குழைந்தன்புசெய்து
முந்தியொண்சிவலோகத்தைமுயங்கினர்பல்லோரம்மா. (அ)

பொருளபெறவேண்டினுலுமபுத்திரர்வேண்டினுலுங்
கருளறுசுவர்க்கமாதிகலந்திடவேண்டினுலுந்
தெருள்பெறவேண்டினுலுஞ்சிவானந்தப்பேறுநல்கு
மருள்பெறவேண்டினுலுமையாறப்பனைச்சார்வாரால். (௯)

அழகியவையாறப்பரறம்வளர்த்தவட்கருவ
பெழவபிடேகமாதிநிவேதனமீருச்செய்யுந
தொழவமைசிறப்புமுறறுந்தூய்மையிற்சிறப்பிப்போர்கள்
கழறராப்போகந்துய்த்துக்கைலையையடைவதுண்மை. (௧௦)

திருமுனொருபான்மெயதீர்த்தநீர்விதியிற்றேய்ந்தே
யருமறையவர்முன்னுயயாவர்க்குமியன்றதான
மொருமையினுதவிமை யாறப்பனையுவந்துபோற்றும்
பெருமையரெய்தும்பேற்றையாவரோபேசற்பாலார். (௧௧)

வழிவிடவந்தவையாறப்பருமாமாயூரந்
தழீஇயமாதருவிருப்பந்தாங்கிமேவுதறெரிந்தும்
பொழில்வளமலியந்தேத்துப்புணர்தரவிருப்பங்கொள்ளாக்
கழிமடர்க்கியாதுரைத்துங்காரியமில்லைமாதோ. (௧௨)

ஐயாறப்பர்சிறப்புப்படலம் முற்றிற்று.
ஆ. திருவிருத்தம் ௩௫௫௬.

இடபதீர்த்தமகத்துவப்படலம்.

முந்தொருகற்பந்தன்னின்மூன்றரைக்கோடிதீர்த்த
நந்துமொண்கயிலாயத்துநண்ணிமாதவமியற்றக்
கந்துகொல்களிற்றுப்போர்வைக்கண்ணுதற்சாமிதோன்றி
* யெந்திவண்முயலுமாறென்றியம்பிடவியம்புமன்றே. (௧)

பழுதறவுலகத்துள்ளோர்யாவரும்படிதலாலே
தழுவியபாவத்தோடந்தாங்கிமெய்கறுத்தோமெங்குக்
கழுவுவோமுரைத்தியென்னக்கடவுண்மாயூரமெய்தி
முழுகுமினிடபதீர்த்தமெனமொழிந்தனன்மறைந்தான். (௨)

அறமிளிர்தீர்த்தமெல்லாமரிட்டமுன்னுயபற்பல்
பறவைகளுருவங்கொண்டுபகர்ந்தவாமுழுகிப்பாவத்
துறவுபெற்றவ்வாறுண்டுதோறும்வந்தாடியாடி
யுறவுகொள்வள்ளல்பாதந்தொழுதொருங்குவக்குமாதோ. (௩)

---

* எந்து - திசைச்சொல் - என்னவென்பதுபொருள்.

ம்றையவனொருவன்ருயைப்புணர்ந்தவன்னரகந்துய்த்து
முறைசெய்முற்புண்ணியத்தாலிடபதீர்த்தத்தின்மூழ்கிக்
குறைவிலோர்மேடமாகப்பிறந்துமேற்கூறுந்தீர்த்தத்
துறையொருமயேசனென்பான்றுமகம்புரியுங்காலை. (௪)

தவலருமவ்வேள்விக்குத்தானுபயோகமாகி
யுவலரும்வள்ளலார்தநதிருவருளுக்கமெய்திக்
கவலருஞ்சுவர்க்கம்புக்குக்களித்துவாழ்ந்திருந்தானின்னு
மெவலரும்புகழுமந்தத்தீர்த்தச்சீரொண்ணலாமோ. (௫)

விலைமகள்சுதன்மையென்பாண்மிக்கெழிலொருத்திதன்பேர்
மலைவுறவதன்மையாகிமாறுருப்பிணிக்கோட்பட்டுச்
சுதமிறண்டகவனத்துச்சிவதாசன்சொல்லமேலாம்
பதமருளிடபதீர்த்தம்படிந்துநோயொழிந்துய்ந்தாளே. (௬)

இடபதீர்த்தத்துமூழ்கியினியபூதானஞ்செய்வார்
தடநெடுங்கயிலைசார்வார்தண்டுலம்பயறுமூந்து
விடலருமற்றுமுள்ளதானியவிதங்களீந்தார்
தொடர்வரும்பிரமலோகநதுன்னிவாழ்ந்திருப்பரன்றே. (௭)

முழுவெனத்தடித்துநீறுபூத்தகாய்முன்னிவீசிற்
றொழுவுயர்கதிரோன்வைப்புத்துன்னிவாழ்ந்திருப்பர்பொன்பூண்
டழகுசெய்மடந்தைநல்குமறிவினர்மகவான்வைப்பும்
பழகுருக்கலிங்கமீவோர்பனிக்கதிர்வைப்புஞ்சார்வார். (௮)

சொன்னதானம்புரிநதோர்தொடுகடலுலகமாள்வார்
பன்னவாநாளிகேரங்குளமுதற்பலவுமீவோ
ரன்னதானங்கள்செய்வோரரும்பெறற்போகந்துய்த்துப்
பின்னர்வான்கைலைமேவிப்பெருகவாழ்நதிருப்பரன்றே. (௯)

ஆதியிலொருகீற்பத்திலகலிடத்துயிர்களெல்லா
மோதியபெரும்பாவத்தின்முழுகினவாகிமல்க
மேதினிபிரந்தாங்காமன்மெஞ்மலரவன்பாற்கூற
வோதியவவனுமாயோனுழியடைந்துரைத்தானன்றே. (௧௦)

அன்னவன்கைலையெய்திபாயிரவருடம்வைகிப்
பன்னருந்தவங்களாற்றப்பரசிவனகாட்சிநல்கி
நன்னர்நின்கருத்தென்னென்னநாணிலத்துயிர்களெல்லா
முன்னரும்பெரும்பாவத்துமூழ்கினவென்றுதாழ்ந்தான். (௧௧)

கதியுயிரடையவேண்டிற்கருதுமாகமபுராணந்
துதிமறையனைத்தும்பறபல்பருப்பதசொருபமெய்திப்
பதிதரவமர்நதவன்னபலவுநீர்வடிவஞ்செய்வாம்
விதிவழிமுழுகிற்பாவம்வீயுமென்றுரைத்துப்பின்பு. (௧௨)

நீர்வடிவவைகளாகநினைந்தனையினைதலோடும்
பார்முழுகுறவிரிந்துபரந்தனவவற்றைநோக்கி
யேர்கெழுபத்துநூறியோசனையகலநீள
மார்தரச்சுருக்கஞ்செய்தானளவிலாவாற்றற்பெம்மான். (௧௩)

ஆப்புனலொருபெண்ணுமியரும்பெறற்கைலாயத்துஞ்
செப்பரும்வைகுந்தத்துந்திகழ்ந்தசத்தியலோகத்து
மொப்பறவீராறீராருண்டாகவுறைந்ததம்மா
விப்படியுறையுங்காலத்திசைத்தசத்தியலோகத்தில். (௧௪)

குறுமுனியாங்குச்சென்றுகோதையைநோக்கிவேட்ப
மறுவறுமுள்ளங்கொண்டான்மலரவனதுதெரிந்து
பெறுமுறைநின்கடத்துட்பெய்துகொண்டேகுகென்று
றுறுவகைபெய்துசையமுறறெருந்தான்வைத்தான். (௧௫)

ஆயிடைப்பலாசமொன்றிலிருடியரனேகர்வாழ்வார்
மேயினமகவான்றுமவிறகிறகாலிதனைவெட்டக்
காய்சினத்தரசுநீங்கக்கரைந்தனரனையரன்றான்
மேயபன்றுங்கினீவிராகெனவிளம்பினானே. (௧௬)

ஒழிதிறமெப்போதென்னவொருமுனியிங்குமேவும்
பழிதபுமவன்கடத்துப்புனல்படிறநீருமென்று
விழியுடல்வேந்தன்போனானீதுமுன்விளைந்ததிப்பாற்
பொழிபுனற்கடத்தின்மேலோர்காகம்போயேறிற்றன்றே. (௧௭)

முனிவனும்போபோவென்றுன்றுரீர்நமைச்சொன்னானென்
றுனிவிளைவொடும்வெளிக்கொண்டுற்றபன்றுங்கிரேய்ந்து
கனிதருவிருப்பினோடிக்கடன்மணம்புணர்ந்ததாங்கு
மணியபல்கலைகளெல்லாமாதவர்வடிவம்பெற்ற. (௧௮)

கடுகிநீரோடுங்காலைக்கவேரன்செய்மாதவத்தால்
வடிவிலோர்மகளாய்க்காவேரிப்பெயர்மருவிறறப்பாற்
படுசினமுனிவனந்தப்பரவையையுண்பானெண்ணி
முடுகினன்மாயூரத்துமுற்றிவள்ளலைச்சேவித்தான். (௧௯)

முன்னவன்றனித்துலோபாமுத்திரையணங்கைநல்கிப்
பனனருமிடபதீர்த்தப்பாங்குநல்வதுவையாற்ற
வன்னவன்மகிழ்ந்துபோனானன்றுதொட்டின்றுமந்த
நன்னர்சான்மன்றலாங்குநடந்திடுமுலகாதேற. (௨௦)

காசிபன்புதல்வர்வேண்டிக்கரிசிலாவிடபதீர்த்த
நேசியாவநதுமூழ்கக்காவேரிநேரோதோன்றி
வாசிசேர்புதல்வர்மேன்மேல்வந்துனக்குதிப்பர்நினசீர்த்
தேசியன்மனைவிமாலாமூழ்குமாசெப்புகென்று. (௨௧)

கலந்துநீமுழுகுந்தானங்கபிபதீர்த்தப்பேரா
னலந்தரவிளங்குமாங்குநண்ணுபுமூழ்குவோர்கள்
புலந்தகுசுகுணராயபுத்திரர்ப்பெறுவாரொனறு
நிலந்தழைவரமுநல்கிநிகரில்காவிரிமறைந்தாள். (௨௨)

அதிதியாடுபுமுப்பத்துமுக்கோடியமரர்த்தந்தா
டிதியுமாடினளிரட்டியவுணரைச்சேரவீன்றாண்
மதியமைகசைகீராடிமதகயமெட்டும்பெற்றாள்
விதிசெய்கத்துருவுமூழ்கிவியாளங்களைத்தும்பெற்றாள். (௨௩)

பெருமைசால்விநதைதாழ்கிமுட்டையோரிரண்டும்பெற்று
ளருமையோமைந்தனொன்னக்காசிபனவாவிநோக்கி
யொருமையாயிரம்மாண்டெல்லையுவற்றைநீகாப்புச்செய்யி
னிருமைமைந்தர்களுதிப்பாரெண்ணிலாவலியினென்றான். (உச)

மொழிவழிநிலாள்சின்னாளின்முட்டையொன்றுடைத்துப்பார்த்தாள்
பழிதபுமுருவில்லாமைந்தனைப்பார்த்துநொந்தா
ளழியமற்றொன்றுமிவ்வாறுக்கலையன்றுயென்னக்
கழியநாளுடைத்துப்பார்த்துக்கலுழனைக்கண்டுவந்தாள். (உரு)

மற்றுளமனைவிமாரும்வந்துவந்தாடியாடிப்
பெற்றுளமகவிற்கம்மாபேசுறுமவதியில்லை
கற்றுளதிசைகாப்பாளர்கலந்துவந்தாங்குமூழ்கிப்
பற்றுளவலியுந்தேசும்படைத்தனர்மேன்மேலம்மா. (உசா)

கதிர்மதியிரண்டுமூழ்கிக்கனசுமால்வரையைச்சூழு
மதிவலிபடைத்துவாழ்ந்தபுலத்தியனடைந்துமூழ்கி
மதிநலஞ்சிறந்தோனுயவிச்சிரவாவைப்பெற்றான்
றுதிகெழுமனையான்மூழ்கிக்குபேரனைத்துணிந்துபெற்றான். (உஎ)

முண்டகமலர்மேலண்ணன்மூழ்குபுசனகராதித்
தண்டவாமைந்தர்தம்மைச்சகமெலாம்புகழப்பெற்றான்
வண்டமர்துழாயினானுமதித்துவந்தாங்குமூழ்கி
யெண்டருகரமனுதிமைநதனையினிதுபெற்றான். (உஅ)

தயரதனுங்குமூழ்கித்தநயோர்நால்வர்ப்பெற்றான்
வயமிகுமிலங்கைவேந்தன்வநதுமறறுங்குமூழ்கி
வியமுறவெட்டுத்திக்கும்வென்றனனுகிமற்று
முயர்வலியளவின்மைநதருறுதிறம்பெறறுவாழ்ந்தான். (உகூ)

பாண்டுவந்துவந்துமூழ்கிப்பாண்டவர்தம்மைப்பெற்றான்
றேண்டுமற்றவருமூழ்கிமேவலர்ப்பொருதுவென்றே
யீண்டுபார்முழுதும்பெறறுரின்னுமாங்களவிலாதார்
பூண்டுவந்தாடியெண்ணம்பொசிதரப்பெறறுளாரோ. (ஙO)

வானமீனெண்ணலாகும்வாரிதியோரோழின்க
ணானநுண்மணலனைத்துமெண்ணலாமிடபதீர்த்த
நானஞ்செய்தவரையெண்ணலாகுமோநம்மாலோங்கு
மோனமுறறுயர்ந்ததெய்வமுனிவர்காளினிதுதேர்வீர். (ஙக)

வந்துவந்தாடினோர்கள்வயங்கியதத்தம்பேரா
லுந்துறவெவ்வோர்தீர்த்தமுண்டுபண்ணினர்களாங்க
நந்துமற்றவைகளெல்லாநலக்கவொன்றனபின்று
விந்துசேகரனுராணையெவ்வகைப்பயனுநல்கும். (ஙஉ)

இடபதீர்த்தமகத்துவப்படலம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் கருகூக.

சவுசவிதிப்படலம்,

மன்னியமாயூரோசர்மான்மியஞ்சொல்லக்கேட்ட
துன்னியமுனிவரெல்லாஞ்சூதமாமுனிவற்றொழுந்து
பன்னியவொழுக்கமாயநித்தியகருமம்பண்ணன்
மின்னியவுரைத்தியென்னச்சூதனும்விளம்பலுற்றான். (௧)

நிகழ்சவுசம்பற்கொம்புநீராடலனுட்டானஞ்சீர்
திகழ்கதிர்ப்பூசைமேலாஞ்சிவபூசைபுசித்தல்குற்ற
மகழ்தளியடைந்துகாண்டலன்புறச்செபித்தலபின்ன
ரிகழ்தலில்சமாதிபத்தாமிவைமுறையுரைப்பாங்கேண்மின். (௨)

செழுங்கதிர்குணுதுவெற்புச்சேர்முனைங்கடிகையென்ன
வெழுந்துபுநிதமன்றேனுமியையமெய்ச்சுத்திசெய்து
தழுந்தரவெண்ணீறிட்டேயுருத்திரற்சரியையாளன்
கெழுஞ்சதாசிவனைமற்றைக்கிரியையான்மனத்திற்கொள்க. (௩)

வருயோகிவிந்துநாதமன்னியபுருவநாப்ப
ணருஞானிசோகம்பாவித்தமைந்தபினியன்றமட்டுந்
திருவாருமூலமெண்ணிச்சிவபிரானடிகள்வாழ்த்திப்
பொருவாதநீறுபூசிப்புறம்புறப்படலவழக்கால். (௪)

அணிதரான்விபூதியன்றுபட்டிணியமைந்தானைந்து
பிணிதபக்கவர்ந்தகோரமிருநூறுபேசல்வேண்டுந்
கணிதருபிராமத்தெண்ணுங்கடுந்துயரறவிரண்டு
குணிதமூன்னுணர்ந்தானுன்குருணிதமெண்ணிடுதன்மாண்பே. (௫)

மணலுவர்மண்ணீருண்மண்வன்மீகத்தமர்மண்வேர்ம
ணணவியசுவர்மண்சுக்கான்மண்ணிவையனைத்துநீத்துப்
புணர்மழைக்காலமல்லாக்காலத்துப்புனிதபூமித்
தணவருமண்ணோரெட்டுவிரற்கீழத்திரத்தைச்சாற்றி. (௬)

வெட்டியாங்கிதயங்கூறியெடுத்துமேதருதானத்துக்
கொட்டிவைத்திடலுற்றிங்கட்காருமக்குணமண்ணோடு
முட்டறுகரகந்தண்டமொழிதருபறகொம்பாதி
யிட்டமுற்றிடக்கொணடேருக்கிசானதிசைநீத்தேகி. (௭)

நொடிசினகரத்துக்கப்பானூறுதண்டளவகன்று
தடிதலில்வத்திரத்தாறறலையினைதிரோபவித்துக
கடிநதிவிளையும்பூமிகளர்மடங்கோயில்வீதி
படிதவிர்குளங்கறபுற்றுபூயாயநீர்க்கல்லாயான்மந்தை. (௮)

வழிமரநீழறூர்வைமருவியபூமிமேடு
குழிகுளிர்சோலையோரஞ்செந்துகள்குலவுபூமி
பழிபடுமசுத்தபூமிபடுதலையானமின்ன
வுழிமலசலம்விடுப்பினுறுவதுசொல்லக்கேண்மின். (௯)

சறுவசங்காரகாலந்தான்வருமளவும்வெம்மை
யுறுநரகழுந்தல்கூடுமுளைத்தவையல்லாத்தேத்து
வெறுநிலம்புகுந்துமோனம்விராய்ப்பூதவிகாரமின்றி
யறுதிசெய்திரணமிட்டாங்கமரர்களகலவேண்டி. (௧௦)

பகல்வடதிசையுமற்றைத்தென்றிசையிரவும்பார்த்தே
யுகநசைபரிதிகல்லான்குறியுகுமலம்பாராதே
தகவிழியிரண்டுநாசிறுணையினைச்சாரவைத்து
மிகவும்வாய்நீருற்றலுமுமிழாதல்விடுத்தியக்கம். (௧௧)

மகவழல்கோடற்காகாச்சுள்ளியேமண்ணங்கட்டி
ககனமாரொருவேசெங்கல்கருதுறுமிவற்றுளொன்றாற்
றகுகுதங்குய்யநீவிச்சார்குறியிடக்கைபற்றி
நகுதீர்த்தமலாநீர்க்கோட்டுநண்ணுபுவலப்பாகத்தே. (௧௨)

தெங்கங்காயளவதாமண்டிரட்டுபுவைத்துக்கொண்டே
யங்கியலொருசாணீருக்கப்புறத்திருந்துகொண்டு
பங்கங்கூர்குய்யத்தோர்கால்பகருமண்குதத்தோரைங்காற்
றங்கிடையிடையிலோர்காற்றடையறவிடக்கைக்கம்மா. (௧௩)

முடிவின்மற்றதற்கீரைந்துமுறையிருகரமுஞ்சேர்த்துக்
கடிகொளவெழுகாற்பெய்துகழுவுபுபிருட்டஞ்சுத்தி
வடிவுறவீமைக்கதூய்மைமருவுறுதாயின்மேலு
மொடிவறவியற்றனெல்லியளவுமண்ணொருகாற்கோடல். (௧௪)

முழங்கைக்குமுழங்காலுக்குமுடிவிடத்தொருகாற்பூசிச்
செழும்புனல்கொண்டுசுத்திசெய்கவில்லறத்தார்க்கீதாம்
பழங்கண்டீரிரண்டுமூன்றுநான்குபங்கெனச்சொல்வா
ரொழுங்குசான்றுயரும்மற்றோராகியவொருமூவர்க்கும். (௧௫)

மற்றொருதுறையினுற்றுவாய்செவிநயனநாசி
யுற்றகைகாலினுள்ளவுகிரிவைசுத்திசெய்தே
யெற்றுநன்னீரோரொண்காலிடப்புறத்துமிழ்ந்துநீருட்
பற்றுறவொருகால்வைத்துப்பராக்கொடுசிரித்தலின்றி. (௧௬)

தலையுறுகட்டவிழ்த்துச்சானுவோரிரண்டனுள்ளு
மலைவறவிருகைமேவக்குக்குடாசனம்வாய்ப்பெய்த
வுலைவறவடக்குநோக்கியுறைந்துமுத்தோதகஞ்சா
லலைநுரைமொக்குடேய்மையமையாநீருவர்த்தநீரோ. (௧௭)

ஒன்றியபுழுநீராதியுவவாதவெந்நீர்போக்கி
யின்றிமற்றமையாதாற்றினியைந்ததோடுழுந்தழுந்து
கன்றலினீர்கொண்டேகோகன்னமுத்திரைபிடித்து
நன்றமைபிரமதீர்த்தநயந்துமந்திரம்பேசாமல். (௧௮)

ஆசமித்திடுதல்வேண்டுமான்மதத்துவமுன்மூன்று
மாசுவதாந்தமாவகுத்தியைதரவொவ்வோர்கா
லாசமித்திட்டுப்பின்னரிடையிடையமைந்ததாய
மாசகீர்ந்தொமியவங்கைகழுவுதல்வழக்கான்மன்றே. (௧௯)

ஆன்றவங்குட்டமூலத்ததரத்தையத்திரத்தாற்
றோன்றமற்றிருகானீவித்துகளிலத்தத்தலத்தா
லென்றவதோமுகங்கொண்டியையவத்திரத்தினுற்பூப்
போன்றவாயுநீவல்வேண்டுமென்மனார்புலமைசான்றோர். (௨௦)

வத்திரசாசியார்வைகாதுந்தியிதயம்வாகு
வுத்தமாங்கந்தாமென்னவுரைசெயுமிடமீராறுஞ்
சுத்தவங்குட்டஞ்சேரநாமிகைவிரலாற்றேன்றச்
சித்தம்வைத்திதயத்தாலேவலமுதற்றொடல்சிறப்பாம். (௨௧)

திடப்படவெடுக்குநீரோல்வழிகட்டித்திகழ்மண்மேல்வைத்
திடக்கையாற்சாய்த்துச்சாய்த்தாசமித்திடலியல்பேயாகுந்
தடத்தநீருமூந்துமூழ்குந்தண்புனல்கோடற்காகு
மடற்கருமதிகநூனஞ்சுனாயெனவுரைவர்சான்றோர். (௨௨)

மலசலம்விடுக்குங்காலமார்த்தாண்டன்முதலோர்ப்பார்க்கி
னலர்தருமகோரமோர்நூறறைந்திடல்வேண்டும்பின்னு
முலவிலாவித்தமும்மலுமிழ்தலாதிகளுண்டாகி
லிலகுமோங்காரமெல்லவிருபத்தொன்றெண்ணல்வேண்டும். (௨௩)

முக்காலாயாமம் * தேர்ந்துமுடிப்பதுமுறைமையாகுந்
தக்கார்சொலரன்முற்றத்தேற்றண்ணியவாராமத்தேன்
மிக்காயபிரமநூறுவெம்பசியடைந்துபேச
றிக்காருமலைநீராற்றின்கரையுவருமுமட்செய்யின். (௨௪)

உரைசெயப்பிரமந்தன்னையொருசதங்கணித்தல்வேண்டு
திரைநதிமரத்தினிழறெருச்சந்தியிவற்றினுயிற்
கரையிருநூறறிந்தேன்முந்நூறுகரைதல்வேண்டும்
வரைமலசலங்கழிநுமாறுதல்செய்தபின்னும். (௨௫)

அடிசில்சிற்றுணவியைந்தகனியமைபுனல்யாதானும்
படியறவருந்தல்செய்தபின்னுமாசமனம்பண்ணுன்
முடியவுண்டுண்ணுகியாயிரமொழிந்தபின்பு
கடிதரவொன்றுமில்லாக்கௌவியங்கோடல்வேண்டும். (௨௬)

சவுசவிதிப்படலம் முற்றிற்று.
ஆ. திருவிருத்தம் ௧௬௭.

பற்கொம்புவிதிப்படலம்

இந்தவண்ணஞ்சவுசமினிதியற்றிநேனுலரசுநெல்லி
சந்தமினிர்கைவிரல்செங்கல்சாம்பலடராவிரையேபான்
முந்தவிடுக்குமரம்பட்டமரமேரண்டமுருங்கைபலா
நந்தவமைநுண்மணலசோகுறுநீர்வஞ்சிநறுவிலியே. (௧)

மேயநமைவைவேம்புபுளிவேதாளப்பேர்மரம் † வெளிறு
பாயமரங்கொண்டுறச்சுத்திபண்ணிற்புரிந்ததவம்போகுந்
தூயமருதுகுமிழ்புன்குதொக்கவாகைகருங்காலி
யாயநொச்சிகணுக்கோண்விட்டமைந்தபசுந்தோலொடுகவர்க. (௨)

கரையங்குலமெட்டுறுநீளங்கனிட்டையளவாம்பருமத்தி
னுரைசெயகொம்புதரக்கொண்டாங்குற்றவிதயமந்திரித்துப்
புரைசெய்வடக்குமுகம்பார்த்துப்புன்னுய்நீசொலுழ்பாடு
வரைசெய்மலம்பூப்பினள்கருமாற்பார்த்தறவிர்ந்துமௌனமாய். (௩)

---

* ஆயாமம் - பிராணயாமம்.
† வேதாளப்பேர்மரம் - பேயத்தி - பேய்வேம்புமுதலியன.

துறவியகத்தும்புறத்தும்பற்சுத்திவலமாயுறவியற்றி
யறநாவழித்துவாமத்திட்டறல்பன்னிருகாலாங்குமிழ்க
மறமார்நிரயத்தழுந்திடுவார்வலப்பாற்கொம்பிட்டுமிழ்ந்திடுவார்
திறமார்சீடர்தரலின்றேற்சருகாற்சுத்திசெய்திடுக. (௪)

பெரும்பொன்னுதிக்குமுன்புரிகபின்மந்திரங்கள்பராமுகமாம்
விரும்புசுரராதியர்வெறுப்பார்மேயகிரகிமாவாத்தி
மருங்கார்விளக்கிசகம்பூலாமருதுசம்புகடம்புமகி
ழொருங்கார்தருசங்கிறலிநாயுருவிபிண்டிசண்பகமே. (௫)

* குருகாதிகளாமங்குலமுந்நான்குநீளங்கொள்பருமம்
பெருகாதரவினுணைத்ததேபிறங்குகிழக்குப்பார்த்திருந்து
திருகார்மாசுபோமளவுந்தேய்த்துச்சுத்திபுரிந்திடுக
சருகாற்சுத்தியில்லறத்தான்செய்யுந்தினமுஞ்சாற்றுவாம். (௬)

முந்துதிதியாறென்பானுன்மூன்றுதிங்கண்முன்னுற்ற
வந்துவயங்குமுபராகமருவுவிதியாதம்மிவையா
நந்துசருகின்றெனிற்பனிருகாற்கொப்புளிக்கநால்வர்களுந
தந்துவிதியாநாள்விளக்கிற்சாருநரகங்குலமேழும். (௭)

பற்கொம்புவிதிப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௬௨௪.

நானவிதிப்படலம்

விதிவழித்தந்தசுத்தியியற்றினோன்விருப்பமிக்கு
நதிமுதலியநீராடல்விதியினைநவிலலுற்று
மதிசெய்நீராடல்பூசைசெயல்புசித்திடல்வயக்சம்
பொதியவோமித்தலாடையிரண்டன்றிப்புரிதறீதே. (௧)

அருச்சனையோமநானமமைதருசெபந்தியானங்
கருச்சரிதரவியற்றுகாலத்தும்புசிக்குங்காலும்
வெருச்சலமயிரண்டியக்கம்விடுத்திடுகாலும்பேசார்
மருச்செழுங்கொன்றைமாலைவள்ளலாகமநெறிந்தார். (௨)

வாருணநானம்பூதிநானமந்திரநானஞ்சீ
ராருமானதமாநானநித்தியமாமிநநான்குஞ்
சாருநீர்வாய்வியங்கெவுரவம்பார்த்திவநதவாமற
கூருந்திவ்வியநைமித்தியம்மெனக்கூறுவாரால். (௩)

பொலிதருகூபம்வாவிபொய்கைவண்கங்கையாதி
யொலிகிளர்குடிஞைமண்சூழுவரிசங்கமததானங்கள
வலிகெழுபரமன்கோயிலகம்புறமரீஇயதீர்த்த
மெலிவறுமொன்றற்கொன்றுவிசேடமென்றுரைப்பராய்ந்தோர். (௪)

தக்கவாசமனஞ்செய்துசகளீகரணமுஞ்செய்து
தொக்கவும்பிண்டமண்ணீர்நின்றுசூழ்கணாயின்வீசி
மிக்கமண்முன்புசொற்றவிதிப்படியங்கைக்கொண்டு
போக்கமில்கவசத்தாலேபொருந்திடமுக்கூறுக்கி. (௫)

* குருகு - குருக்கத்தி.

அரையின்கீழொன்றாற்சுத்தியாக்குகபின்னுமோர்கூற்றை
யுரைசெய்காயிக்குமேலத்திரமதனுவோதிப்பூசிப்
புரையில்கண்கன்னந்தண்டம்பொலிதாவிரலாற்பொத்திக்
கரைதருவிசேடசண்முகமுத்திரையதனுன்மன்றே. (௬)

உத்தரநோக்கியேனுமுதற்றிசையுறப்பார்த்தேனு
மத்திரமுன்னியுந்தியளவறலிடையின்முடி
யொத்தசென்னியின்மேன்முக்காலத்திரத்துறப்புரோக்கித்
தெத்திசைகளுஞ்சொனன்னீரிறைத்தபின்சிலமொழிந்து. (௭)

ஒழிந்தமண்ணிடக்கைவைத்திட்டேற்றசங்கிதையோதிக்கா
ரிழிந்தமுற்றிசைவடக்குத்தெற்குறவியன்மூன்றாக்கி
மொழிந்தவொவ்வொருகாலாகவத்திரத்தான்மூலத்தாற்
பொழிந்தவைம்பிரமத்தானேர்பொருந்தமுன்மந்திரித்து (௮)

தடமிகுகிழக்குக்கூற்றைத்தசதிசையினும்போகட்டு
வடதிசைக்கூற்றைநீரிற்கரைத்துமாண்புற்றமூலத்
திடவியசிவதீர்த்தஞ்செயதெஞ்சியதுடலிற்பூசிப்
படவரவணிநதமுக்கட்பரமனூர்தமைச்சிந்தித்து. (௯)

தக்கநன்னீரிற்றோயநேதவாவிருகதிர்க்கரத்தாற்
றக்கதாம்வவுசடந்தசங்கிதைகொண்டேகும்ப
மிக்கமுத்திரையானீர்பன்முறைதலைமிசையிறைத்து
மீக்கவாம்விதிககிற்றிக்கிலிறைத்திடல்விதியாமன்றே. (௧௦)

பாரநெல்லமுதலாலாடிப்பகர்தீர்த்தமொடுக்கலல்கு
பிரீசாதத்தாலாமீரம்பிறங்குலர்துகிலான்மாற்ற
விராமிடற்றவன்வாக்கீதுவாருணநானமென்னும்
விராவுநிட்பலமேயீரத்துகிலுடைஇவிழைகன்மத்தால். (௧௧)

அறலிடைமுழுகிச்சுத்தியமைபவர்காய்ந்தவாய
விறல்கொள்கோவணங்கலிங்கமேதகத்தரித்தல்வேண்டு
முறல்செய்கோவணநிதம்பமரையளவொருங்குகோட்
விறலுறுநாணிரட்டியிருபத்தைந்திழைவெளுப்பாம். (௧௨)

உற்றபாசத்துமுக்கூற்றொருகூறுமுடிதல்செய்து
சொற்றவாமத்துமுன்பாற்றொங்கவிட்டிடுதல்வேண்டு
மற்றவாமத்திருபிவலமாகத்தரிக்கவந்நாண்
பொற்றவுந்திக்குமேல்கீழ்புனையின்வாழ்நாடவம்போம். (௧௩)

மனையினீர்வடித்துமுன்போன்மண்பூசிநானஞ்செய்க
வனைகுடமைநதெட்டொன்றான்மூலமந்திரித்தல்வேண்டும்
வினைதபுமசத்தர்கண்டங்கடிபதமளவுமேவ
றுனையநீர்தோயாவங்கமீர்ந்துகில்கொடுதுடைத்தல். (௧௪)

உம்படற்றத்திரத்தாலொளிர்வலக்காலங்குட்ட
வெம்புமக்கினியெழுப்பிமெய்யின்மாசொழியப்போக்கி
நம்பியமேன்மைச்சத்தியமுதநற்சலத்தினாலே
பம்பியவுடனனைக்கிற்சுத்தியேபரவுமுண்மை. (௧௫)

விழ்விலாகவத்திலாற்றும்வேள்வியிற்கடிமணைத்தற்
றழலினூர்வேங்காலிற்றகவழிச்செலுங்காலத்தி
லுழலிடர்கலகந்தெய்வமுயர்ந்திர்த்தங்குறித்துச்செல்லுஞ்
சுழறபுயிடத்திற்றீண்டற்றொடக்குறுதென்பராய்ந்தோர். (௧௬)

தண்டிரண்டகல்சுபாணர்சண்டாளரிரோசகர்க்குக் *
கொண்டவொன்றனைசேயினுட்கென்றகொளிருதுதிங்கட்
கொண்டிறதுலகிற்கன்மரறுவர்க்குறுகமொன்றாகக்
கண்டபோதகறல்வேண்டுமகலாதகரிசுண்டேனும். (௧௭)

ஒட்டகஞாளிகோழிபுருச்சுடுகாடேர்ப்பன்றி
குட்டராகுசமுள்ளாரதீக்கதர்குரவன்பொன்னை
யிட்டமார்பரமண்பொன்னைக்கெடுத்திடுமிழிஞர்தொள்வோர்
பட்டதீங்காளராயபரசமயத்தினுள்ளார். (௧௮)

சரம்பகங்கழுகுகோம்பிகாகங்கோழியுவென்போ
டிரம்பயிறடியேகங்கமுறுநின்மாலியம்புசிப்போர்
நிரம்பியவுறுப்பில்லாதார்நிகழ்துட்டர்கருமநட்டர்
தரம்பெருப்பதிதர்தியநாத்திகர்தாநதொட்டாலும். (௧௯)

முனிதருமெச்சில்பவ்விழூத்திரஞ்சுக்கிலங்கை
யினியதனைக்கிழன்றியியைதரப்பட்டகாலுந்
துனிதவிாவபனமற்றைவமனஞ் † சொப்பனநதீதேனும்
பனிகொள்வாருணநானநதான்பண்ணுதல்வழக்கான்மனறே. (௨௦)

புருவாதியிறகெலும்புதுண்டமுறறொட்டபோது
மருவாயவிழிவுபூண்டார்மகவின்றுள்பதிதராயோ
ருருதாயகரத்தினீழலுறினுநீர்முழுகல்வேண்டும்
பொருமூழ்கார்வினைசெயவாரோறபுகல்கமுந்நூறுசாதம். (௨௧)

நோயினனொன்னிலோர்காற்சங்கிதைநுவறல்வேண்டு
மாயநீராடல்பூக்கொண்டருச்சித்தலசெபித்தலோமம்
பாயதியானமாதிபண்ணனித்தியமெனறோர்க
சாய்தராமிதுனநகன்னிதனுமீனத்திங்களாதி. (௨௨)

வேறு.

மொழியாநின்றசடசீதிமுகமாமிந்நாண்முதனுளிற
கொழியாவீரொட்டாங்கடிகைப்பின்னுக்குறிநறகாலமாம்
பழிதீர்விருச்சிகநகும்பமேழறுசிங்கம்படுமதிமுன்
கழியாவிண்டுபதியீரொண்கன்னன்முன்னுநற்காலம். (௨௩)

மூந்துநலமீரொண்கடிகையாடியயனத்தெனமொழிவர்
பிந்துநலமீரொண்கடிகைபெருநதையயனத்தெனப்புகல்வர்
நந்துமிரண்டிவிடுவுக்குமெவ்வெட்டாகநவில்கன்ன
லந்துமுன்பின்விசேடமெனவுளைப்பரிணையகாலத்தில். (௨௪)

பாம்புபரிதிபற்றுங்காற்பற்றிமதியைவிடுக்குங்கா
லோம்புமிருநான்கிரேழேயுற்றவிதிபாதத்தினத்திற்
றேம்புகுன்றுநாண்மதியிற்கூர்நாள்பஞ்சதெசியிவற்றி
னும்புகழுமோரிருகுணிதம்பூசைசெபமாதிகணவிற்றல். (௨௫)

* இரோசகர் - வண்ணார். † வமனம் - வாந்திசெய்தல்.

நித்தியாங்கமின்னவிருநிசியிலட்டமியிலென்று
மொத்தவேற்றங்கொண்ணோராய்வரின்முந்தினதேயுறுவரமாஞ்
சுத்திபொருவினுனைத்திடுவாநதொக்கமயிராமலகத்தால்
வைத்தகொம்பால்வாய்செவிகண்டுண்டம்வயங்குரோலாம். (௨௬)

மற்றவங்கமாம்புனலான்மண்ணுலிவையும்நித்தியமாம்
முற்றசிலைசெம்மணிதுகிர்முத்துவையாதிகண்மண்ணுதலாலாஞ்
செற்றதாதுப்பாத்திரங்கடிகழ்சாம்பரினுற்புளியாலாம்
பெற்றநீர்வெந்நீர்வெள்ளிபொன்னுமசுத்தம்பிறக்குமெனில். (௨௭)

அடலைகஞ்சம்புளிசெம்புதேய்த்துக்காய்ச்சவயமாகுந
தொடரினுஞ்சாத்தவன்றியெல்லாத்தாதுஞ்சுசியாஞ்சுசியாலே
படரொட்டகநாய்மோந்தனவும்பழிசாலெச்சிற்பட்டனவும்
விடவிலழலிலிட்டெடுக்கமிக்கபுனிதபாத்திரமாம். (௨௮)

சங்கம்யானைமருப்பிப்பிதரளம்பசுவின்மடநீராற்
றுங்கமரம்வெநநீரினுற்றுகண்மிக்குறின்மண்ணீரினுற
பங்கமகன்றுவிடுஞ்சருமம்பாசநதழையாதிகளபுனலாற்
புங்கவெய்யிற்புரோக்கணத்தாற்பொலிநேத்திரங்கம்பளமுதலாம். (௨௯)

வருவெண்கடுகொற்கவுசிகஞ்சாமமைதானரிட்ட *நீரினு
லொருவிறிரணமிலைவேயாலுஞுற்றியவையாடைச்சுசியே
பொருவிலாநெற்கழுவுதலான்மலாதிபடிறபோற்றுறுதூசு
வெருவிலுவர்மண்காரத்தாலாமத் † தெனிலவ்விடமவிலக்கல. (௩௦)

நென்மாலியஞ்சோதரிற்புரோக்கணத்தாலரிசியெனினீக்கல்
நன்மாண்டயிலாதிகளகருப்பூராதிநலமாமருக்கியத்தால
வன்மாக்கழைச்சாறுறுசுவைத்தேன்காய்ச்சிவடித்தல்செயச்சுசியாம்
பன்மாசுகளும்போமுபபுப்படரும்புனலிறகாய்ச்சிடவே. (௩௧)

வெண்பால்காய்ச்சக்கடைப்பண்டந்தயிர்தானமேவுநிரீக்கணததாற்
பண்பார்தைலமுச்சிட்டம்படிறநேயத்தில்வார்த்தெடுத்த
னண்பார்தோயும்வடித்தெடுத்தனுடிறாவுகுடபபுனமொண்
டொண்பாய்வினைறதினுணைநதுமுறுமாவிடலிற்சுசியாமால். (௩௨)

மெய்வாக்கினுக்குச்சுசியாம்பொய்விளம்பில்வாமஞ்சநீம்புகறல்
பெய்வாற்கருப்பைகிளிபூனைபிறழுமாதரலிநகில
மொய்கூர்மயிராடிவைதொட்டான்முழுகநீறறினீருண்டல்
கைகூருணவுபிச்சைதுயின்முன்பின்கதிர்ப்பநீறணிக. (௩௩)

சந்தியிடத்துமலசலங்கள்விடுத்துச்சுத்திசமைத்தபினனும்
புந்திவிருப்பமெழநீறுபுனைதல்வேண்டும்புனையாரோன்
முந்திநரகத்திடைப்புகுவார்மொழிதல்செய்தாம்பொதுவிதியை
யந்திவண்ணன்மொழிப்படிநல்லனுட்டானமுமேலுனைத்திடுவாம். (௩௪)

நானவிதிப்படலம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் கசுருஅ.

---

* அரிட்டம் - மோர். † ஆமம் - அரிசி.

அநுட்டானவிதிப்படலம்.

வடதிசைநோக்கியிருந்திறைகுருவைமனங்கொடுமோனமாய்ப்பூதி
திடமுறப்பூசல்வேண்டுமொண்குரவன்றெய்வநல்வித்தையோரொழுநா
வடர்பொல்லாப்பூமிநீசர்முன்னிடுதலடாதுமண்பார்தவொருகையாற்
றடவுமோர்விரலாலணிதரினிரயந்தவாதுறுமென்பர்கற்றுணர்ந்தோர். (௧)

நிலமுறநீற்றொணுத்துணைவீழ்த்தினிரயமேநண்ணுதல்சரதஞ்
சலமிலாமனைசெய்கமண்டலங்கலிங்கஞ்சயனநீற்றொருதனக்குளவே
நலமுறுதனுக்காஞ்சாதனம்பூதிநாத்திகர்கொடைப்பயனுறு
மிலாவடதிசைநோக்கிடுதலின்முத்தியியல்கிழக்குறுபுத்தியெய்தும். (௨)

மகாகணபதியேநமவெனச்சிரத்துவண்கரமுட்டிசெய்தறைந்தே
யுகாதவன்போங்கக்குரவனைவணங்கியாளிநாமிகையொடங்குட்ட
மிகாதமத்திமையுஞ்சேர்த்தரனகண்ணுமெண்ணுபுமூலமந்திரத்தை
நகாவெழுநீக்கணஞ்செயாவடங்குநயங்கொளத்திரபதாகையினால். (௩)

அறைதருபுரோக்கணஞ்செயதும்படந்தவத்திரமோதித்தற்சனியாற்
குறைவிறுடனஞ்செயதபயியுக்கணந்தான்கொளும்வவுசடந்தகவசத்தா
னிறைதருபதாகையியற்றிநற்படநதநிகழ்தருமத்திரம்பன்னி
யுறையுமதத்திமைதறசனியிலுலிடக்கையுணமுக்காலறைந்கிடல்வேண்டும். (௪)

மற்றிதுதாளத்திரயமாந்திக்குப்பந்தனம்வயங்குதறசனைய
யுறறவங்குட்டத்தடியுறச்சேர்ததேயோங்குபூருவதிசைமுதலாச்
சொற்றவீசானத்தளவுமோரொட்டுந்துகளறுபடநதவத்திரததாற்
பற்றறத்தெறித்தலினியவகுண்டனத்தையும்பகருதுங்கேண்மோ. (௫)

தருவவுசடந்தகவசத்தைமொழிந்துதற்சனியால்வளைத்திடுத
லொருவலக்கரத்துக்கனிட்டைமற்றிடக்கையுறுமநாமிகையைமற்றிடக்கை
மருவியகனிட்டைவலத்தநாமிகையைவலக்கைமத்திமையிடககரத்துப்
பெருகுதற்சனியையிடத்துமத்திமையைப்பேண்வலத்தறசனிபொருத்தி. (௬)

மூலமந்திரத்தைநவின்றுவண்டேனுமுத்திரைகொடுத்துமற்றதற்பின்
சாலவுமிருகையங்குட்டம்பின்னித்தகவிரித்துறவவுசடந்த
மூலமந்திரத்தைமொழிந்தினிதமைமாமுததிரைகொடுத்ததன்பின்னர்
சாலவொள்வலக்கையங்குட்டங்கனிட்டைதவிர்ந்தமூவிரலினூன்மனமே. (௭)

வருசுவாகாந்தவத்திரநவின்றுவயங்குநீர்தோய்த்தொருமுக்கா
லொருதலைமிசைப்புரோக்கணஞ்செய்தாங்குட்கையங்குட்டங்கண்மடக்கி
மருவுறச்சேர்த்துமூலிசுவாகாந்தமனுவெனுமத்திரங்கூறிப்
பொருவறுமுக்காலத்திரசநதிபொலிதரததருப்பித்தபின்னர். (௮)

மீட்டுமம்மனுவைவப்பத்துருச்செபித்துவிளங்கவோர்காற்புனலிறைத்து
நாட்டுகோகன்னமுத்திரைகொண்டுநல்லுழுந்தழுநதுநீர்முக்கா
லீட்டுதத்துவமோர்மூன்றையுமுறையினியம்பியாசமித்துங்கைகழுவி
வேட்டுநல்லதரத்திருபுறங்கீழும்விளங்கவத்திரமிருதயத்தால். (௯)

மன்னியபதாகைகொண்டுறத்துடைத்துவயங்குறக்கரசுத்திசெய்து
பின்னியவிதயத்திடங்கள்ராறும்வினங்கநாமிகையொடங்குட்டந்
துன்னியசேர்த்துவலமுதலாகத்தொட்டிருகையுமத்திரத்தா
லன்னியமத்திற்றுடைத்துநீறெடுத்துநலங்கொளாவிடக்கையினமைத்து. (௧௦)

உரைநிரீக்கணம்புரோக்கணமொளிர்தாடனமப்பியுக்கணஞ்செய்து
புரைதவிர்கற்பமாதியேல்விளங்கிப்பொலிதருசங்கிதைபுகன்று
கரைதருங்கற்பமெனிலதனோடுகலைகளுநவின்றிடையூறு
வரைசெயமனுவத்திரத்தினாலனுவின்வரைநிருதித்திசைதெறித்து. (கக)

தலைமுதற்றுளீறத்திரபீசஞ்சாற்றியொள்வலக்கைநீறிட்டு
நிலைபெறுமமலநானமாக்குறித்துநீரிணைக்கனிட்டையல்லாத
வுலைவிலாவிரலாலொளிர்நிரோதானமுறவெடுத்தியறருகவச
மலைவறக்கூறிக்குழைத்துத்தமாங்கமுதன்முழந்தாளவரைமாதோ. (கஉ)

ஓங்குமீசானமாதியைந்தாலுமொளிபெறத்தரித்துநீர்தொட்டுப்
பாங்குசாலிருகையிடங்களேனாரம்பகர்ந்தவாமாறுபுதரித்துத்
தேங்குசீர்க்கண்டமுதுகிரண்டாயசெவியிவற்றினுமுதனுன்கு
நீங்குமந்திரமொன்றாலுறப்புனைந்திலவுங்ககவசத்தாறகமுவி. (கங)

கும்பமுத்திரைகொண்டுரைத்தவோரைந்துங்குறிக்கொளச்செபித்துமூலத்தாற்
கம்பமிறலைமேற்றெளித்திடலாக்கினேயநானம்மெனக்கரைவார்
வம்பவிழ்பூதிசிதறியதிதயம்வந்ததாப்பாவித்தல்வேண்டு
நம்பவொண்டானத்திரயஞ்செய்திதயநன்மனுவுச்சரித்தம்மா. (கச)

குறிநுதனமார்புதோளடியிவைக்கங்குலமிருமூன்றுமற்றவைக்கொன்
றறிதப த்திரிபுண்டரஞ்செயலிதன்மேலதிகம்வாழ்நாள்கெடுங்குறையிற
செறிதருதவம்போமிதுவிபூதியினுறசெய்திடுநானமாசமித்து
மறிவின்மூலத்தாரமுதிணைனைத்தன்மானதநானமாமன்றே. (கரு)

மூறைவவுசடந்தசத்திமந்திரத்தைமொழிந்திருகைகளுங்குவித்து
நிறைசிவாசனமுமூர்த்தியுமங்கைநிகழுமங்குட்டத்தாலமைத்துக்
குறைவிறற்சனியாலங்குட்டவிரலங்குட்டத்தாறறற்சனியாதி
கறையிலீசானமாதியைநதோத்தக்கரிசறநிசித்திடல்வேண்டும். (கசு)

இருகரநடுவுளுகளவங்குட்டமியைத்திடல்வித்தியாதேக
மருவுமத்திமவங்குலியிருமூன்றும்வளைத்திடனேத்திரமாகும்
பொருவிலங்குட்டமிரண்டுமுன்வளைத்துப்பொலிதருமூலத்தஞ்சலித்தே
பொருவருமிதயாதியினமசுவாகாவுறுவவுசடோவவுசட்டாம். (கஎ)

தகவிதயாதியாற்கனிட்டாதித்தற்சனியநதமங்குட்ட
நகநிசித்திட்டத்திராயவும்படுவானலலவங்குட்டத்திற்பொருந்த
மிகவமைதருதற்சனியினுனிசித்துமிளிர்வவுசடந்தகவசத்தா
லிகவில்கைசுறறிவவுசடுமூலத்திருகையுங்குவித்திடல்வேண்டும். (கஅ)

அறைதருமீதுகரநியாசம்பினங்குட்டமநாமிகைசேர்த்து
முறைதருமுண்மைச்சிவாசனமூர்த்திமொழிந்திதயத்திடைநிசித்து
நிறைதருமுட்டிபிடித்தங்குட்டஞ்சேர்நிலவுதற்சனுதிகள்கொண்டு
பொறைதருமீசானுதியைந்தோதிப்பொலிசிரமுதறசானுவளவும். (க௯)

நலமுறநிசித்தங்குட்டமுமனுமிகையுநயம்பொருந்திடச்சேர்த்துங்
குலநடுவிரலோர்மூன்லறயுநீட்டிக்குறித்தமற்றிருவிரண்மடக்கி
யலமுறவிதயும்வித்தியாதேகமுக்கத்துநேத்திரங்கொடுத்துச்
சலமிலங்குட்டமநாமிகைசேர்த்துமூலத்தாலிதயத்திற்சார்த்தி. (உ௦)

இருதயமுதன்மூன்றிடத்தினங்குட்டமியைதருகனிட்டைமுன்மூன்றுன்
மருவுறநிசித்துத்தற்சனியிரண்டால்வளவியகண்டத்தைச்சுற்றிக்
கருதிடையளவிற்கவசத்தையெண்ணிக்கரிசறநிசித்தநாமிகைக
ளொருவலமுதலாயகங்கையந்திரத்தையுளைசெயாநிசித்திடல்வேண்டும். (௨௧)

பரவுகைத்தலத்திற்றுளமோர்மூன்றும்படவத்திரத்தினுற்செய்து
விரவுசோடிகையும்படர்தவத்திரத்தான்மிளிர்சிரந்திக்குப்பர்தனஞ்செய்
தூரவுகொள்கவசம்வவுசடந்தத்தோடொத்தவகுண்டனமியற்றி
யிரவுதீர்மூலத்தடிமுதற்சென்னியீறிருகைவிரித்துயர்த்தல். (௨௨)

புண்ணியநதருமாமுதநுளையீதுபுகலங்கநியாசமென்றுரைப்பர்
நண்ணியவளமாறசனமினிப்புகல்வாநம்பிரானுகமப்படியே
யண்ணியவலக்கையங்குட்டமதனுலவிர்வலநாசியையடைத்துக்
கண்ணியவிடப்பானுசியத்திரததாற்றவினுறச்சோதனைபுரிந்து. (௨௩)

பின்னருமிடப்பானுசியையவலக்கப்பிறங்கநாமிகையினுலடைத்து
நன்னர்கொள்வலப்பானுசியைத்திறந்துநயங்கொண்முனமந்திரம்பகர்ந்து
பினனமொன்றில்லாச்சோதனைசெய்துபிறங்கமுன்போலவலம்புதைத்துத்
தன்னமொன்றில்லாச்சங்கிதையோதித்தக்கவாபூரகஞ்செய்து. (௨௪)

அறையுமவ்விடப்பானுசியையவலக்கையநாமிகையாலுறப்புதைத்து
நிறைதரமுன்போறசநங்கிதையோதிங்கழ்தராவணணங்கும்பித்து
முறைவலநாசிதிறந்துசங்கிதையான்முனிவறவிரேசகஞ்செய்து
குறைவிலவ்வலக்கைவலச்செவிமூலங்கூறிவைததிடுதலாயாமம். (௨௫)

ஆன்றவங்குசமுத்திரையினுல்விந்துவாரமுதினைவவுசடந்த
மேன்றவிதயஞ்சொற்றெடுத்துநீரிடைவைததியைமூலத்தாறசிவதீர்ததந்
தோன்றநன்காக்கித்திக்குப்பர்தனமுற்சொல்லியவனைத்தையஞ்செய்து
சான்றவர்புகழுந்தியானமேறசெய்யததக்கதென்றுரைப்பராயநதுணர்ந்தோர்.()

திருமுகநான்கெண்விழிவலஞ்சிருக்குச்செபமிடங்கமண்டலநதண்ட
மருமமூநூல்செவ்வாடைமெய்ம்மணிப்பூண்வண்பதுமாசனமிளமை
பொருவிலசத்துவமஞ்சடையுடைப்பிராமிபொனனடிப்போதுவைகறைவா
ளொருவறவுடுக்கள்விளங்கிடுகாலத்துன்னுகவிருதயத்துறத்தே. (௨௭)

ஒருமுகமிருகண்சதுர்ப்புயமபயமொளிர்கதைவலமிடஞ்சங்கம்
பொருதிறலாழிவெண்ணிறநதூசுபூந்துழாய்பொலிதருமுந்நூற
றருணமொண்பதுமாசனம்பொற்பூணுகாசனனிராசதமிவையுடைய
திருவையுச்சிப்போதொளிர்தருபுருவந்திகழ்தருநாப்பணுன்னுகவே. (௨௮)

தனிமுகமுக்கண்செபவடஞ்சூலந்தகுவலமிடஞ்சத்திபய
நனியெழினீலநிறஞ்சடையதன்பானகுபிறையாதனம்புதும
துனிதவிரிடபந்தாமதகுணஞ்சாருயவிரவுத்திரிதன்னைக்
கனிதருபிரமாந்தரத்தினனோர்பாதிகாணநதியிற்குறியே (௨௯)

மூவருஞ்செயற்குச்சான்றினென்றுமுன்னிநாலாவதுசாநதி
மேவருஞ்சத்தியுருவலாவுருவைமேதகவெண்ணுகவெண்ணிப்
பாவருந்தீர்த்தம்வலக்கையாலெடுத்துப்பரவுமிடக்கையிற்சேர்த்தே
யோவறும்வலக்கையதனடிச்சார்த்தியோங்குறுசங்கிதைகூறி. (௩௦)

வரவுசடந்தமூலஞ்சொற்றொருகால்வண்கும்பமுத்திரைபிடித்துச்
சிரமிசைத்தெளித்துப்பின்னுமங்கீரிற்பிறங்கியசங்கிதைசெப்பி
விரவுறவெடுத்தாங்கிடக்கையினமைத்துவீழ்சலம்வுவிசடந்தஞ்சால்
பரவுசங்கிதையாற்சிரமிசைப்பொருந்தப்பதினொருதரம்புரோக்கணித்தல். (௩௧)

ஈதுமார்ச்சனமாமிடக்கரத்தொழுக்கினெஞ்சுநீர்வலக்கரத்தேந்தித்
தீதுதீர்விசேடபாவனைசெய்துதிருந்திடநாசியிற்புகுந்து
மோதுபாதகத்தையரித்துமைக்குழம்பாய்முகிழ்வலநாசியின்வழிக்கீழ்ப்
போதுவதாகவெண்ணியும்படநதவத்திரமநதிரம்புகன்று. (௩௨)

முனிவொடுவலப்பால்ழ்னிறவயிரக்கன்மிசைமுருங்கவிட்டிடுக
துனிதவிரீதேயகமருடண்மாநதுயரீராசமிததததன்பி
னணியுயர்சகளீகரணமுஞ்சண்மத்துநாடுகவசததினீரள்ளி
யினிதுறத்தன்னைவளைததுமாதேவனிணையடியானித்தல்வேண்டும். (௩௩)

குசையுடன்காயத்திரிமனுமூலங்கூறுபுமும்முக்தாற்றற்பித்
திசைதரவவைபப்பத்துருக்கணித்திட்டெழின்மிகுசஙகிதைபேசி
நசைபெறவொருகாறறறபிததேரம்பனகுசுடர்வேறகரக்கநத
னசைவறுகவுரிமனுககளொவ்வொருகாலறைநதுதற்பித்திடனமுறையே. (௩௪)

கதிர்மனுமுக்காற்கூறிநீரிறைத்துக்காமருமந்திரந்தேவர்
பிதாதலின்மனுவோதுபுகரறுதியாறபிறங்கவொவ்வொருதரந்தற்பித்
ததாதலினிருடிக்கங்குலியிடையான்மக்கட்குக்கனிட்டையினடியா
னுதிர்வில்பூதஙகட்குறுமணிக்கட்டானெனிர்பிதாமாதாஞாதிருவே. (௩௫)

ஆசான்மற்றிவர்க்குத்தற்சனிவிரலங்குட்டநள்ளள்ளொடுமொருகா
னேசாரத்தறபித்திடுவதுமுறையாங்கழசுவாகாநதமந்திரத்திற்
கேசாரத்தேவரிருடியர்தங்கட்கியைதருநமோநதமானுடர்ககு
மாசாராவவுசடநதமாம்பூதமகிழ்ச்சிமீக்கொளும்வவுசட்டால். (௩௬)

பிதிரர்கடமக்குச்சுதாவெனப்புகல்வர்பின்னுமாசமனநன்னியாச
முதிர்தரச்செய்துநகுபிராசாதமொழிநதுமுன்சொற்றமுத்திரையா
லுதிர்தராதமுதம்விநதுவிநொடுககியொண்கதிர்மண்டலத்தமரு
மெதிரிலாப்பரனைப்பணிந்துமூலஞ்சொற்றீகமற்றவனுக்கப்பலனை. (௩௭)

சநதுதற்காலந்தப்பிடிலொருகாறசங்கிதையுரைததிடல்வேண்டுஞ்
சநதியொன்றொழியிற்சாதநூறிரண்டேற்சாற்றியதோரிருநூற்றுற்
சநதிமூனறொழியினதுமூநநூறுரைத்துத்தவிர்ந்திடவேண்டுமன்றுணவைச்
சந்திநாலாவதொழிந்திடிலிரண்டுசதஞ்செபித்திடல்வழக்காமால். (௩௮)

